**2. பழங்காலம் பிரிக்கப்படும் முறை:**
1.கீழ்ப்பழங்காலம் 2. இடைப்பழங்காலம் 3. மேல்பழங்காலம்

**3. ஹோமினின் குறிப்பு**
1. தற்கால மனிதனுக்கு நெருக்கமான தோற்றத்தைக் கொண்டிருந்த மனித மூதாதையர் "ஹோமினின்" என்று அழைக்கப்படுகிறார்கள்.
2. இவர்கள் வாழ்ந்ததற்கான அடையாளங்கள் ஆப்பிரிக்காவில் அதிக அளவு காணப்படுகின்றன.

**4. இடைக்கற்கால பண்பாட்டின் - குறிப்பு**
1. இந்தியாவின் அனைத்துப் பகுதியிலும் இடைக்காலப் பண்பாடு காணப்படுகிறது.
2. காட்டு விலங்குகளை வேட்டையாடுதல், தாவர உணவுகளை சேகரித்தல், மீன் பிடித்தல் போன்றவை இப்பண்பாட்டு மக்களின் முக்கிய தொழில்கள் ஆகும்.
3. நெருப்பின் பயனை அறிந்திருந்தனர். இடம் பெயர்தல் இப்பாண்பாட்டின் முக்கிய பண்பாகும்.

**5. ஹரப்பா நாகரிகத்தின் வெவ்வெறு கட்டங்கள்:**
1. தொடக்ககால ஹரப்பா (பொ.ஆ.மு. 3000 - பொ.ஆ.மு. 2600)
2. முதிர்ச்சியடைந்த ஹரப்பா (பொ.ஆ.மு. 2600 - பொ.ஆ.மு. 1900)
3. பிற்கால ஹரப்பா (பொ.ஆ.மு. 3000 - பொ.ஆ.மு. 2600)

**6. பெருங்குளம் குறிப்பு**
1. இது மொகஞ்சோதாராவில் அமைந்துள்ளது.
2. இது முற்றத்துடன் கூடிய பெரிய குளம் ஆகும்.
3. கழிவு நீர் வடிகால் வசதி, படிக்கட்டுகள், பல அறைகள் இருந்தது .

**7. சிந்து நாகரிகத்தின் வீழ்ச்சிக்கான காரணங்கள்**
1. காலநிலை மாற்றம், மெசபடோமியா உடன் வணிகத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி
2. தொடர் வறட்சி, ஆறுகள் மற்றும் நீர் நிலைகள் மறைவு.
3. படையெடுப்பு, வெள்ளம், ஆறு தன் போக்கை மாற்றிக் கொள்ளுதல்.

8. வேதகால இலக்கியங்கள்

1. ரிக், யஜுர், சாம, அதர்வன வேதங்களாகும்.
2. ரிக் வேதம் மிக பழமையானதாகும். மற்றவை சற்றே பிற்காலத்தை சேர்ந்தவையாகும்.
3. பிராமணங்கள், ஆரண்யங்கள், உபநிடதங்கள் வேதகாலத்தின் இறுதியில் இயற்றப்பட்டது.

9. ஜென்ட் அவஸ்தா:

1. ஜொராஸ்டிர சமயத்தின் புனித நூல்.
2. இந்தோ-ஈரானிய மொழிகள் பேசிய மக்களின் வாழ்க்கை, அவர்களின் சமயம் பற்றி கூறுகிறது.
3. இந்தியாவின் வடக்கு மற்றும் வடமேற்கு பகுதிகளைப் பற்றி குறிப்பிடுகிறது.
4. இந்நூலின் சொற்கள் சமஸ்கிருதச் சொற்களுடன் ஒத்துப் போகிறது.

10. தொடக்க வேத காலத்தில் பெண்களின் நிலை.

1. பெண்கள் சமூகத்தில் மரியாதைக்குரிய இடத்தை வகித்தனர்.
2. பெண்கள் கிராம கூட்டங்களில் கலந்து கொண்டனர்.
3. பலதார முறை, மறுமணம், பதினாறு வயதில் திருமணம் நடைமுறையில் இருந்தது.

11. வேதகால கடவுள்கள்

1. இயற்கையை வழிபட்டனர்.
2. முக்கிய கடவுளான இந்திரன் புரந்தரா என அழைக்கப்பட்டார்.
3. சூரியன், பெண் தெய்வம் உஷா, நீர்கடவுள் வருணா, தாவர கடவுள் சோமாவை வழிபட்டனர்.

12. இந்தியாவின் இரும்புக்காலம்

1. ஓவியம் தீட்டப்பட்ட சாம்பல் நிற மண்பாண்ட பண்பாடோடு தொடங்குகிறது.
2. இவை வட இந்தியாவில் 1000க்கும் மேற்பட்ட இடங்களில் உள்ளது.
3. குடியிருப்புகள் பெரிய அளவில் வளர்ந்தன.
4. தென்னிந்தியாவில் இக்காலம் ஈமச்சின்னங்களுடன கூடிய பெருங்கால பண்பாடாக உள்ளது.

13. நமது ஆய்வுக்குச் சான்றாக உள்ள திரிபீடகங்கள்

1. வினய பீடகம் - பௌத்த சமயத் துறவற விதிகளையும், ஒழுக்க விதிகளையும் பற்றி விரிவாகக் கூறுகிறது.
2. சுத்த பீடகம் - புத்தரின் போதனைகளையும்,
3. அபிதம்ம பீடகம் - பௌத்த தத்துவத்தையும் பற்றி கூறுகிறது.

14. சார்வாகம் குறிப்பு

1. சார்வாகர் என்பவரின் பெயரால் சார்வாகம் என்று அழைக்கப்படுகிறது.
2. சார்வாகம் எனும் சொல் இந்திய பொருள் முதல்வாதத்தைக் குறிக்கிறது.
3. சார்வாகரும், அஜித கேசகம்பளியும் இந்திய பொருள் முதல்வாதத்தை ஒரு முறையான தத்துவ முறையாக உருவாக்கியவர்கள்.

15. மகாவீரருடைய போதனைகள்

1. அஹிம்சை, எளிமையான ஒழுக்கமிக்க வாழ்க்கை.
2. சமண சமயம் வழியுறுத்திய அளவுக்கு எந்த சமயமும் அஹிம்சையை

Padasalai

வழியுறுத்தவில்லை.

3. கடவுளின் இருப்பை மறுத்ததோடு உருவ வழிபாட்டையும் எதிர்த்தார்.

**16. ஜனபதங்களுக்கும் , மகாஜனபதங்களுக்கும் இடையேயான வேறுபாடு**

| ஜனபதம் | மகாஜனபதம் |
| --- | --- |
| 1. இனக்குழு | மிகப் பெரிய பிராந்திய அரசு |
| 2. இனக்குழு தன் காலை பதித்த இடம் | ஒன்றிற்கு மேற்பட்ட ஜனபதங்கள் இணைக்கப்பட்ட பிரதேசம் |
| 3. அரசாங்கம், இறையாண்மை இல்லை | நிலம், மக்கள், அரசாங்கம், இறையாண்மை உண்டு |
| 4. வரி அமைப்பு இல்லை | அரசர் உபரி வேளாண்மை மீது வரி விதித்தார். |

**17. தமிழ்நாட்டின் பௌத்த வரலாற்றில் நாகப்பட்டிணத்தின் முக்கியத்துவம்**

1. சீன அரசரின் வேண்டுகோளுக்கு இணங்க நாகப்பட்டிணத்தில் பௌத்த கோயில் இரண்டாம் நரசிம்மவர்மன் என்ற பல்லவ மன்னனால் கட்டப்பட்டது.
2. சீனத்துறவி வு-கிங் இம்மடத்திற்கு வருகை புரிந்தார்.
3. ஸ்ரீவிஜய அரசன் "மாற விஜயோத்துவங்க வர்மன்" நாகப்பட்டினத்தில் "சுளாமணி வர்ம விஹாரம்" என்ற கோயிலை கட்டினார்.

**18. பிம்பிசாரர் மகதப் பேரரசை விரிவுபடுத்திய விதம்**

1. திருமணஉறவு, போர்கள் மூலம் பேரரசை விரிவுபடுத்தினார்.
2. தனது சகோதரியை கோசல நாட்டு அரசருக்கு மணமுடித்துக் கொடுத்து காசியை வரதட்சணையாக பெற்றார்.
3. லிச்சாவி, மாத்ரா இளவரசிகளை மணந்தார். அங்கத்தின் மீது படையெடுத்து அதனை கைப்பற்றினார்.

**19. மகாபத்ம நந்தர் குறிப்பு**

1.நந்த பேரரசின் முதல் அரசர்.
2.சிசுநாக அரசரை கொன்று அரியணையை கைப்பற்றினார்.
3.தன் திறமையால் நந்த அரசை விரிவுபடுத்தினார்.

**20. மகா அலெக்சாண்டர் பேரரசின் அரியணையை திருப்பித்தர காரணம் :**

1. மகா அலெக்சாண்டர், ஹைடாஸ்பஸ் போரில் சிறைபிடிக்கப்பட்ட போரஸின் கண்ணியத்தால் ஈர்க்கப்பட்டார்.
2. போரசின் கண்ணியத்தால் ஈர்க்கப்பட்ட அலெக்சாண்டர் தனது மேலாதிக்கத்தை ஏற்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் அவரது அரியணையைத் திருப்பி தந்தார்.

**21. ஒரு மையப்படுத்தப்பட்ட அரசின் முக்கிய பண்புகள்**

1. மையப்படுத்தப்பட்ட அரசு என்பது பேரரசு முழுவதும் ஒரே விதமான நிர்வாக அமைப்பை செயல்படுத்துவது என்று பொருள் ஆகும்.
2. ஆனால் அன்று இருந்த தகவல் தொடர்பு மற்றும் போக்குவரத்து வசதிகளை வைத்து பார்க்கும் போது மையப்படுத்தப்படாத நிர்வாக அமைப்புத்தான் இருந்திருக்க வேண்டும் என்று தெரிகிறது.
3. இந்த அதிகார முறையில் கிராமங்கள், நகரங்கள், மாகாணத்தலைநகரங்கள், முக்கிய நகரங்கள் என்ற படிநிலைகளை கொண்டதாக இருந்தது.

**22. மௌரிய அரசு பற்றி ஆய்வுக்கு உதவும் இலக்கிய சான்றுகள்**

1. கௌடில்யர் என்ற சாணக்கியர் எழுதிய அர்த்தசாஸ்திரம்.

2. முத்திராராட்சசம்.
3. பிராமணங்கள் மற்றும் மகாவம்சம்.

**23. அலெக்சாண்டரின் படையெடுப்பு இந்திய வரலாற்றில் திருப்பு முனை**

1. இந்தோ-கிரேக்க பண்பாடு ஒன்றினைய உதவியது.
2. இந்திய ஆட்சியிலும், கலைகளிலும் ஒரு புதிய பாணியை உருவாக்கியது.
3. இதன் மூலம் மேற்குலகிற்கான வணிகப் பெருவழிகள் திறக்கப்பட்டன.

**24. பண்டமாற்று முறை**

1. பொருட்களை உற்பத்தி செய்வதற்கான மூலப்பொருட்கள் அனைத்தும் ஒரே இடத்தில் கிடைப்பதில்லை.
2. விலையுயர்ந்த ஆபரணக் கற்களையும், ஓரளவு மதிப்புள்ள ஆபரண கற்களையும் பண்டமாற்றாகக் கொடுத்து மூலப் பொருட்களை பெற்றனர்.
3. அம் மூலப்பொருட்கள் பொருட்களாக மாற்றப்பட்டு பின் வேறு ஒரு பொருட்களுக்காக பண்டமாற்றம் செய்யப்பட்டது.

**25. மதுரைக் காஞ்சி யில் அறிவது**

1. மதுரைக் காஞ்சி பாண்டிய மன்னர்கள் காலத்தில் எழுதப்பட்ட நூல்.
2. நாளங்காடி, அல்லங்காடி பற்றிய செய்திகளை கூறுகிறது
3. அங்கு விற்கப்படும் கைவினைப் பொருட்களை பற்றி கூறுகிறது.
4. முதுகுடிமி பெரு வழுதி, தலையாலங்காலத்து செரு வென்ற நெடுஞ்செழியனைப் பற்றிய செய்திகளை தருகிறது.

**26. யுவான் சுவாங் காஞ்சிபுரத்தில் கண்டது**

1. வட இந்தியாவிலும் தென் இந்தியாவிலும் புனித தலங்களை பாாவையிட்டார்.
2. காஞ்சிபுரத்தில் ஏராளமான புத்த மடாலயங்கள் காணப்பட்டதாக தன்னுடைய பயண நூலில் குறிப்பிட்டுள்ளார்.

**27. ஆடு கோட்பாட்டுச் சேரலாதனை பற்றி அறிவது**

1. சேரல் இரும்பொறையே ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் என அழைக்கப்படுகிறார்.
2. நெடுஞ்சேரலாதனின் மகனான இவர் தன் பெயரில் நாணயங்களை வெளியிட்டார்.
3. இவர் வெற்றியை (ஆடு) தனது கொள்கையாக (கோட்பாடு) கொண்டு பல வெற்றிகள்
4. எனவே இவர் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என அழைக்கப்படுகிறார்.

**28. இந்தியாவை மத்திய தரைக்கடல் உலகத்தோடும் மத்திய இந்தியாவோடும், சீனாவோடும் இணைப்பதற்கு இட்டுச் சென்றது**

1. நறுமணப் பொருட்கள் மற்றும் துணிவகைகளின் தேவை.
2. ரோமப் பேரரசின் தேவைகள்.
3. சீனப்பட்டும், நூலும் இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்டு பின் மீண்டும் அவை ரோமுக்கு அனுப்பப்பட்டன.

**29. சந்திரகுப்தருக்கும் ,செலுகஸ் நிகேடருக்கும் இடையே நிகழ்ந்த போரின் விளைவு**

1. செலுகஸ் நிகேடர் தான் வெற்றி கொண்டிருந்த நிலப்பரப்பை திருப்பி ஒப்படைத்தார்.
2. அதற்கு பதிலாக 500 யானைகளை பெற்றுக் கொண்டார்.
3. கிரேக்க தூதர் மெகஸ்தனிஸ் பாடலிபுத்திரத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

**30. "யவன" என்ற சொல்லின் பொருள்**

1. இந்தியா முழுவதும் கிரேக்கர்களை குறிப்பிடப் பயன்படுத்திய சொல்லே "யவன" என்பதாகும்.

2. இச் சொல் பாரசீக மொழியில் கிரேக்கர்களை குறிக்கும் "யயுனா" என்ற சொல்லிருந்து பெறப்பட்டதாகும்.
3. பொனீசியர்களைக் கூட இந்தியர்கள் யவனர் என்றே அழைத்தனர்.

31. நாட்டின் வடமேற்கில் ஒரு பெரிய அரசை மினாண்டர் ஆட்சி செய்தார் :
1. வடமேற்கில் ஆட்சி செய்த மினாண்டர் தன் பெயரில் நாணயங்களை வெளியிட்டார்.
2. இவரது நாணயங்கள் காபூல், சிந்து, மேற்கு உத்திரபிரதேசம் போன்ற பரந்த பகுதியில் கிடைத்துள்ளது.
3. இதில் இருந்து இவரது ஆட்சி பரப்பை அறிந்து கொள்ளலாம்

32. சத்ரப்கள்
1. சாகர்களின் ஆட்சிகாலத்தில் மாகாண ஆளுநர்கள் "சத்ரப்கள்" என அழைக்கப்பட்டனர்.
2. பின்னர் சத்ரப்கள் பலரும் தங்களை சுதந்திர அரசாக அறிவித்துக் கொணடு தங்களுக்கு மஹாசத்ரப்கள் என்று பட்டப் பெயரை சூட்டிக் கொண்டனர்.
3. சாக சத்ரப்களில் புகழ் பெற்றவர் "ருத்ரதாமன்" என்பவராவார் .

33. பின்வருவன குறித்து ஒரு பட்டியலை தயாரிக்கவும்.
1. இந்தியாவிலிருந்து ரோமுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்கள்: மிளகு, முத்துக்கள், தந்தம், பட்டுத்துணி, விளாமிச்சை வேர், தைலம், தாளிசபத்திரி, என்ற நறுமணப் பொருள்கள். நீலக்கல், கோமேதகம், வைரம், ஆமை ஓடு, மற்றும் பருத்தி துணிகள்.
2. ரோமிலிருந்து இந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்பட்ட பொருள்கள்: நாணயங்கள், புஷ்பராகக் கல், அஞ்சணம், பவளம், கச்சா கண்ணாடி, தாமிரம், தகரம், ஈயம், மதுவகைகள்.

34. பெருகிவரும் வணிகத்திற்கும் வியாபாரத்துக்குமான வணிகர்களின் பங்களிப்பு
1. சமுதாயத்தில் முக்கியமானோரான வணிகர்கள் கடல் கடந்து வணிகத்தில் ஈடுபட்டனர்.
2. வெளிநாடுகளுடன் தரைவழியாகவும வாணிபத்தில் ஈடுபட்டனர்.
3. விரிவடைந்து வரும் வணிக நடவடிக்கைகளுக்கும் பொருளாதார உற்பத்தியின் அடித்தளத்திற்கும் முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தியது.

35. ஸ்கந்தகுப்தர் வரையிலான குப்த அரசர்களின் பட்டியலை கால வரிசை.

| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீகுப்தர் | பொ.ஆ.மு. 240 - 280 |
| 2. | கடோத்கஜர் | பொ.ஆ.மு. 280 - 319 |
| 3. | முதலாம் சந்திரகுப்தர் | பொ.ஆ.மு. 319 - 335 |
| 4 . | சமுத்திரகுப்தர் | பொ.ஆ.மு. 335 - 370 |
| 5 . | ராம குப்தர் | பொ.ஆ.மு. 370 - 375 |
| 6 . | இரண்டாம் சந்திரகுப்தர் | பொ.ஆ.மு. 375 - 415 |
| 7 . | முதலாம் குமாரகுப்தர் | பொ.ஆ.மு. 415 - 455 |
| 8 . | ஸ்கந்தகுப்தர் | பொ.ஆ.மு. 455 - 467 |

36.ஹூணர் குறிப்பு
1. ஹூணர்கள் காஸ்பியன் கடல் அருகே வாழ்ந்த பழங்குடி இனக்குழுவினர்.
2. குப்த, ரோமானியப் பேரரசின் வீழ்ச்சிக்கு காரணமானவர்கள்
3. இவர்களுடைய தலைவன் "அட்டில்லா" ஆவான்.

37.மதுரா குறித்து பாஹியான் குறிப்பிடுபவை.
1. மதுராவில் மக்கள் அதிகமாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தனர்.
2. குடும்பத்தை பதிய வேண்டிய அவசியம் இல்லை.
3. அரச நிலத்தில் வேளாண்மை செய்பவர் மட்டுமே தானியத்தில் ஒரு பகுதியை தர

வேண்டியிருந்தது.

4. குற்றவாளிக்கு சூழ்நிலையைப் பொருத்து அபராதம் மிதமாகவோ, கடுமையாகவோ விதிக்கப்பட்டது.

**38. பௌத்த அறிஞர்கள் அவர்களது படைப்புகள்**

1. "ஆர்ய தேவர்" "ஆர்ய அசங்கர்" ஆகியோர் குப்தர்காலத்தில் வாழ்ந்த பௌத்த அறிஞர்கள் ஆவர்.
2. சமுத்திர குப்தர் ஆட்சி காலத்தில் தர்க்க அறிவியல் சார்ந்த முதலாவது முழுமையான பௌத்தநூல் "வசுபந்துவால்" இயற்றப்பட்டது.
3. வசுபந்துவின் சீடரான திக் நாகரும் பல அறிய நூல்களை எழுதியுள்ளார்.

**39. அலகாபாத் பாறைக் கல்வெட்டு**

1. சமுத்திர குப்தரின் ஆட்சி, அவரது ஆளுமை, சாதனைகள் ஆகியவற்றை விளக்குகிறது.
2. இதனை பொறித்தவர் ஹரிசேனர்.
3. சமஸ்கிருத மொழியில உள்ளது.

**40. ஹர்ஷப்போரரசு குறித்து அறிய உதவும் கல்வெட்டுச் சான்றுகள்**

1. இரண்டாம் புலிகேசியின் வாதாபி கல்வெட்டு,
2. மதுபனி செப்புப்பட்டயக் குறிப்புகள்,
3. சோன்பட்டு செம்பு முத்திரைக் குறிப்புகள்,
4. பன்ஸ்கெரா செப்புப்பட்டயங்கள்
5. நாளந்தா களிமண் முத்திரைக் குறிப்புகள்.

**41. ஹர்சர் எவ்வாறு கன்னோசியின் மன்னரானார்**

1. பிரபாகவர்த்தனர் தனது மகள் ராஜ்யஸ்ரீயை கன்னோசி மன்னரான கிரகவர்மனுக்கு மனமுடித்துக் கொடுத்தார்.
2. வங்காள மன்னன் கன்னோசி மன்னரை கொன்றார்.
3. எனவே ஹர்சர் படையெடுத்துச் சென்று வங்க மன்னனை கொன்றார்.
4. மன்னர் இல்லாத கன்னோசிக்கு அதன் அமைச்சர் அரியணை ஏற அழைப்பு விடுக்க அதன் அரசரானார்.

**42. முதலாம் மகிபாலரின் சிறப்புகள்**

1. பாலர் வீழ்சியை தற்காலிகமாக தடுத்து நிறுத்தியவர்.
2. இவர் காலத்தில பாலர் வம்சத்தின் புகழ் ஒரளவு மீட்கப்பட்டது.
3. இராஜேந்திரச் சோழனை கங்கையை கடக்க முடியாதபடி தடுத்த பெருமை முதலாம் மஹிபாலரையே சேரும்.

**43. தக்கோலப் போரின் முக்கியத்துவம்**

1. தக்கோலப் போரில் ராஷ்டிரகூட அரசர் மூன்றாம் கிருஷ்ணரால் ராஜாத்திய சோழன் தோற்கடிக்கப்படல்.
2. தெற்கே இராமேஸ்வரம் வரை சென்று வெற்றித் தூணை நிறுவினார்.
3. இதனால் தக்காணம் முழுவதும் ராஷ்டிரகூடர் ஆதிக்கத்தை மூன்றாம் கிருஷ்ணர் நிறுவினார்.

**44. பால வம்ச ஆட்சியின் போது நாளந்தா பல்கலைக்கழகத்தின் முக்கியத்துவம்**

1. பௌத்த மதக்கொள்கையை போதிக்கும் முதன்மையான மையமாக திகழ்ந்தது.
2. மன்னர் தேவபாலர், சுமத்ரா மன்னர் பாலபுத்ர தேவன் கட்டிய மடாலயத்தை பராமரிக்க ஐந்து கிராமங்களை நன்கொடையாக வழங்கினார்.
3. பால மன்னர்கள் ஆதரவால் இந்தியாவின் கிழக்கு பகுதியில் பௌத்த மதம் புகழ்

பெற நாளந்தா பல்கலைக்கழகம் உதவியது.

45. திருபுறம்பியம் போர்
1. பொ. ஆ. 885 ல் நடைபெற்றது.
2. பல்லவ மன்னன் அபராஜிதவர்மனுக்கும் பாண்டிய மன்னன் வரகுணபாண்டியனுக்கும் இடையே நடைபெற்றது.
3. சோழ மன்னனர் ஆதித்தன், கங்க மன்னன் பிருதிவிபதி பல்லவ மன்னருடன் சேர்ந்து பாண்டியரை எதிர்த்தனர். போரில் பல்லவ சோழ கங்க கூட்டுப்படை வெற்றி பெற்றது.
4. இப்போரில் பல்லவர் வெற்றி பெற்றாலும் பல்லவர் மற்றும் பாண்டிய படைகள் பெருத்த சேதமடைந்தது. பின்னர் சில வருடம் கழித்து நடைபெற்ற போரில் சோழர்கள் பல்லவரை வெற்றி கொண்டு பல்லவ ஆட்சியை முடிவுக்கு கொண்டுவந்தனர்.

46. ஐஹொல் கல்வெட்டு .
1. கர்நாடகாவில் உள்ள மேகுடி சமணக் கோவிலில் உள்ளது.
2. இக்கோவிலின் கிழக்கு சுவரில் 19 வரிகளில் சமஸ்கிருதத்தில் இக் கல்வெட்டு உள்ளது.
3. எழுதியவர் ரவிகீர்த்தி.
4. இரண்டாம் புலிகேசியின் வெற்றிகளை கூறுகிறது.

47. சாளுக்கிய காலத்தில் கன்னடத்தில் எழுதப்பட்ட இரண்டு முக்கியமான இலக்கியங்கள்.
1. கவிராஜ மார்க்கம், பம்ப பாரதம், விக்ரமாஜன விஷயம்.

48. அனைவரையம் உள்ளடக்கிய மதமாக வைணவத்தை மாற்றிய ராமானுஜரின் பங்களிப்பு.
1. பிராமணர் அல்லாதோரை இணைத்துக் கொண்டார்.
2. வருணாசிர அமைப்புக்கு வெளியில் இருந்தோரிடம் பக்திக் கோட்பாட்டினை பரப்பினார்.
3. அனைவரையும் உள்ளடக்கிய மதமாக வைணவத்தை மாற்றி கோவில்களில் நுழைவதற்கு வழி வகை செய்தார்.

49. கஜினியின் அரசராக மாமுது பதவி ஏற்றல்
1. கஜினியின் அரசர் சபுத்தஜினின் மூத்த மகன் மாமுது, இளைய மகன் இஸ்மாயில் ஆவர்
2. சபுத்தஜின் ஆப்கானிய அரசை வென்று அங்கு தன் மூத்த மகன் மாமுதுவை ஆட்சியாளராக்கினார்.
3. சபுத்தஜின் இறந்த போது இளைய மகன் இஸ்மாயில் கஜினியை கைப்பற்றினார்.
4. மாமுது "குரசனில்" இருந்து வந்து இஸ்மாயிலை தோற்கடித்து கஜினியின் அரசரானார்.

50. கஜினி மாமுது ஆதரித்த அறிஞர்கள் .
1. கிதாப் இஹிந்த் எழுதிய அல்பெருனி, வரலாற்று அறிஞர் உத்பி, கல்வியாளர் அன்சாரி, பைகாஹி போன்றோர்.

51. துருக்கிய படையெடுப்பின் போது வட இந்தியாவில் ஆட்சியிலிருந்த ராஜபுத்திர வம்சாவளிகள்
1. சௌகான், கடவாலா, பரமர், சந்தேரிகள்

52. நாற்பதின்மர் அமைப்பு
1. டெல்லி சுல்தானியத்தின் அடிமை வம்சத்தில் நாற்பதின்மர் அமைப்பு நிர்வாகத்தில் அரசருக்கு அடுத்த நிலையில் இருந்தது.
2. நாட்டை விரிவுபடுத்துவதிலும், இந்து புரட்சியாளர்களை அடக்குவதில் சுல்தானுக்கு

உதவின.

3. இராணுவத்திலும் நிர்வாகத்திலும் முக்கிய பொறுப்பு.
4. அரச வாரிசு குழப்பத்தின் போது மிக முக்கிய பங்கு.
5. பால்பன் ஆட்சியின் போது இவர்கள் அதிகாரம் முடிவுக்கு வந்தது.

**53. இஸ்லாமிய இசைஞர்கள் அறிமுகப்படுத்திய இசைக்கருவிகள்**

1. ரபாப் மற்றும் ஸாரங்கி

**54. சோழர்காலத்து இலக்கிய வடிவ வரலாற்று நூல்கள்**

கலிங்கத்துப் பரணி, குலோத்துங்கச்சோழன் பிள்ளைத் தமிழ், மூவருலா ஆகியவையாகும்.

**55. சோழமண்டலம் மும்முடிச்சோழமண்டலம் என அழைக்கப்பட காரணம்**

1. முதலாம் இராஜேந்திரன் தாம் கைப்பற்றிய பகுதிகளை இணைத்து சோழ மண்டலங்களாக்கினார்.
2. இதுபோல இலங்கையில் கைப்பற்றிய பகுதிகளையும் மண்டலங்களாக்கினார்.
3. இப்பகுதிகள் முதல் சோழ இலங்கேஸ்வரம் என அழைக்கப்பட்டது.
4. பின்னாளில் இப்பகுதிகள் மும்முடிச்சோழ மண்டலம் என அழைக்கப்பட்டது.

**56. தமிழ்ச்சங்கம் .**

1. சங்கம் என்ற சொல் கலைக்கழகம் என்ற பொருளில் பயன்படுத்தப்பட்டது.
2. முதல் சங்கம் தென் மதுரையிலும், இடைச் சங்கம் கபாடபுரத்திலும், கடைச்சங்கம் மதுரையிலும் இருந்தது.

**57. பாண்டிய அரசின் மீதான மாலிக்காபூரின் படையெடுப்பின் விளைவுகள்**

1. மதுரை சொக்கநாதர் கோவில் இடிக்கப்பட்டு விலைமதிப்பில்லா செல்வங்கள் கொள்ளையடிக்கப்பட்டது,
2. மதுரையில் டில்லி சுல்தானியத்துக்கு கட்டுப்பட்ட ஓர் அரசு 1335 வரை இயங்கியது.
3. பாண்டிய அரசின் ஆட்சிப்பொறுப்பு பாண்டிய அரச குடும்ப உறுப்பினர்களால் தனித்தனியாக பிரித்துக் கொள்ளப்பட்டது.

**58. விஜய நகரைப் பற்றி அறிய உதவும் தொல்லியல் சான்றுகள்**

1. கோவில்கள், அரண்மனைகள், கோட்டைகள், மசூதிகள் மற்றும் நாணயச் சான்றுகள்.

**59. விஜய நகர அரசு யாரல் எற்படுத்தப்பட்டது எதனால் அப்பெயர் வந்தது.**

1. 1336 ல் ஹரிஹரர் மற்றம் புக்கரால்.
2. துங்கபத்திரா நதிக்கரையில் அமைந்துள்ள விஜயநகரை (ஹம்பி) தலைநகராக கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. அதனால் அப்பெயர் வந்தது.

**60. பாமினி விஜயநகர அரசுகளுக்கிடையே பகைமை எற்பட்டதற்கான மூன்று முக்கியமான காரணங்கள்**

1. இடங்களை கைப்பற்றுதல்.
2. கப்பம் வசூலித்தல்.
3. குதிரை வணிகத்தின் மேலான கட்டுப்பாடு.

**61. தராப் .**

1. அலாவுதீன் அசன் பாமன்ஷா நிர்வாக வசதிக்காக தன் ஆட்சிப்பகுதியை நான்கு பிரிவுகளாக (மாகாணங்களாக) பிரித்தார்.
2. அப்பகுதிகள் தராப்ஸ் எனப்பட்டன.

MFK KIEMHSS

Padasalai

62. முதலாம் முகம்மது
1. பாமன்ஷாவிற்கு பின் ஆட்சிக்கு வந்த பாமினி அரசர்.
2. சிறந்த அரசு முறை நிர்வாகத்தை நடத்தினார். மராட்டியர்களுக்கு முன்னுதாரணமாக திகழ்ந்தார். எட்டு அமைச்சர்கள் கொண்ட குழுவை ஏற்படுத்தினார்.

63. பக்தி இயக்கத்திற்கு இராமானுஜர் ஆற்றிய சேவைகள்
1. சமய சமத்துவத்திற்கு பெரும் ஆதரவாளராக திகழ்ந்தார்.
2. தத்துவ சித்தாந்தத்தை இயக்கமாக மறுவடிவம் பெறச் செய்தார்.

64. பக்தி இயக்கத்தில் ரவிதாஸின் பங்கு
1. கவிஞர், துறவி, தோல்பதனிடும் குடும்பத்திலிருந்து வந்தவர்
2. சாதி, சமூக பிரிவுகள் பாலின வேறுபாட்டை எதிர்த்தார். சமத்துவத்திற்கு ஆதரவளித்தார்.

65. இராமானந்தரின் போதனைகள்
1. இராமானுஜரின் கொள்கையை ஏற்று கடவுளின் முன் அனைவரும் சமம் என போதித்தார்.
2. சாதி முறையை நிராகரித்தார்
3. வைணவத்தில் முற்போக்கான மாற்றங்களை எற்படுத்தினார்.

66. பண்பாட்டு பாரம்பரியத்தின் சிறப்பிற்கு காரணமான மீராபாயின் பாடல்களும் கவிதைகளும் எவ்வாறு அமைந்தன
1. அன்பே கடவுள் என்ற பஜனை பாடல்களை பாடினார்.
2. அனைவருக்கும் (சாதி, பாலினம், அந்தஸ்து வித்தியாசம் இன்றி) கடவுள் கிருஷ்ணரின் அருள் உண்டு என்றார்.
3. இவரது இசைபாடல்கள் வளமான பண்பாட்டு மரபாகும்.
4. ஒவ்வொரு இல்லத்திலும் இவரது பாடல் ஒலித்தது.

67. இந்து துறவிகள் இஸ்லாமின் மீது கொண்டிருந்த இரண்டு வெவ்வேறு அனுகுமுறைகள்
1. பன்முகத் தன்மை, புதியசவால்களை எதிர்கொள்ளக்கூடியதாக இருந்தது.
2. இந்து மதத்தில் சீர்திருத்தம் செய்து ஒருமைப்பாட்டை வளர்க்கும் இயக்கமாக்கி அதன் தலைவர்களாகவும் மாறினர்.

68. பாபர் இந்தியாவின் மீது படையெடுக்க தூண்டியது எது
1. மத்திய ஆசியாவில் எற்பட்ட மேலாதிக்க போட்டி வாய்ப்பு தேடி இந்தியா செல்ல வைத்தது.
2. பட்டு பாதை வழியாக இந்தியாவுடன் மத்திய ஆசியா செய்த வர்த்தகம்
3. தைமூர் செய்ததை மீண்டும் செய்ய வேண்டும் என்ற கனவு
4. தௌலத்கான் லோடி, ராணாசங்கா அழைப்பு .

69. அக்பர் பைராம்கானை எவ்வாறு கையாண்டார்
1. அக்பர் தனது முதல் நான்காண்டு ஆட்சியில் பைராம் கான் உதவியுடன் பேரரசை விரிவுபடுத்த பைராம்கானை பயன்படுத்திக் கொண்டார்.
2. கருத்து வேறுபாடு மற்றும் சூழ்நிலை காரணமாக பைராம்கானை பணிநீக்கம் செய்தார்.
3. மெக்கா செல்ல ஆணையிட்டார். செல்லும் வழியில் ஆப்கானியன் ஒருவனால் கொல்லப்பட்டார்.

70. சிறு குறிப்பு வரைக. அ) வில்லியம் ஹாக்கின்ஸ் ஆ) சர் தாமஸ் ரோ
1. ஜஹாங்கீர் ஆட்சிகாலத்தில் வில்லியம் ஹாக்கின்ஸ் மற்றும் சர் தாமஸ் ரோ என்ற

இரு ஆங்கிலேயர்கள் வருகை தந்தனர்.
2. இந்தியாவில் ஆங்கிலேய வணிக குடியேற்றம் ஒன்றை நிறுவுவதற்கு பேரரசின் அனுமதியை வில்லியம் ஹாக்கின்ஸால் பெற முடிய வில்லை.
3. இங்கிலாந்து அரசர் முதலாம் ஜேம்ஸ்ஸின் தூதுவரான சர்தாமஸ் ரோ சூரத் நகரில் ஒரு வணிக குடியேற்றம் அமைக்க அனுமதியை பெற்றார்.

**71. "ஜஹாங்கீரின் அரியணைக்குப் பின்னால் அதிகார மையமாகக் செயல்பட்டவர் நூர்ஜஹான்"**
1. ஜஹாங்கீர் அரச விசயங்களில் அதிக நாட்டம் காட்டாததால் நூர்ஜஹான் அரியனையின் பின்னே உண்மையான அதிகாரம் கொண்டவராய் திகழ்ந்தார்.
2. இளவரசர் குர்ரம் மற்றும் தளபதி மகபத்கானை ஓரம் கட்டினார்.
3. ஜஹாங்கீர் இறந்த உடன் தனது மருமகன் ஷாரியாரை அரியணை ஏற்ற முயன்றார்.

**72. முகலாயக் கட்டடக் கலையின் மறுவடிவம் மற்றும் வடிவமைப்பு .**
1. தாஜ்மஹால்.
2. இவ்வளாகம் தலைவாயில், தோட்டம், மசூதி, கல்லறைமாடம் மற்றும் நான்கு கோபுரம் (மினார்) உடையது.

**73. ஔரங்கசீப்பிற்கு எதிராக வடபகுதியில் மூண்ட மூன்று எழுச்சிகள்:**
1. 1649ல் மதுராவில் நடைபெற்ற ஜாட்டுகளின் கிளர்ச்சி
2. ஹரியானாவின் சத்னாமியர் கிளர்ச்சி
3. சீக்கியர் கலகம்.

**74. சிறு குறிப்பு வரைக- i) சீக்கிய மதம் ii) சூபியிஸம்**

**சீக்கிய மதம்:**
1. ஒரு கடவுள் கோட்பாட்டை முன்னெடுத்த இயக்கம்.
2. புனித நூல் குரு கிரந்த சாகிப்
3. கடவுள் ஒருவரே என குருநானக் நம்பினார்.

**சூபியிசம்:**
1. இஸ்லாமின் உள்ளுணர்வு சார்ந்த இறைநிலை இணைப்பினை முன்வைக்கும் ஒரு மதக் கோட்பாடு.
2. ஈரானில் உதயமானது இந்தியாவில் செழித்து வளர்ந்தது.

**75. மக்களிடையே பக்தி இயக்கத் துறவிகளின் புகழ்**
1. கவிஞராகவும் இறையடியாராகவும் இருந்து பிராந்திய மொழியில் பக்தியை பரப்பினர்.
2. சடங்குகளையும் சாதி முறையையும் சாடினர். சமூகத்தின் அனைத்து தரப்பிலிருந்தும் தோன்றினர்.

**76. முகலாயர் காலத்தில் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சி**
1. குமரகுருபரர் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், நீதிநெறி விளக்கம் ஆகிய இலக்கியங்களை இயற்றினார்
2. தாயுமானவர் சமரச சன்மார்க்கம் என்ற பக்தி பாடலை இயற்றினார்.

**77. "முகலாயர் ஓவியத்துறையில் உலகலாவிய அங்கீகாரம் பெற்றிருந்தனர்"**
1. இவர்களது நுண் ஓவியங்கள் உலகத்தின் பல அருங்காட்சியங்களில் முக்கிய இடம் வகிக்கின்றது.
2. பாரசீக மொழியில் எழுதப்பட்ட மகாபாரதத்திலும் அய்னி அக்பரியிலும் பல ஓவியங்கள் இடம் பெற்றுள்ளன.
3. முகலாய நுண் ஓவியங்கள் டச்சு ஓவியர் ரெம்பிராண்டை கவர்ந்தது.

MFK, KJEMHSS

78. சிவாஜிக்கும் ,அப்சல்கானுக்கும் இடையே நடைபெற்ற பூசல்கள்
1. பீஜப்பூர் சுல்தான் மராத்தியர் ஆபத்து நீங்கியதால் சிவாஜியை அடக்க அப்சல்கானை அனுப்பினார்.
2. அப்சல்கானால் சிவாஜியை மலைப்பகுதிகளில் வீழ்த்த முடியவில்லை
3. சூழ்ச்சி செய்து சிவாஜியை வீழ்த்த நினைத்து அதில் அப்சல்கான் தோல்வி அடைந்தார்.

79. புரந்தர் உடன்படிக்கையின் ஷரத்துக்கள்
1. சிவாஜி தான் கைப்பற்றிய கோட்டைகளை வைத்துக் கொள்ள அனுமதி
2. பீஜப்பூரை கைப்பற்ற முகலாயர்களுக்கு சிவாஜி மான்சப்தாராக உதவிசெய்ய ஒப்புதல்.

80 . தாராபாய்
1. சிவாஜியின் மகன் ராஜாராமின் மனைவி
2 .கோல்ஹாபுரை தலைநகராக கொண்டு மாற்று அரசாங்கம் நடத்தினார்.

81. சிறு குறிப்பு வரைக. அ) சௌத் ஆ) சர்தேஷ்முகி
1. சௌத், சர்தேஷ்முகி என்ற வரிகள் மராட்டியர் அல்லாத அதாவது முகலாய மற்றும் தக்காண சுல்தான் பகுதிகளில் மராட்டியர்களால் வசூலிக்கப்பட்ட வரிகள் ஆகும்.
2. சவுத் என்பது மராட்டிய படையெடுப்பிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்ள அம்மக்கள் செலுத்திய வரி (நிலவரியில் நான்கில் ஒரு பங்கு) ஆகும்.
3. சர்தேஷ் முக் (பிரதம தளபதி) என்ற தகுதியின் காரணமாக பெறப்பட்டது.

82. பேசின் உடன்படிக்கையின் ஷரத்துக்கள்
1. 1802 ல் கையெழுத்தான துணைப்படைத் திட்ட ஒப்பந்தம் ஆகும்.
2. அதிக வருமானம் ஈட்டக்கூடிய பகுதிகள் ஆங்கிலேயரிடம் கொடுக்கப்பட்டது.
3. மராட்டியர் ஆங்கிலேயரின் மேலாண்மையை ஏற்றது. மராட்டிய பேரரசு கனவு தகர்ந்தது.

83. மராத்தியரின் இராணுவ வலிமைக்கும் கடைசி கட்டமாக இருந்தது
1. உத்திர் போர்
2. 1760 ல் சதாசிவராவ் தலைமையில் சென்ற இராணுவம் உத்திர் போரில் எதிரிகளை வீழ்த்தியது.
3. இதுவே மராத்தியரின் இராணுவ வலிமையை நிருபித்த கடைசி போரானது.

84. ஆங்கிலேயருக்கும் பேஷ்வாவுக்கும் இடையே 1817 இல் கையெழுத்தான பூனா உடன்படிக்கை
1. மராத்திய கூட்டமைப்பின் தலைமையிலிருந்து பேஷ்வா நீக்கம்
2. கொங்கனப் பகுதியை ஆங்கிலேயர் பெற்றனர்.
3. பரோடா ஆட்சியாளர் கெய்க்வாடின் சுதந்திரம் அங்கிகரிக்கப்பட்டது.

85. சரஸ்வதி மஹால் நூலகம் - குறிப்பு
1. நாயக்க மன்னர்களால் கட்டப்பட்டது.
2. இரண்டாம் சரபோஜி மன்னரால் செறிவூட்டப்பட்டது.
3. பல அறிய நூல்கள், ஆவணங்கள் இரண்டாம் சரபோஜியால் வளம் சேர்க்கப்பட்டது.

86. இரண்டாம் சரபோஜி சமய பரப்புகுழு மற்றும் காலனி ஆதிக்க அரசுக்கு முன்னோடி
1. தஞ்சாவூரில் கிறிஸ்தவர் அல்லாத உள்ளுர் குழந்தைகளுக்காக நவீன பொதுப் பள்ளிகளை முதன் முதலாக தொடங்கினார்.
2. ஆதரவற்றவர்கள் மற்றும் ஏழை மாணவர்களுக்காக தஞ்சை மற்றும் இதர இடங்களில் இலவச தொடக்க மற்றும் உயர் கல்வி நிலையங்களை நிறுவி நிர்வகித்தார்.

3. நவீன கல்வி முறைக்காக "நவ வித்யா" என்ற முறையை மேற்படி பள்ளிகளில் அறிமுகம் செய்தார்.

**87. கனோஜி ஆங்கிரே**

1. இந்தியாவின் மேற்கு கடற்கரைப் பகுதியில் அதிக அதிகாரம் படைத்த கடற்படை தளபதியாக இருந்தவர்.
2. உள் நாட்டு போரில் தாராபாய்க்கு ஆதரவு நிலைபாட்டை எடுத்திருந்தார்.
3. அவரிடம் பேஷ்வா பாலாஜி விஸ்வநாத் ஐரோப்பிய ஆபத்து பற்றி எடுத்துரைத்து மன்னர் சாஹுவிடம் தமக்குள்ள விசுவாசத்தை உறுதிசெய்தார் .

**88. நாயக்க அரசுகள்- நிறுவப்படகாரணங்கள்**

1. விஜயநகர பேரரசு ஆட்சியில் தமிழகப் பகுதியில் மதுரை, தஞ்சாவூர், செஞ்சி ஆகிய இடங்களில் நிறுவப்பட்ட அரசுகள் நாயக்க அரசுகள் என்றழைக்கப்பட்டது.
2. நாயக்க அரசுகள் நிறுவப்பட்டதன் நோக்கமே அரசுக்குத் தேவைப்படும் நிதி ஆதாரங்களையும் பெருக்குவதும், மனித ஆற்றலை (இராணுவ வீரர்களை) திரட்டுவதுமேயாகும்.

**89. ஆங்கிலேயர் மதராஸில் குடியேற்றம் நிறுவுதல்**

1. தமர்லா வேங்கடாத்திரி நாயக்கர் என்பவரிடமிருந்து பெற்ற நிலத்தில் 1639ல் புனித ஜார்ஜ் கோட்டையை கட்டினர்.
2. சந்திரகிரியின் அரசர் கோட்டை கட்டிக் கொள்ள அனுமதி வழங்கினார்.
3. 1684 ல் ஒரு மாகாணமாக உருவானது. 1693 இல் சென்னையை சுற்றியுள்ள மூன்று கிராமங்களை வாங்கினர்.
4. 1702 ல் மேலும் ஐந்து கிராமங்களை வாங்கினர்.

**90. கைவினைப் பொருள்கள் உற்பத்தி**

1. கைவினைப் பொருளுற்பத்தி நகர்புறம் மற்றும் கிராமப்புறம் ஆகிய இரண்டிலும் நடைபெற்றது.
2. உலோக வேலைகள் நகரத்திலும், நெசவுத் தொழில் கிராமங்களில் மேற்கொள்ளப்பட்டது
3. வேதியியல் பொருட்களை பயன்படுத்தி நிரந்தர வண்ணங்களை உருவாக்குவதில் நிபுணத்துவம் பெற்றிருந்தனர்.
4. சோழ மண்டலம் "கலம்காரி" எனப்படும் வண்ணம் பூசப்பட்ட துணிவகைக்குப் பெயர் பெற்றது.
5. இவ்வகை துணிகளில் அலங்காரம் மற்றும் வடிவங்கள் முதலில் வரையப்பட்டு பின்னர் சாயம் ஏற்றப்பட்டது.
6. தென் கிழக்காசியாவில் குறிப்பாக இந்தோனேசியத் தீவு மக்களால் இத்துணிகள் விரும்பி வாங்கப்பட்டது.

**91. "சராப்" மற்றும் "உண்டியல்" குறிப்பு**

**சராப்:**

1. சராப் எனப்பட்டோர் நாணயங்களின் தூய்மை நிலையை பரிசோதித்தனர். அவற்றின் மதிப்பை அன்றைய அளவில் மதிப்பிட்டனர். பணமாகவும் மாற்றித் தந்தனர்.
2. இவர்கள் உள்ளூர் வங்கியாளர்களாக செயல்பட்டனர்.

**உண்டியல்:**

1. வணிகர்கள் பணத்தை ஓரிடம் விட்டு மற்றொரு இடத்திற்குப் பணத்தை ரொக்கமாக அனுப்புவதற்குப் பதிலாக பணமாற்ற முறிகளை (Bills of Exchange) வழங்கினர்.
2. "சராப்" களால் இவ்வகை உண்டிகள் (Bills of Exchange) பல்வேறு இடங்களில் குறிப்பிட்ட தள்ளுபடியோடு பணமாக மாற்றிக் கொடுக்கப்பட்டது.

92. இந்தியாவின் முதல் போர்த்துகீசிய ஆளுநர் , அறிமுகப்படுத்திய கொள்கைகள்
1. இந்தியாவின் முதல் போர்த்துகீசிய ஆளுநர் பிரான்ஸிஸ்கோ டி அல்மெய்டா ஆவார்.
2. குடியிருப்புகளின் எண்ணிக்கையை அதிகரிக்காமல் கப்பல்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி கடற்படையை வலுபடுத்தும் "நில நீர்க் கொள்கையை" அவர் அறிமுகப்படுத்தினார்.

93. "கார்டஸ் (Cartaz) முறை"
1. கடற்கொள்ளையில் இருந்து வணிகர்களை பாதுகாப்பதாக போர்த்துகீசியர் கூறிக் கொண்டனர்.
2. இதற்காக வணிகர்களிடம் கார்டஸ் (cartaz) என்ற பெயரில் பணம் பறித்தனர்.
3. கார்ட்ஸ் என்ற பெயரில் போர்த்துக்கிசியர் வழங்கும் பாதுகாப்பை மற்றவர்கள் ஏற்றுக் கொள்ள கட்டாயப்படுத்தினர். இல்லையெனில் வன்முறை மூலம் வணிகத்திற்கு இடையூறு செய்யப் போவதாக பயமுறுத்தினர்.
4. கடற்கொள்ளை இடையூறுகளில் பலவற்றை செய்தவர்கள் போர்த்துகீசிய கொள்ளையரே.

94. டச்சுக்காரர்களின் காலனியாதிக்கக் கோட்டைகள் , குடியேற்றங்கள் பெயர்கள்.
1. டச்சுக்காரர்களின் குடியேற்றங்கள் : மசூலிப்பட்டிணம், பழவேற்காடு
2. டச்சுக்கரார்களின் காலனியாதிக்க கோட்டைகள்: நாகப்பட்டிணம், நாகர்கோவில், புன்னைக்காயல், பரங்கிப்பேட்டை கடலூர், தேவனாம்பட்டிணம் .

95. "வணிக நிறுவனம்" (factory) - 16ம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட ஐரோப்பிய வணிக நிறுவனங்கள்
1. நிறுவனம் (factory) என்பது அயல் நாடுகளிலுள்ள தங்கள் முதலாளிகளுக்காக வணிக முகவர்கள் தங்கியிருந்து வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இடமாகும்.
2. 16 ம் நூற்றாண்டில் நிறுவப்பட்ட ஐரோப்பிய நிறுவனங்கள்:
1. பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனி 2. டச்சு கிழக்கிந்தியக் கம்பெனி
3. டேனியக் கிழக்கிந்தியக் கம்பெனி 4. ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி

96. முதலாம் கர்நாடகப் போருக்கான கராணங்கள்
1. ஐரோப்பாவில் நடை பெற்று ஆஸ்திரிய வாரிசுரிமைப் போர்.
2. இந்தியாவில் பிரான்சு மற்றும் ஆங்கிலேயரிடையே ஏற்பட்ட வணிகப் போட்டி.

97. 1765 இல் கையெழுத்தான உடன்படிக்கையின் பெயர் - அதன் கூறுகள்
1. 1765ல் கையெழுத்தான உடன்படிக்கை அலகாபாத் உடன்படிக்கை ஆகும்.
2. வணிகக் குழு வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய பகுதிகளின் நிலவரி வசூலிக்கும் உரிமை பெற்றது.
3. பர்த்தவான், மிட்னாபூர், சிட்டகாங் மாவட்டங்களோடு கல்கத்தாவின் மீதான இறையாண்மையையும் பெற்றனர்.
4. ஆங்கிலேயர் வங்காளத்தின் ஆட்சியாளராக மாறினர்.

98. 1773 ஆம் ஆண்டு ஒழுங்குமுறைச் சட்டம்
1. வங்காளத்தின் ஆளுநராக இருந்த வாரன் ஹேஸ்டிங்ஸ் கவர்னர் ஜெனரலானார். (தலைமை ஆளுநரானார்).
2. கவர்னர் ஜெனரல் இயக்குநர் குழு மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்.
3. வணிக குழுவின் வரவு செலவு கணக்கு பிரிட்டிஷ் கருவூலத்திற்கு தெரியப்படுத்த வேண்டும்.
4. ஆளுநர், தலைமைத்தளபதி மற்றும் இரு ஆலோசகர்களைக் கொண்ட குழு வருவாய் வாரியமாக செயல்பட்டது.

**99. ஆளுநர் தாமஸ் மன்றோ**

1. 1820 ஆம் ஆண்டு சென்னை மாகாணத்திற்கு ஆளுநராக பொறுப்பேற்றார்.
2. 1822 ம் ஆண்டு சென்னையில் இரயத்துவாரி முறையை அறிமுகப்படுத்தினார்.
3. ஆளுநராக இருந்த போது கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தார்.

**100. மாகாணம் மற்றும் மாநிலம் வேறுபடுத்துக:**

1. கிழக்கிந்திய கம்பெனியாரின் தலைமை நிர்வாக அதிகாரியின் அலுவலகம் அமையப் பெற்ற இடம் மாகாணம் ஆகும்.
2. அவ்வகையில் சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகியவை மாகாணங்கள் ஆகும்
3. பின்னர் இம் மாகாணங்களை நிர்வகிப்பதில் சிரமங்கள் ஏற்பட்டதால் மத்திய மாநிலம், ஒருங்கிணைந்த மாநிலம், போன்ற பிராந்தியங்கள் உருவாக்கப்பட்டன.

**101. இந்தியக் குடிமைப் பணிக்கு காரன்வாலிசின் பங்களிப்பு**

1. காரன் வாலிஸின் தலையாய பங்களிப்பு குடிமைப் பணிகளின் சீர்திருத்தமே ஆகும்.
2. அவர் திறமை வாய்ந்தவர்களையும், நேர்மையானவர்களையும் பணியமர்த்த வழி வகை செய்தார்.
3. கம்பெனி அதிகாரிகளுக்கு குறைந்த சம்பளம் வழங்கிவிட்டு அவர்களை தனியாக வியாபாரம் செய்ய அனுமதித்த பழைய நடைமுறைக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.
4. கல்கத்தாவில் 1800 ல் ஒரு கல்லூரி வணிககுழுவின் குடிமைப் பணியாளர்களுக்காக துவங்கப்பட்டது.

**102. ஆங்கிலேய ஆட்சியின் கீழ் நீர்பாசன முறையின் வளர்ச்சி**

1. பாசன வசதி ஏற்படுத்திக் கொடுப்பதை பிரிட்டிஷ் அரசு புறக்கணித்தது.
2. ஆர்தர் காட்டன் என்ற பொறியியல் அலுவலர் ஒருவரின் தனிபட்ட ஆர்வத்தால் சிற்சில பாசன வேலைகள் நடந்தேறின.
3. கொள்ளிடத்தின் குறுக்கே 1836 இல் அணையைக் கட்டினார்.
4. பிரிட்டிஷ் அரசின் நேரடிக் கட்டுபாட்டுக்குள் இந்தியா செல்வதற்கு முன்பாக பாசன வசதி மேம்பாட்டில் நடைபெற்ற பணிகள்

அ. வட இந்தியாவில் 1830 ல் யமுனா கால்வாய்.

ஆ. 1857 ல் கங்கைக் கால்வாயை 450 மைல்கள் வரை நீட்டித்த பணி.

இ. 1856 இல் பஞ்சாப் பகுதியில் அமைந்த பாரி இடைத்துறைக் கால்வாய் தோண்டும் பணி.

**103. டாக்காவின் மஸ்லின் துணி - குறிப்பு வரைக.**

1. வங்காளத்தில் முன்பு விளைந்த ஒரு வகை பட்டு போன்ற பருத்தியிலிருந்து துணி நெய்வார்கள்.
2. இந்த மெல்லிய துணி டாக்கா மஸ்லின் என்றழைக்கப்பட்டது.
3. ஆங்கிலேயர் ஆட்சியில் இந்திய நெசவுக்கு ஆதரவளிக்காததால் அதை பார்ப்பதே அரிதாகிவிட்டது.
4. இந்தியாவின் மான்செஸ்டர் என்றழைக்கப்பட்ட நகரம் வறுமை சூழ்ந்து நெசவாளர்கள் பசியால் செத்து மடிந்தார்கள்.

**104. "செல்வ வளங்கள் நாட்டை விட்டு வெளியேறியது இந்தியாவை ஏழ்மையாக்கியது"- குறிப்பு.**

1. இந்தியாவிலிருந்து பெருந்தொகை உள்நாட்டின் செலவுக் கட்டணம் என்ற வகையில் இங்கிலாந்து போய் சேர்ந்தது.
2. கம்பெனியின் பங்குதாரர்களுக்கு வழங்கப்பட்ட இலாபம், ஐரோப்பிய அதிகாரிகள், ஐரோப்பிய வியாபாரிகள், தோட்ட முதலாளிகள் இராணுவம், குடிமைப்பணி அலுவலர்கள் போன்றோரின் சம்பளம் மற்றும் ஓய்வூதிய தொகை.
3. இந்தியாவில் நேர்ந்த போர்களுக்கான செலவுகள், போர் நடத்துவதற்க்காக வங்கியில்

பெற்ற கடனுக்கான வட்டி மற்றும் இருப்புப்பாதை அமைக்க ஏற்பட்ட செலவுகள் .

4. விக்டோரியா மகாராணி ஆட்சிகாலத்தின் கடைசி பத்து ஆண்டுகளில் (1891 — 1901) மொத்த வருவாயில் 24 சதவிதம் 159 மில்லியன் பவுண்ட்கள் இங்கிலாந்திற்கு அனுப்பப்பட்டது.

**105. திப்பு சுல்தான் மீது சுமத்தப்பட்ட ஸ்ரீரங்கப்பட்டண உடன்படிக்கையின் (1792) அவமானகரமான விதிமுறைகள்**

1. திப்பு அவருடைய ஆட்சிப்பகுதிகளில் பாதி இடங்களை ஆங்கிலேயருக்குக் கொடுக்க வேண்டும்.
2. போர் இழப்பீடாக மூன்று கோடி ரூபாய் அளிக்க வேண்டும். அதுவரை அவருடைய மகன்களில் இருவரைப் பிணைக் கைதிகளாக அனுப்பி வைக்க வேண்டும்.
3. திப்பு குடகுப் பகுதியை இழந்தார். திப்புவின் அதிகாரம் பெருமளவுக்கு குறைக்கப்பட்டது.

**106. வராகன் (பக்கோடா)**

1. விஜயநகரத்தில் அறிமுகமான தங்க நாணயம் பகோடா எனப்பட்டது.
2. ஐரோப்பிய வணிகர்கள் இந்தியாவுக்கு வந்த காலகட்டத்தில் இப்பணம் செல்வாக்கு பெற்று விளங்கியது.
3. திப்பு சுல்தான் ஆட்சியில் மைசூரில் ஒரு பகோடா மூன்றரை ரூபாய்க்குச் சமமாகக் கொள்ளப்பட்டது.

**107. கொங்குப் பகுதியில் தீரன் சின்னமலையின் கிளர்ச்சிகள்**

1. சின்னமலை கோயம்புத்தூரில் இருந்த ஆங்கிலேயரின் கோட்டை மீது தாக்குதல் நடத்தினார்.
2. 1801 ல் காவிரிக் கரையில் நடந்த போர்.
3. 1802 ஆம் ஆண்டு ஓடநிலையில் நடந்த போர்.
4. 1804 ஆம் ஆண்டு நடந்த அரச்சலூர் போர்.
5. இறுதிப் போர் 1805 ல் நடைபெற்றது. இப்போரில் சின்னமலை அவருடைய சமையல்காரரின் துரோகத்தால் சிவகரி கோட்டையில் தூக்கிலிடப்பட்டார்.

**108. "சாயில் ரகப்"**

1. சாயில் ரகப் என்னுமிடத்தில் பீகார் பழங்குடி முண்டா சமூகத்தை சார்ந்த பெண்கள் கண்மூடித்தனமாக படுகொலை செய்யப்பட்டனர்.
2. இவர்களது நிலத்தை ஆங்கிலேயரின் அட்சியில் பொது நில உரிமை மூலம் ஜாகீர்தார்கள், பெரும் விவசாயிகள் வட்டிக்கடைக்காரர்கள் பறித்துக் கொண்டனர்.
3. தங்கள் நிலங்கைள மீட்க முண்டாக்கள் பிர்சா முண்டா என்பவரது தலைமையில் ஆங்கிலேயருக்கு எதிராக கிளர்ச்சி செய்தனர்.
4. சாயில் ரகப் படுகொலைக்குப் பிறகும் முண்டா பெண்கள் ஆங்கிலேயருக்கு எதிராக பிர்சா முண்டா தலைமையில் போராடினர்.

**109. கான்பூர் படுகொலை**

1. நானாசாகிப் கான்பூர் கிளர்ச்சிக்கு தலைமை தாங்கினார்.
2. 125 ஆங்கிலேயர்கள் (பெண்கள் குழந்தைகள் உட்பட) கொல்லப்பட்டனர்.
3. அவர்களது உடல்கள் ஒரு கிணற்றுக்குள் வீசப்பட்டது.
4. இந்நிகழ்ச்சி கான்பூர் படுகொலை என அழைக்கப்பட்டது.

**110. சமூக சீர்திருத்தத்திற்கு இராஜா ராம் மோகன் ராயின் பங்களிப்பு**

1. பல தெய்வ வழிபாடு, உருவ வழிபாடு போன்றவற்றை எதிர்த்தார்.
2. சாதி முறை, மூட நம்பிக்கை, குழந்தை திருமணம், பர்தா முறை, உடன்கட்டை ஏறுதல் ஆகியவற்றை சாடினார்.
3. கைம்பெண் மறுமணத்தை ஆதரித்தார்.

111. சமூக நீதிக்கு ஜோதிபாபூலேயின் பங்கு
1. சத்ய ஜோதக் சமாஜம் என்ற அமைப்பை எற்படுத்தினார்.
2. மேல் ஜாதியினரின் அடக்குமுறைக்கு எதிராக பிராமணர் அல்லாத மக்களின் உணர்வுகளை தட்டி எழுப்பி அவர்களுக்காக போராடினார்.
3. கல்வி கற்பதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

112. சுத்தி (சுத்திகரிப்பு) இயக்கம் - ஒரு மீட்டெடுப்பு இயக்கம்
1. இந்துக்கள் அல்லாதாரையும் இந்துக்களாக மாற்றினர்.
2. ஆங்கிலோ வேதப்பள்ளிகள், கல்லூரிகள் நிறுவப்பட்டது.
3. "வேதங்களை நோக்கித் திரும்புக" என சுவாமி தயானந்தர் அழைப்பு விடுத்தது.

113. ஸ்ரீ நாராயணகுருவின் தர்ம பரிபாலன இயக்கத்தின் பங்களிப்பு.
1. ஈழ சமுதாய மக்களுக்காக ஸ்ரீ நாராயனகுரு தர்ம பரிபாலன இயக்கம் மூலம் போராடினார்.
2. பொதுப் பள்ளி, அரசு பணிகளில் சேர, பொது சாலையை பயன்படுத்த, கோவில்களுக்குள் நுழைய, அரசியலில் பிரதிநிதித்துவம் பெற இவ்வியக்கம் பாடுபட்டது.
3. கேரள சமூகத்தை ஜனநாயகப்படுத்த தலைவர்களை இவ்வியக்கம் தந்தது.

114. இராமலிங்க அடிகளார்
1. சிதம்பரத்தில் பிறந்த இராமலிங்க அடிகள் "சத்ய தர்ம சாலையை" வடலூரில் நிறுவினார்.
2. சாதி சமய வேறுபாடின்றி அனைவருக்கும் சமபந்தி விருந்தளித்தார்.
3. மக்களை கவர்ந்த, நெஞ்சை உருக்கும் இவரது பாடல்கள் "திருவருட்பா" என்ற பெயரில் இவரது சீடர்களால் வெளியிடப்பட்டுள்ளது.

## மூன்று மதிப்பெண் விடைகள்

1. அச்சூலியன் , சோகானியன் பயன்பாடுகளின் கருவிச் செயல்பாடுகள்

**அச்சூலியன் மரபு:**
1. கைக்கோடாரி வகையைச் சேர்ந்த கருவிகளை பயன்படுத்தினர்.
2. கோடாரிகளையும், வெட்டுக்கத்தியையும் பெருமளவு பயன்படுத்தினர்.

**சோகனியன் மரபு:**
1. கூழாங்கற்களை செதுக்கி கருவிகளை உருவாக்கி பயன்படுத்தினர்
2. துண்டாக்கும் கற்கருவிகளையும், அது சார்ந்த கற்கருவிகளையும் பயன்படுத்தினர்.

2. இந்தியாவின் இடைப்பழங்கற்காலத்தின் முக்கியக் கூறுகள்
1. ஹோமோ எரக்டஸ் என இம்மக்கள் அழைக்கப்பட்டனர்.
2. திறந்த வெளியிலும், குகைகளிலும் வசித்தனர்
3. சிறிய கருவிகள் கொண்டு வேட்டையாடினர். உணவு சேகரிப்பவராகவும் இருந்தனர்.

3. இடைக்கற்கால நாகரிகம் நிலவிய இடங்கள்
1. பயிஸ்ரா (பீகார்), சனகனகல்லு (ஆந்திரா), கிப்பனஹல்லி (கர்நாடகா), சராய்நகர் (உ.பி), மும்பை கடற்கரைப் பகுதிகள், தூத்துக்குடி மாவட்ட தேரிக் குன்றுகள்.

4. இடைக்கற்காலப் பயன்பாடுகளின் குறிப்பிடத்தக்க பண்புகள்
1. இக்கால மக்கள் நெருப்பை பயன்படுத்தி சமைத்தனர்.
2. வேட்டையாடுதல், உணவு சேகரித்தல், மீன்பிடித்தல் முக்கிய தொழில்.

3. குகைகளிலும், பாறைக்குடைவுகளிலும் தங்கினர். இறந்தவர்களை புதைத்தனர்.
4. விலங்குகளை பழக்கப்படுத்தினர்.

5. சிந்து நாகரிகம் நிலவிய பகுதியின் எல்லைகள்
1. மேற்கே சட்காஜென்டோ (மேற்கு பாகிஸ்தான் ஈரான் எல்லை)
2. கிழக்கே ஆலம்கிர்பூர் (உத்திரபிரதேசம்)
3. வடக்கே ஷார்டுகை (ஆப்கானிஸ்தான்)
4. தெற்கே தைமாபாத் (மகாராஷ்டிரா)

6. ஹரப்பா பொருளாதாரத்துக்குப் பங்களித்த கைவினைத் தயாரிப்பு
1. மணிகள், அணிகலன்கள், சங்கு வளையல்கள்,
2. செம்பு, வெண்கலம், தங்கம் போன்ற உலோகங்களும் கைவினைத் தயாரிப்பில் பன்படுத்தப்பட்டன.
3. கைவினை தயாரிப்புகள் மெசபடோமியோவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.
4. சங்கு பீங்கான் களிமண் போன்றவற்றிலும் அணிகலன்கள் செய்தனர்.

7. ஹரப்பா மக்களின் நம்பிக்கைகள்
1. இயற்கையை வழிபட்டனர்.
2. அரச மர வழிபாடு இதது.
3. தாய் தெய்வ வழிபாடு.
4. இறந்தவர்களை புதைத்தனர்.

8. தென் இந்தியாவின் செம்புக்காலப் பண்பாடுகள்
1. முழுமை பெறாத செம்புக்காலப் பண்பாடு நிலவியது.
2. துளையிட்ட பாண்டங்கள், கெண்டிகள் பயன்படுத்தினர்.
3. கல்லிலான கருவிகளையும் பயன்படுத்தினர்.
4. வேளாண்மையும், கால்நடையும் வாழ்வாதாரமாக இருந்தது.

9. தொடக்ககால வேதகாலத்தின் புவியியல் பரவல்கள்
1.கிழக்கு ஆப்கானிஸ்தான் 2. பாகிஸ்தான் 3. பஞ்சாப் 4. மேற்கு உத்திரபிரதேசம்

10. ரிக் வேதகால சமூகப்பிரிவுகள்
1. போர் புரிபவர்கள், மதகுருமார்கள், சாதாரண மக்கள், எனும் பிரிவுகள் தோன்றின.
2. பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள்,
3. ரிக்வேதகாலத்தின் கடைசிபகுதியில் சூத்திரர்கள் என்ற பிரிவு தோன்றியது.

11. மேய்ச்சல் சமூகத்தின் இயல்புகள்.
1. கால்நடை மேய்ச்சல் முக்கிய இடம் வகித்தது. கால்நடை சொத்தாக கருதப்பட்டது.
2. வேளாண்மை முக்கிய தொழில்.
3. மதகுருமார்களுக்கு பசுக்கள் நன்கொடையாக வழங்கப்பட்டது.
4. நிலத்தை பொருத்தவரை தனியுடைமை இல்லை.

12. ரிக்வேதகால சமூகத்திற்கும், பின் வேதகால சமூகத்திற்கும் இடையேயான வேறுபாடு

| | தொடக்க வேதகால சமூகம் | பின் வேத கால சமூகம் |
|---|---|---|
| 1. | வர்ண முறை தோன்றின | வர்ண முறையில் மாற்றங்கள் ஏற்பட்டது |
| 2. | சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகள் தோன்ற ஆரம்பித்தது | பிராமணர், சத்திரியர் அதிகாரம் பெருகியது. |
| 3. | தொடக்க கால சமூகம் சமத்துவ தன்மை கொண்டதாக விளங்கியது | கோத்திரம் எனும் கோட்பாடு பின் வேத காலத்தில் தோன்றியது. |

13. காட்டைத் திருத்தியதில் இரும்பின் பங்களிப்பு
    1. இரும்பு கோடாரி காடுகளை திருத்த பயன்பட்டது.
    2. இரும்பு கொழுமுனை வேளாண் உற்பத்தியை பெருக்கியது.
    3. வேளாண் உபரி உருவாவதில் இரும்புத் தொழில் நுட்பம் உதவியது.

14. கங்கைச் சமவெளியில் நிகழ்ந்த நகரங்களின் தோற்றத்துக்கான காரணங்கள்
    1. வேளாண் உபரி 2. கைத்தொழில் வளர்ச்சி 3. வணிக வளர்ச்சி
    4. மக்கள் தொகை பெருக்கம்

15. இரண்டாம் நகரமயமாக்கத்துக்குப் பிறகு வளர்ச்சி பெற்ற நகரங்கள்
    1. ராஜகிருகம், சிரவஸ்தி, கௌசாம்பி, சம்பா ___ அரசியல் நகரங்கள்
    2. உஜ்ஜயினி, தட்சசீலம் ....... வணிக மையம்
    3. வைசாலி ___ புனிதத் தலம்

16. பொ.ஆ.மு. ஐந்தாம், ஆறாம் நூற்றாண்டைச் சேர்ந்த அவைதீகச் சிந்தனையாளர்கள்
    1. புத்தர் 2. மகாவீரர் 3. ஆஜித கேசகம்பளி 4. மக்காளி கோசலர்
    5. புராண கஸ்யபர் 6. பகுத கச்சாயணர்

17. தமிழ்நாட்டில் சமணம் செலுத்திய செல்வாக்கு
    1. மூன்றாம் நூற்றாண்டில் மதுரையைச் சுற்றி சமணம் பரவியது.
    2. நாலடியார், பழமொழி, சீவகசிந்தாமணி, நீலகேசி ஆகியவை தமிழின் முக்கிய சமண நூல்கள்
    3. மதுரையில் வஜ்ரநந்தி என்பவரால் திராவிட சமண சங்கம் நிறவப்பட்டது.
    4. காஞ்சியில் திருப்பத்திக்குன்றம் சமணக் கோவில் அழகிய மேற் கூரை ஓவியங்களுடன் உள்ளது.

18. தொல்லியல் கண்டுபிடிப்புகள் மூலம் தெரியவரும் நகரப் பண்புகள்
    1. நகரத்தின் அமைப்பு, கட்டுமானம்,
    2. பயன்படுத்திய உலோகம், கருவிகள்
    3. கையாண்ட தொழில்நுட்பம்,
    4. வாழ்வியல் மற்றும் பண்பாடு

19. கங்கைச் சமவெளியின் முடியாட்சிகளின் அம்சங்கள்
    1. சிறு இனக்குழுக்கள்(நாடுகள்) வெல்லப்பட்டு பெரும் பேரரசுகள் உருவாகின.
    2. சக்ரவர்த்தி அல்லது எக்ராட் என்ற உயர் பதவிகளால் ஆளப்பட்டன.
    3. காசி முதலில் பலம் வாய்ந்ததாக இருந்தது. பின்னர் மகதம் பலம் வாய்ந்ததாக மாறியது.

20. இந்தியாவில் மகா அலெக்சாண்டரின் படையெடுப்பின் தாக்கங்கள்
    1. கிரேக்க மாகாணங்கள் மேற்குபகுதியில் அமைய வழி வகுத்தது
    2. மேற்குலகிற்கான வணிக பெருவழிகள் உருவாகியது.
    3. கிரேக்க வணிகர்கள், கைவினைஞர்கள் இந்தியா வர வழிவகுத்தது.
    4. அலெக்சாந்தர் மரணத்தால் எற்பட்ட வெற்றிடத்தில் மௌரிய பேரரசு அமைய வழி வகுத்தது.

21. அசோகரின் கலிங்கப் படையெடுப்பு
    1. மகதத்திலிருந்து கலிங்கம் பிரிந்ததினால் இப்போர் நடைபெற்றது
    2. அசோகர் ஆட்சியின் எட்டாவது ஆண்டில் இப்போர் நடைபெற்றது.
    3. போரின் அழிவு அசோகரது மனமாற்றத்திற்கு வழிவகுத்தது. பௌத்த மதம் தழுவினார்.

22. மௌரியர் காலத்தில் பரந்த அளவில் நடந்த ஆடைவணிகம்
1. வேளாண்மைக்கு அடுத்து பருத்தி நெசவுத் தொழில் முக்கிய இடம் பெற்றது.
2. சாதாரண முரட்டு ரகம் முதல் மெல்லியரகம் வரை பருத்தி துணிகள் உற்பத்தி செய்யப்பட்டன.
3. காசி, வங்கம், மதுரை போன்ற இடங்கள் சிறப்பான துணி உற்பத்தி மையமாக திகழ்ந்தன.

23. இந்தியா மற்றும் மேற்கு, மத்திய ஆசியா இடையில் வணிகம் செய்யப்பட்ட பொருட்கள்
1. இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும், சீனா, இலங்கை போன்ற இடங்களிலிருந்து துணி, கம்பளி, பட்டு, வாசனை மரக்கட்டை, விலங்குகளின் தோல், நவரத்னக் கற்கள் போன்ற பொருள்கள் கொண்டு வரப்பட்டு வாணிபம் நடைபெற்றது.
2. சாயம், தந்தம், ஆமை ஓடு, முத்து, வாசனை திரவியம் போன்றவை எகிப்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.
3. கிரேக்க சான்றுகள், கிரேக்க மாகாணங்கள் வழியாக நடைபெற்ற வணிக தொடர்பை உறுதிபடுத்துகின்றன.

24. சங்க காலத்தில் தமிழ் நிலத்தின் ஐந்து திணைகள்
குறிஞ்சி ........ மலையும் மலைசார்ந்த இடமும்
முல்லை ........ காடும் காடு சார்ந்த இடமும்
மருதம் ........ வயலும் வயல் சார்ந்த இடமும்
நெய்தல் ........ கடலும் கடல் சார்ந்த இடமும்
பாலை ........ மணலும் மணல் சார்ந்த பகுதி

25. சோழ அரசர்களில் தலைசிறந்தவன் கரிகாலன்
1. இளஞ்செட்சென்னியின் மகன். சங்க கால சோழ மன்னர்களில் தலைசிறந்தவன்.
2. காவிரியில் கல்லணை கட்டினான்
3. வெண்ணி போரில் சேரரையும் பாண்டியரையும் மற்றும் பதினொரு வேளிரையும் தோற்கடித்தான்.
4. காடை வெட்டி நாடாக்கினான். பட்டிணப்பாலை இவனது புகழை பாடுகிறது.

26. கௌதமி புத்திர சதகர்னியின் சாதனைகள்
1. சாதவாகண அரசர்களில் தலைசிறந்தவன்
2. சாக அரசர் நாகபாணாவை வென்று அவனது நாணயத்தில் தன் முத்திரையை பதித்தான்
3. இவனது தாயார் கௌதம பாலஸ்ரீ தனது கல்வெட்டில் சாகர், யவணர், பகல்வர்களை வென்றதாக இவனது வெற்றியை பொறித்துள்ளார்.
4. அஸ்வமேதயாகம் நடத்தினார்.

27. கிழார் - வேளிர் இருவருக்குமுள்ள வேறுபாடுகள்

| கிழார் | வேளிர் |
|---|---|
| 1.சிறிய பகுதியின் தலைவர் | வளமான காட்டுப்பகுதிளை தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர். |
| 2. நாடு என்று அறியப்பட்ட நிர்வாகப் பகுதியின் தலைவர் | குறுநில மன்னர்களாக நிர்வாகம் புரிந்தனர் |
| 3. குறிப்பிட்ட இடங்களில் வாழும் பழங்குடிச் சமூகத் தலைவர். | படை வலிமை பெற்ற குறு நில மன்னர்கள் |

28. டெமெட்ரியஸுடைய நாணயங்களின் சிறப்புகள்
1. நேர்த்தி மிக்க நாணயம்
2. நாணயத்தின் ஒரு பக்கத்தில் அரசரின் உருவமும், பெயரும் பொறிக்கப்பட்டிருக்கும்

3. அரசர்கள் பல விதமான தலைக்கவசங்களோடு இருப்பது தனிச்சிறப்பு
4. தனி முக மற்றும் உடல் கூறுகளையும், தோற்றத்தையும் காட்டுகிறது.

**29. மினான்டர்**
1. இந்தோ கிரேக்க அரசர்களில் மிகவும் புகழ் வாய்ந்தவர்.
2. பாஞ்சால மற்றும் மதுரா அரசர்களுடன் சேர்ந்து கங்கை பகுதியை தாக்கினார்.
3. கங்க அரசன் காரவேலரால் கூட இவரை தடுத்து நிறுத்த முடியவில்லை.
4. பாடலிபுத்திரத்தை தாக்கினார். ஆனால் அதை தக்க வைக்க முடியவில்லை.

**30. முற்பட்ட கால ரோமானிய நாணயங்கள் கோயம்பத்துார் , ஈரோடு, சேலம், கரூர் மாவட்டங்களில் கிடைக்க காரணங்கள்**
1. மேற்கு கடற்கரையை கப்பல்கள் மூலம் வந்தடைந்த ரோமானியர்கள் நிலவழியாக தமிழகம் வந்தனர்.
2. ஈரோட்டுக்கு அருகே சென்னி மலையில் இரும்பு உற்பத்தி செய்யப்பட்டு ரோமுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.
3. ரோமாபுரிக்கு ஈரோட்டில் இருந்து கோமேதகம் எற்றுமதி செய்யப்பட்டது.
4. இதனால் தான் ரோமானிய நாணயங்கள் இங்கு அதிகம் கிடைக்கிறது.

**31.இரண்டு வணிகச் சுற்றுகளின் மையமாக முசிறி இருந்தது**
1. சங்கப் பாடல்களின் படி முசிறி இரண்டு வணிகச் சுற்றுகளின் நகரமாக இருந்தது.
2. உள் நாட்டிலிருந்து அரிசியை ஏற்றி வந்த படகுகள் திரும்பும் போது மீன்களை ஏற்றிச் சென்றன.
3. உள் நாட்டிலிருந்து சந்தைக்கு கொண்டு வந்த கரு மிளகு மூட்டைகள் கப்பல்களில் தங்கத்திற்கு மாற்றாக (பண்டமாற்று முறையில்) ஏற்றப்பட்டன.

**32. பரிமாற்றத்துக்கான ஒரு ஊடகமாகப் பணத்தின் முக்கியத்துவம்**
1. நகர அங்காடிகளில் பணம் பயன்படுத்தப்பட்டதை பண்டைய இலக்கியங்கள் உணர்த்துகின்றன.
2. பல்வேறு இடங்களில் கண்டெடுக்கப்பட்ட ரோமானிய நாணயங்கள் இக்கூற்றை மெய்பிக்கின்றன.
3. வட இந்தியாவில் கண்டெடுக்கப்பட்டுள்ள இந்தோ-கிரேக்க நாணயங்கள் பணப் பயன்பாட்டை நமக்கு கூறும் சிறந்த சான்றாகும்.

**33. கிரேக்கருடனான இந்தியத் தொடர்பின் விளைவான பண்பாட்டுத் தாக்கத்தின் சிறப்புகள்**
1. மௌரியப் பேரரசின் நிர்வாக அமைப்பு கிரேக்க நிர்வாக அமைப்பை ஒத்திருந்தது.
2. பாடலிபுத்திர நினைவு சின்னங்களில் கிரேக்க பண்பாட்டு தாக்கம் தெரிகிறது.
3. மேற்கு இந்தியாவில் தோன்றிய இந்தோ கிரேக்க அரசுகள் மாறுபட்ட பண்பாட்டின் தாக்கத்தை ஏற்படுத்தியது.
4. தனித்துவம் மிக்க கலைச்சிந்தனையையும் போக்கையும் இந்தியாவில் ஏற்படுத்தியது.

**34. குப்தப் பேரரசின் நிர்வாகப் பிரிவுகள்**
1. நாடு பல பகுதிகளாக பிரிக்கப்பட்டிருந்தது.
2. புக்தி எனப்பட்ட மாநிலத்தை உபாரிகா என்ற அதிகாரி நிர்வகித்தார்
3. விஷ்யா எனப்பட்ட மாவட்டம் விஷ்யபதி என்ற அதிகாரி நிர்வகித்தார்.
4. கிராமம் கிராமிகாவால் நிர்வகிக்கப்பட்டது.
5. இவை தவிர பூமி, பதகா, பீடா ஆகிய வேறு விதமான நிர்வாக அலகுகளும் இருந்தன.

**35. விக்கிரமசீலா பல்கலைக்கழகம்**
1. பாலர் வம்சத்து தர்மபாலர் விக்ரமசீலா என்ற பௌத்த மடாலயத்தை நிறுவினார்.

2. பௌத்த கொள்கைகளையும் பண்பாட்டையும் போதித்தது.
3. பீகாரில் பகல்பூர் மாவட்டத்தில் உள்ளது.
4. பின்னாளில் விக்ரமசீலா பல்கலைக்கழகமாக உருவெடுத்தது.
5. அதிஷா, சரகர், திலோபா போன்ற அறிஞர்கள் கல்வியை போதித்தனர்.

**36. குப்தர் காலத்தில் சமண இலக்கியம் வளர்ந்தது - குறிப்பு.**

1. குப்தர் காலத்தில் சமண மத நூல்கள் முதலில் பிராகிருத மொழியிலும் பின்னர் சமஸ்கிருதத்திலும் எழுதப்பட்டன.
2. சமண மத கண்ணோட்டத்தில் இந்து புராணங்கள் எழுதப்பட்டன. விமலா என்பவர் சமண இராமாயாணத்தை எழுதினார்.
3. சித்தசேண திவாகரா சமணர்களிடையே தர்க்க சாஸ்திரத்திற்கு அடித்தளமிட்டார்.

**37. குப்தர் காலத்தில் அறிவியல் வளர்ச்சி**

1. பாதரசம், இரும்பு பயன்பாடு குறித்து வராகமிகிரரின் குறிப்பு குப்தர்களின் வேதியியல் அறிவை எடுத்துக் கூறுகிறது.
2. நவனிதம் என்ற மருத்துவநூல் மருந்து தயாரிக்கும் முறை பற்றி கூறுகிறது.
3. "ஸ்த்யாயுர்வேதா" எனும் நூல் கால்நடைகளுக்கான மருத்துவ நூலகும்.

**38. குப்த பேரரசின் வீழ்ச்சிக்கு மூன்று முக்கிய காரணங்கள்**

1. ஸ்கந்தகுப்தர் காலத்தில் ஏற்பட்ட ஹுணர் படையெடுப்பு
2. பிற்கால குப்தர்கள் பௌத்தம் கடைபிடித்தது பெரும் விளைவுகளை ஏற்படுத்தியது.
3. சிற்றரசுகளின் எழுச்சி

**39. ஹர்சருக்கும் சீனாவுக்கும் இடையே நிலவிய உறவு**

1. ஹர்சர் சீனாவுடன் நேசமான உறவு வைத்திருந்தார்.
2. சீன அரசர் " டாய் சுங் " இரண்டு முறை ஹர்சரது அமைச்சரவைக்கு தூதுக்குழுவை அனுப்பினார்.
3. இரண்டாவது தூதுக்குழு வந்த போது ஹர்சர் இறந்திருந்தார். அடுத்த வந்த திறமையற்ற மன்னர் கைது செய்யப்பட்டு சீனா கொண்டு செல்லப்பட்டார்.

**40. ஹர்சருடைய குற்றவியல் நீதித்துறையின் முக்கியத்துவம்**

1.ஹர்சரது சட்டங்கள் மிகக் கடுமையானதாக இருந்தது.
2. குற்றங்களை விசாரித்து நீதி வழங்க மிமாம்சகர்கள் என்ற அதிகாரி இருந்தார்.
3. நாடு கடத்தப்படுவது வழக்கமான தண்டனையாய் இருந்தது.
4. அரசருக்கு எதிராக சதி செய்தால் ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது.

**41. எல்லோரா மற்றும் எலிபெண்டாவின் நினைவுச்சின்னங்கள்**

1. மகாராஷ்டிரா மாநிலத்தில் அமைந்துள்ள எல்லோரா மற்றும் எலிபெண்டா குடைவரைக் கோவில்கள் ராஷ்டிரகூடர்களின் சிற்பக்கலைக்கு எடுத்துக்காட்டாகும்.
2. எல்லோரா குடைவரைக் கோயில் இந்து சமண பௌத்த சின்னங்களுக்கான கலைநுட்பத்தைக் கொண்டுள்ளது.
3. எலிபெண்டாவின் பிரதானகோவிலில் மகேஷ்மூர்த்தியின் மூன்று முகங்கள் கொண்ட 25அடி உயரமுள்ள மார்பளவுச் சிலை சிறப்பானதாகும்.

**42. ராஷ்டிரகூடர்கள் கன்னட இலக்கியத்திற்கு ஆற்றிய பங்களிப்பு**

1. முதலாம் அமோகவர்ஷர் "கவிராஜமங்கலம்" எனும் கன்னட நூலை இயற்றினார்.
2. ஜீனசேனர் சமணர்களின் ஆதிபுராணத்தை எழுதினார்.
3. மூன்றாம் கிருஷ்ணர் கன்னட இலக்கியத்தின் மூன்று ரத்தினங்களாக போற்றப்படும் பொன்னா, பம்பா, ரன்னா ஆகியோரை ஆதரித்தார்.

43. ராஷ்டிரகூடர்கள் சமண மதத்திற்கு அளித்த ஆதரவு
1. முதலாம் அமோகவர்ஷர், இரண்டாம் கிருஷ்ணர், மூன்றாம், நான்காம் இந்திரர் ஆகியோர் சமண மதத்தை ஆதரித்தனர்.
2. ஜீனசேனர் சமண ஆதிபுராணத்தை இயற்றினார்.
3. குணபத்திரர் சமண மகாபாரதத்தையும் இயற்றினர்.

44. பல்லவர்களின் நிர்வாகப்பிரிவுகள்
1. நிர்வாகப்பிரிவின் தலைவரான அரசருக்கு உதவ அமைச்சரவை இருந்தது.
2. அமைச்சர்குழு மாநில ஆளுநர்களுக்கு ஆலோசனை வழங்கியது.
3. கிராம நிர்வாகத்தை கிராம மன்றம் கவனித்தது.
4. ரகஸ்யதிகிரா, கொடுக்காபிள்ளை, கோச அதீயஷா, தர்மாதிகாரி போன்றவர்கள் மற்ற அதிகாரிகளாவர்.

45. எல்லோராவிலுள்ள கைலாசநாதர் குகைக்கோயில்
1. முதலாம் கிருஷ்ணர் என்ற இராஷ்டிரகூட மன்னரால் இக்குடைவரைக்கோவில் கட்டப்பட்டது.
2. ஒரே பாறையைக் குடைந்து உருவாக்கப்பட்டது.
3. இக்கோவில் சிற்பங்கள் புராண இதிகாச நிகழ்ச்சிகளைக் கொண்டுள்ளன.

46. புகழ்பெற்ற சைவ மூவர்கள்
1. திருநாவுக்கரசர், அப்பர், சுந்தரர் ஆகியோர் புகழ் பெற்ற சைவ மூவர்கள் ஆவர்.
2. தேவாரப் பாடல்களில் முதல் ஏழு நூல்கள் இவர்களால் எழுதப்பட்டதாகும்.
3. இவர்களது வாழ்க்கை வரலாற்றை பெரியபுராணத்தில் காணலாம்.

47. தமிழகத்தில் வைணவத்தை பரவலாக்கியதில் ஆழ்வார்களின் பங்கு
1. ஆழ்வார்கள் தமிழ்நாட்டில் பக்தி இயக்கம் தொடங்க காரணமானவர்களுள் ஒருவர்
2. வைணவப் பாடல்கள் மூலம் வைதீக இந்துக்களை ஒருங்கிணைத்தனர்.
3. நாதமுனி வைணவப் பாடல்களை நாலாயிரதிவ்யபிரபந்தம் மூலம் தொகுத்தார்.
4. வர்ணாசிரமத்துக்கு வெளியில் இருந்தவர்களும் கோயிலுக்கு வர வழிவகுத்தது.

48. சாளுக்கியர் ஆட்சியில் அரசகுல மகளிரின் முக்கியத்துவம்
1. மாநில ஆளுநர்களாக நியமிக்கப்பட்டனர்.
2. விஜயபத்திரிகா எனும் அரசி கல்வெட்டு ஆணைகளை வெளியிட்டுள்ளார்.
3. கோயில்களுக்கு கொடை வழங்கினர். கோயில்கள் எழுப்பினர்.
4. ராஜசிம்மனின் அரசி ரங்கபதாகாவின் உருவம் காஞ்சி கைலாசநாதர் கோவிலில் உள்ளது.

49. முகமது-பின்-காசிமின் இராணுவப்படையெடுப்பிற்கான உடனடி காரணங்கள்
1. ஈராக் ஆளுநர் ஹஜன்-பின்-யூசுப் சிந்து பகுதியின் இந்து அரசர் தாஹிருக்கு எதிராக கடல்வழியாகவும் தரைவழியாகவும் இரு படைகளை அனுப்பினார்.
2. இரு படைகளையும் சிந்து அரசர் தாஹிர் தோற்கடித்தார். அதன் இரு தளபதிகளும் கொல்லப்பட்டனர்.
3. இதனால் கலிபாவின் அனுமதியுடன் 6000 குதிரைப்படை மற்றும் போர்த்தளவாடங்களுடனான ஒட்டகப்படையுடன் ஆனபெரும் படையை ஈராக் ஆளுநர் யூசுப், தனது மருமகன் முகமது பின் காஸிம் தலைமையில் அனுப்பினார்.

50. இந்தியாவில் கஜினி மாமூதின் இராணுவத்தாக்குதலுக்கான காரணங்கள்
1. செல்வம் மிக்க இந்துக் கோவில்களை கொள்ளையடிப்பது. சிலைகளை தகர்ப்பது.
2. இதனை கஜினியின் படைவீரர்கள் தங்களது கடவுளின் வெல்லப்படமுடியாத

ஆற்றலின் விளைவாக கண்டனர்.
3. பிற மதத்தினரை வெட்டிக் கொல்வதிலும், அவர்கது வழிபாட்டுத் தலங்களை அழிப்பதிலும் கஜினி மாமூதின் படையினரின் மதப்பற்று வெளிப்பட்டது.
4. பெரும் படையை பராமரிக்கும் செலவை ஈடுகட்ட.

51. ரஸியா சுல்தானா அதிகாரத்திலிருந்து அகற்றப்பட்டது
1. துருக்கிய பிரபுக்கள் இவர் அரியணையை ஏறியதை விரும்பவில்லை.
2. ஜலாவுதீன் என்ற அபிசீனிய அடிமைக்கு ரஸியா உதவுவதை பிரபுக்கள் எதிர்த்தனர்.
3. பஞ்சாப் ஆளுநர் அல்துனியாவின் கலகத்தை அடக்கும் முயற்சியில் இருந்த போது சதிகாரர்களால் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

52. மாலிக்காபூரின் தென்னிந்தியத் தாக்குதல்கள்
1. வாரங்கல் அரசர் பிரதாபருத்ரதேவாவை 1309 ல் தோற்கடித்தார்.
2. 1310 ல் ஹொய்சால அரசர் மூன்றாம் வீரவள்ளாளனை தோற்கடித்தார்.
3. சிதம்பரம், திருவரங்கம் கோயில்களை கொள்ளையடித்தார்.
4. பாண்டியர்களின் மதுரை சூறையாடப்பட்டது. மதுரை மீனாட்சியம்மன் கோவில் தாக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டது.

53. முகமது துக்ளக்கின் சோதனை முயற்சிகள் தோல்வியடைந்ததற்கான காரணங்கள்
1. தலைநகர் மாற்றம் - அலுவலகம் மட்டும் மாற்றாமல் டெல்லி நகரையே இடம்பெயரச் செய்தது.
2. வெள்ளிக்கு பதில் வெண்கல நாணய மாற்றம். நாணய மாற்றத்தில் போலி நாணய புழக்கத்தை கண்டறியாதது.
3. தோ ஆப் பகுதியில் பஞ்சத்தின் போது நிலவரி அறிமுகம்.

54. இராஜராஜ சோழனின் கடல்வழிப் படையெடுப்புகள்
1. இராஜராஜனின் கடல் கடந்த படையெடுப்புகள் மேற்கு கடற்கரை, இலங்கை ஆகியவற்றில் பெரும் வெற்றியை பெற்றுத்தந்தன.
2. இந்தியப் பெருங்கடலில் மாலத்தீவினையும் கைப்பற்றினார்.
3. இலங்கை வெற்றி மூலம் அதன் வடக்கு, கிழக்கு பகுதிகள் சோழப்பேரரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் வந்தது.

55. இராஜேந்திர சோழனின் "கடாரம் கொண்டான்"
1. தெற்கு சுமத்ரா மீது தாக்குதல் தொடுத்து வெற்றி கொண்டார். கடாரம் (கெடா) குறு நில மன்னரின் ஆட்சியில் இருந்தது.
2. பல வெற்றிகளை கொண்ட இராஜேந்திர சோழன் கடாரம் மீது படையெடுத்தான். வெற்றி பெற்றான்.
3. எனவே இராஜேந்திர சோழன் கடாரம் கொண்டான் என அழைக்கப்பட்டான்.

56. சோழர்காலத்து வணிகக்குழுக்களின் பங்களிப்பு
1. உள்நாட்டு வணிகத்தை மணிக்கிராமத்தார் என்ற உள் நாட்டுக் குழு கவனித்தது.
2. வெளிநாட்டு வணிகத்தை அஞ்சு வண்ணத்தார் (யூதர், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் உள்ளிட்ட மேற்கு ஆசியர்களைக் கொண்ட குழு) கவனித்தது.
3. பின் இருவரும் இணைந்து ஐநூற்றுவர், திசை ஆயிரத்து ஐநூற்றுவர், வளஞ்சியர் போன்ற பெயர்களில் வாணிபத்தில் ஈடுபட்டனர்.

57. சோழர் காலத்தில் வசூலிக்கப்பட்ட வரிகள்
1. வரிகள் பொருட்களாக வசூலிக்கப்பட்டன.
2. குடிமைவரி முக்கியவரி ஆகும்.
3. இறை, காணிகடன், இறைகட்டின காணிகடன், கடமை போன்ற வரிகள்

வசூலிக்கப்பட்டன.

4. ஒப்படி, இறை கட்டின நெல்லு, ஏரி ஆயம் என்பன பிற வரிகள் ஆகும்

**58. சோழர்காலச் சமூகத்தின் படிநிலைகள்**

1. சோழர் கால சமூக படிநிலையை நிர்ணயித்தது வேளாண்மை ஆகும்.
2. பிரம்மதேய கிழவர் உயர் நிலை நில உடைமையாளர்.
3. வேளாண் கிராம உடைமையாளர்கள் அடுத்தநிலையில் இருந்தனர்.
4. இவர்கள் இருவரிடமும் பணிபுரியும் குத்தகைதாரர்கள் "உழுகுடி" எனப்பட்டனர்.
5. "சமூகப்படி" எனும் அடிமட்ட உழைப்பாளிகளும், "பணிசெய் மக்கள் எனும் அடிமைகளும் கடைநிலையில் காணப்பட்டனர்.

**59. சோழர்காலத்தைச் சேர்ந்த கல்வி நிறுவனங்கள்**

1. சோழர்கள் சமஸ்கிருத கல்விக்கு அதரவளித்தனர்.
2. முதலாம் ராஜேந்திரன் வேதக்கல்லூரி ஒன்றை எண்ணாயிரத்தில் நிறுவினார்.
3. திருபுவனியிலும், திருமுக்கூடலிலும் வேதக்கல்லூரிகளை நிறுவினர்.
4. இக்கல்லூரிகள் வேதங்கள், சமஸ்கிருத இலக்கணம், சமயம், மற்றும் தத்துவம் ஆகியவற்றை வளர்க்கும் மையங்களாக விளங்கின.

**60. தொடக்க காலப் பாண்டியரால் கட்டப்பட்ட குடைவரைக் கோயில்கள்**

பிள்ளையார்பட்டி, திருமயம், குன்றக்குடி, திருச்செந்தூர், கழுகுமலை, சித்தன்னவாசல் ஆகிய இடங்களில் தொடக்க காலப் பாண்டியர் குடைவரைக்கோயில்கள் கட்டினர்.

**61. பாண்டிய அரசு குறித்து வெளிநாட்டுப் பயண வரலாற்றாசிரியர்கள் குறிப்பு**

1. வெனீசியப் பயணி மார்க்கோபோலோ பாண்டியர்களின் நேர்மையான நிர்வாகம், உடன்கட்டை ஏறுதல், அரசர்களின் பலதார மணமுறை குறித்து கூறியுள்ளார்.
2. காயல் முக்கிய வணிகதளமாக திகழ்ந்ததையும் கூறியுள்ளார்.
3. வாசப் என்பார் காயல் துறைமுகத்தில் நடைபெற்ற குதிரை வணிகத்தை குறிப்பிட்டுள்ளார்.

**62. பாமினி அரசு நிறுவப்பட்டது**

1. டெல்லியை முகமது பின் துக்ளக் ஆண்டபோது 1345 ல் தென் பகுதி மாகாண ஆளுநர் ஜாபர்கான் ஆவார்.
2. வடக்கு கர்நாடகாவில் தன்னை சுதந்திர அரசாக அறிவித்தார்.
3. தனக்கு பான்ஷா என்ற பட்டத்தை சூட்டி பாமினி அரசை தோற்றுவித்தார்.

**63. நாயக்க முறை**

1. நாயக் என்றால் இராணுவத்தலைவர் அல்லது இராணுவ வீரர் என்ற பொருள்படும்.
2. தேவைப்படும் நேரத்தில் இராணுவச் சேவை செய்தனர்.இதற்காக நிலப்பகுதிகள் வழங்கப்பட்டன.
3. இராமநவமி திருவிழா நேரத்தில் குறிப்பிட்ட வருவாயை வழங்கினர்.
4. நாயக் தானம் எனப்பட்ட தங்களின் பகுதிகளில் உற்பத்தியை கட்டுப்படுத்தினர்.
5. அரசரின் பிரதிநிதியாக செயலாற்றினர். விவசாயிகள் கைவினைஞர்களுக்கு சலுகைகள் வழங்கினர்.

**64. ராக்சஷி தங்கடி போர்(1565)**

1. விஜய நகர அரசுக்கும் பாமினி தக்காண சுல்தான்கள் கூட்டணிப்படைக்கும் இடையே ஏற்பட்ட போர் ஆகும்.
2. விஜய நகர படைக்கு ராமராஜா தலைமை வகித்தார்.
3. 1565ல் தலைக் கோட்டையில் இப்போர் நடந்தது.
4. போரின் இறுதியில் விஜயநகரப் படைகள் தோல்விஅடைந்தது.

5. இப் போர் விஜயநகரப் பேரரசின் முடிவுக்கு காரணமாய் அமைந்தது.

**65. கிருஷ்ணதேவராயர் விஜயநகரப் அரசின் சிறந்த ஆட்சியாளராகப் போற்றப்படக் காரணங்கள்**

1. பாமினி சுல்தான்கள், ஒரிசாவின் கஜபதியை வெற்றி கொண்டது.
2. போர்ச்சுக்கிஷியர்களுடன் நல் வணிக உறவு (குதிரை பெறல்)
3. புனித தலங்களில் (சைலம், திருப்பதி, காளகஸ்தி) கோபுரங்கள் கட்டி கலைச்சேவை.
4. ஆட்சியில் செல்வச் செழிப்பு, அரசவையில் அறிஞர்கள் (அல்லசானி பெத்தன்னா, தெனாலிராமன்) அலங்கரித்தது.
5. தலை சிறந்த சாதனையாளர். அமுக்த மால்யதம் என்ற நூலை இயற்றியவர். சிறந்த கவிஞர்.
6. சிறந்த நிர்வாகி நாயக் முறையை மறுசீரமைப்பு கொடுத்தார்.

**66. இரண்டாம் அலெக்சாண்டர்**

1. இரண்டாம் அலெக்சாண்டர் என்று அழைக்கப்பட்டவர் பாமன்ஷா ஆவார்.
2. வாரங்கல் மற்றும் ரெட்டி அரசுகளை வெற்றி கொண்டு அவர்களை கப்பம் கட்ட வைத்தார்.
3. தனது நாணங்களில் இரண்டாம் அலெக்சாண்டர் என்று பொறித்துக் கொண்டார்.

**67. கோல்கொண்டா கோட்டை**

1. காக்கத்திய அரசர் ராஜா கிருஷ்ணதேவ் கட்டிய கோட்டை.
2. ஹைதராபத்தில் இருந்து 11 கி.மீ தொலைவில் உள்ள மலையில் உள்ளது.
3. ஒலி அம்ச அடிப்படையில் சிறந்த கட்டிடக்கலையின் அம்சமாகும்
4. அரசவை, நிலத்தடி ரகசிய சுரங்கபாதை, மாளிகை அமையப்பெற்றது.
5. கோகினூர் வைரத்தை உலகிற்கு வழங்கியது.
6. குதுப்ஷாவின் கல்லறை உள்ளது.

**68. மத மறுமலர்ச்சியின் உறைவிடமாக தென்னிந்தியா விளங்குதல்**

1. பக்தி இயக்கம் என்னும் வடிவில் புதிய சமய மரபு தோன்றியது.
2. ஆதிசங்கரர் அத்வைத கருத்தை எடுத்து கூறி பிற மத கோட்பாட்டை எதிர் கொள்ளும் ஆற்றலை வழங்கினார்.
3. இராமானுஜர், சமத்துவத்திற்கு ஆதரவளித்து அதனை இயக்கமாக மாற்றினார்.
4. சைவ நாயன்மார்கள், வைணவ ஆழ்வார்கள், பக்தி இயக்கத்தில் பாடல்கள் பாடி மக்களோடு மக்களாக கலந்தனர்.

**69. சூர்தாஸ், துக்காராம் ஆகியோரின் போதனைகள்**

**சூர்தாசர்:**

1. அக்பர் அவையில் இடம் பெற்றவர் சூர்தாசர்.
2. அன்பேனும் மதத்தையும், கடவுளிடம் பக்தி கொள்வதையும் போதித்தார்.
3. கிருஷ்ணபக்தி பாடல்களை பாடி அவர் மீது காதலை வெளிப்படுத்தினார்.

**துக்காராம்:**

1. சிவாஜியின் சமகாலத்தவர் துக்காராம்.
2. கடவுளான பந்தபூர் விட்டலாவின் புகழை பாடினார்.
3. சமத்துவம் சகோதரத்துவத்தை பரப்பினார்.

**70. கபிரின் போதனைகள்**

1. கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறார் என்றார்.
2. உருவ வழிபாடு, பல கடவுள் வழிபாடு, சாதி முறையை எதிர்த்தார்.
3. இஸ்லாமிய சமயத்திலிருந்த சம்பிரதாயங்களை எதிர்த்தார்.
4. இந்து - முஸ்லிம் ஒற்றுமைக்கு வழிவகுத்தார்.

71. கபீர் , சைதன்யர் வேறுபாடு

1. கபீரை போலல்லாமல் சைதன்யர் ஏனைய கடவுள்களை காட்டிலும் கிருஷ்ணர் உயர்வானவர் என கூறினார்.
2. கபீரின் இயக்கம் ஒருமைப்பாட்டை வலியுறுத்தியது. சைதன்யர் இயக்கம் ஒரு மீட்டெடுப்பு இயக்கமாகும்.
3. கிருஷ்ண வழிபாட்டுக்கு சைதன்யர் முக்கியத்துவம் தந்தார்.

72. பக்தி இயக்கத்தின் விளைவுகள்

1. முக்தி என்பது அனைவருக்கும் உரியது என்ற கருத்தை முன்வைத்தது.
2. பிராந்திய மொழிகளில் இயக்கங்களும், தலைவர்களும் தோன்றினர்
3. அத்வைதம், துவைத கோட்பாடுகள் தோன்றின.
4. அனைவரும் ஒன்று சேர்ந்து பாடுவது, பண்டிகைகள், விழாக்கள் நடத்துவது, புனித பயணங்கள் மேற்கொள்வது இன்று வரை நடைமுறையில் உள்ளன.

73. "வாழ்க்கை முழுவதும் தவறி விழுந்த ஹுமாயுன் வாழ்க்கையை விட்டே தவறி விழுந்து இறந்தார்"

1. சுனார் கோட்டை முற்றுகையின் போது ஷெர்ஷாவின் வார்த்தையை நம்பி முற்றுகையை கைவிட்டது.
2. பஞ்சாப் மீதான கம்ரானின் ஆட்சியதிகாரத்தை தட்டிக் கேட்க மறுத்தது.
3. எதிரிகள் தங்களை வலிமைப்படுத்திய நேரத்தில் அதில் கவனத்தை செலுத்தாமல் தில்லியில் பொழுதை கழித்தது.
4. நூலகத்தின் படிகட்டில் இருந்து விழும்போது மட்டும் அல்ல எப்பொழுதெல்லாம் வாய்ப்பு கிடைத்ததோ அப்பொழுதெல்லாம் (அரசில்) கீழே விழத் தவறவில்லை.

74. தீன் இலாஹி

1. அனைவருக்கும் அமைதி என்ற தத்துவத்தை நிலை நாட்ட அக்பர் விரும்பினார்.
2. தீன் இலாஹி என்ற தெய்வீக, ஒரு கடவுள் கோட்பாட்டை அக்பர் தொடங்கினார்.
3. அக்பருக்கு பின் தீன் இலாஹி இல்லாமற் போயிற்று.

75. அக்பரது சித்தூர் முற்றுகை

1. அக்பர் மேவார் ராணா உதய்சிங்கின் சித்தூர் கோட்டை முற்றுகை ஆறுமாதம் நீடித்தது.
2. ராணா உதய்சிங் குன்றுகளுக்குள் பின்வாங்கினாலும் அவரின் தளபதிகள் ஜெய்மால் பட்டா ஆகியோர் போரை தொடர்ந்து நடத்தினர்.
3. ஜெய்மால், பட்டா உள்பட 30,000 ராஜபுத்திரவீரர்களின் தியாகத்திற்கு பின்னரே கோட்டை கைப்பற்ற பட்டது.
4. அக்பர் அவர்களது துணிச்சலைக் கண்டு வியப்படைந்து அவர்கள் நினைவாக ஜெயமால் பட்டா இருவரது சிலைகளை நிறுவினார்.

76. அக்பரது மன்சப்தார் முறை

1. ஒரு முறைபடுத்தப்பட்ட , மையப்படுத்தப்பட்ட நிர்வாக முறையான மன்சப்தாரி முறையை அறிமுகம் செய்தார்.
2. தலைமை பதவி பெற்ற பிரபுக்கள் ஒவ்வொருவருக்கும் மன்சப்தார் என்ற பட்டம் வழங்கப்பட்டது.
3. ஜாட் என்பது மன்சப்தார் பெற்ற வீரர்களின் எண்ணிக்கை
4. சவார் என்பது மன்சப்தார்களின் கீழ் இருக்கும் குதிரைகளின் எண்ணிக்கை
5. ஜாட் சவார் எண்ணிக்கையைப் பொருத்தே ஒருவரது அந்தஸ்து நிர்ணயிக்கப்பட்டது.

77. முகலாயர் ஆட்சியில் நிறுவப்பட்ட ஐரோப்பிய குடியேற்றங்கள்

- போர்ச்சுகீசியர் ........ கோவா, டாமன், சால்செட்,

டச்சுக்காரர் ........ மசூலிப்பட்டணம், புலிகாட்
டேனியர் ........ தரங்கம்பாடி
பிரெஞ்சுக்காரர் ........ சூரத், புதுச்சேரி
ஆங்கிலேயர் ........ சூரத், சென்னை, பம்பாய், கல்கத்தா

**78. தாராஷுகோ**

1. ஷாஜகானின் முத்த மகன்
2. சூபி தத்துவத்தில் ஆர்வம் கொண்டிருந்தார்.
3. ஷாஜகானால் பட்டத்து இளவரசனாக அறிவிக்கப்பட்டவர்.
4. உபநிடதங்களை மாபெரும் ரகசியம் என்னும் பெயரில் பாரசீக மொழியில் மொழி பெயர்த்தார்

**79. கர்கானா**

1. தொழிற்கூடம்.
2. இங்கு விலையுயர்ந்த கைவினைப் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டன
3. அரசகுடுப்பத்தின் தேவைகளை பூர்த்தி செய்த அரசாங்க கர்கானாக்களும் இருந்தன.
4. இங்கு உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் வர்த்தகர்களால் உள்ளூர் மற்றும் தொலைதூர பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

**80. கபீர்**

1. கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறார் என்றார்.
2. உருவ வழிபாடு, பல கடவுள் வழிபாடு, சாதி முறையை எதிர்த்தார்.
3. இஸ்லாமிய சமயத்திலிருந்த சம்பிரதாயங்களை எதிர்த்தார்.
4. இந்து - முஸ்லிம் ஒற்றுமைக்கு வழிவகுத்தார்.

**81. அபுல்பாசல்**

1. அக்பர் நாமா என்ற நூலின் ஆசிரியர் அபுல் பாசல் ஆவார்.
2. இதில் அக்பர் வாழ்கை வரலாற்றை எழுதியுள்ளார்
3. அயினி அக்பரி என்ற நூலில் முகலாய நிர்வாகத்தைப் பற்றி விவரித்துள்ளார்.

**82. சூபி இயக்கம்**

1. இஸ்லாமின் உள்ளுணர்வு சார்ந்த இறைநிலை இணைப்பினை முன்வைக்கும் ஒரு மதக் கோட்பாடு.
2. ஈரானில் உதயமானது இந்தியாவில் செழித்து வளர்ந்தது.

**83. மராத்தியரின் எழுச்சிக்கான காரணங்கள்**

1. மராத்தியரின் விசுவாசம், வீரம், ஒழுக்கம், தந்திரம், எதிரிகளைத் தாக்கும் ஆற்றல்
2. புவியியல் கூறுகளான செங்குத்தான மலைகள், பள்ளத்தாக்குகள், கோட்டைகள் இராணுவப் பாதுகாப்புக்கு ஏற்றவகையாக இருந்தது.
3. கொரில்லா தாக்குதல், இரவு நேர மின்னல் தாக்குதல்.
4. போர்ச்சூழல் கருத்தில் கொண்டு மேலதிகாரியின் உத்தரவின்றி வழிமுறைகளைப் மாற்றிச் செயல்படுதல்.
5. பக்தி இயக்கம் மராத்தியரை ஒன்றுபடுத்தியது.

**84. சிவாஜியின் கீழ் இருந்த இராணுவ அமைப்பு**

1. நிலையான இராணுவம் இருந்தது
2. படைவீரர்களுக்கு வீடு வழங்கப்பட்டது.
3. காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை, ஆயுதப்படை என நான்கு பிரிவுகள் இருந்தன.
4. ரெஜிமெண்ட், பிரிகேடுகள் என கலாட்படை பிரிக்கப்பட்டிருந்தது.

85. மூன்றாவது பானிபட் போரின் விளைவுகள்
1. மராத்திய இராணுவம் முற்றிலுமாக அழிந்தது.
2. அகமது ஷா அப்தாலி டில்லியின் மன்னரானார்.
3. மராத்தியரின் பேரரசு கனவு சிதைந்தது.
4. இந்தியாவில் ஆங்கிலேய அரசு காலூன்ற வழிவகுத்தது.

86. 1775 -1782 இல் நடைபெற்ற போர்
1. ரகுநாதராவ்வின் உரிமை காரணமாக நடைபெற்ற இப்போர் சால்பாய் உடன்படிக்கை படி முடிவுக்கு வந்தது.
2. சால்செட், தானே ஆகிய பகுதிகள் ஆங்கிலேயருக்கு கிடைத்தது.
3. ரகுநாதராவுக்கு கட்டாய ஓய்வு கொடுக்கப்பட்டது.

87. மூன்றாவது மராத்தியப் போரின் விளைவுகள்
1. மராத்திய கூட்டமைப்பின் தலைமைப் பகுதியில் இருந்து பேஷ்வா விலகல்
2. பேஷ்வாவின் அனைத்துப் பகுதிகளையும் ஆங்கிலேயர் இணைத்துக் கொண்டனர்.
3. சிவாஜியின் வழித் தோன்றல் பிரதாப்சிங்கிற்கு சதராவில் சிறிய அரசு வழங்கப்பட்டது.
4. இரண்டாம் பாஜிராவ் கடைசி வரை சிறைக்கைதியாக ஒய்வூதியத்துடன் வாழ்ந்தார்.

88. நயங்காரா முறை
1. கிருஷ்ணதேவராயர் நயங்காரா முறையை உருவாக்கினார்.
2. இதன்படி தமிழகம் மதுரை, செஞ்சி, தஞ்சாவூர் என மூன்று நயங்காராக்களாக உருவானது.
3.1676 ல் மராத்திய தளபதி வெங்கோஜி தன்னை தஞ்சையில் அரசராக அறிவித்தார்.

89. ராஜா தேசிங்கின் வீரதீரச் செயல்கள்
1. 1714 இல் செஞ்சியின் ஆளுநரானார்.
2. முகலாய மன்னருக்கு கப்பம் கட்ட மறுத்தார்.
3. நவாப்புக்கு எதிரான சண்டையில் 22 வயது ஆன ராஜா தேசிங் வீர மரணமடைந்தார்.
4. ராஜா தேசிங் நவாபுக்கு எதிராக வெளிப்படுத்திய வீரம் மக்களிடையே கதை பாடல்களாக உருவமெடுத்தது.

90. "நவ வித்யா முறையை அறிமுகம் செய்தது ஒரு முக்கிய முன் முயற்சியாகும்"
1. தஞ்சாவூரில் கிறிஸ்தவர் அல்லாத உள்ளூர் குழந்தைகளுக்காக நவீன பொதுப் பள்ளிகளை முதன் முதலாக தொடங்கினார்.
2. ஆதரவற்றவர்கள் மற்றும் ஏழை மாணவர்களுக்காக தஞ்சை மற்றும் இதர இடங்களில் இலவச தொடக்க மற்றும் உயர் கல்வி நிலையங்களை நிறுவி நிர்வகித்தார்.
3. நவீன கல்வி முறைக்காக "நவ வித்யா" என்ற முறையை மேற்படி பள்ளிகளில் அறிமுகம் செய்தார்.

91. 1565 ஆம் ஆண்டுக்குப் பிறகு தென்னிந்தியாவில் நிலவிய அரசியல் சூழ்நிலைகள்
1. நாயக்க அரசுகள் சுயாட்சி பெற்றவைகளாக விளங்கின.
2. நாயக்கர் தவிர பல்வேறு பகுதிகள் உள்ளூர் ஆட்சியாளர்கள் வசம் இருந்தது. அவர்களில் இராமநாதபுரம் அரசின் சேதுபதி முக்கியமானவராவார். அவரும் தன்னை சுதந்திர அரசராக நிலை நிறுத்திக் கொள்ள விரும்பினார்.
3. தங்களுக்குள் மேலாதிக்கத்தை நிறுவ இவ்வரசுகள் மோதிக் கொண்டன.
4. கோல்கொண்டா படைகள் பழவேற்காட்டிற்கும் சாந்தோமுக்கும் இடைபட்ட பகுதிகளை கைப்பற்றிக் கொண்டன.
5. டச்சு, ஆங்கிலேயர் கிழக்கு கடற்கரைப் பகுதிகளில் சில இடங்களில் தங்கள் உரிமையை நிறுவினர்.

92. வணிகர்கள் ஒரே வகையான குழு அல்ல
1. பல்வேறு குழுவைச் சேர்ந்தவர்களாக வணிகர்கள் இருந்தனர்.
2. கீழ் நிலையில் சிறிய சந்தைகளில் வியாபாரிகளும் சில்லரை வர்த்தகர்களும் இருந்தனர்.
3. இடைநிலையில் தரகர்கள் இருந்தனர். நாட்டின் உட்பகுதிகளில் உற்பத்தியாகும் பொருட்களை கொள்முதல் செய்தனர்.
4. மேல் நிலையில் வணிகத்தை இளவரசர்கள் அல்லது முதலாளிகள் கட்டுப்படுத்தினர். சூரத்தில் பனியா, பார்சி வணிகர்கள், அகமதாபாத்தின் நகர்சேத்துகள், வங்காள ஜெகத் சேத்துகள், சோழ மண்டலத்து நகரத்தார் ஆகியோரை எடுத்துக் காட்டாய் கூறலாம்.

93. கிழக்குக் கடற்கரையில் ஐரோப்பியர் தங்களது குடியேற்றங்களை நிறுவக் காரணங்கள்
1. சில்லரைப் பொருட்களை கொள்முதல் செய்ய (நறுமணப் பொருட்களை உற்பத்தி செய்யும் இந்தோனேசியத் தீவுகளுடனான வணிக தேவைக்காக) ஐரோப்பியர்க்கு கிழக்குக் கடற்கரையில் வணிகத்தளம் தேவவையாயிற்று.
2. இந்தியத் துணிகள் செலாவணி ஊடாகமாயிற்று.
3. சோழ மண்டலத்தைச் சேர்ந்த வண்ணம் பூசப்பட்ட துணிகளுக்கான தேவை.
4. துணிகளை கொள்முதல் செய்து அவற்றை பண்டமாற்று செய்து கொண்டனர்.

94. இந்தியத் துணிகளுக்கான தேவை ஐரோப்பாவில் அதிகரித்ததோடு அது இந்தியப் பொருளாதாரத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கம்
1. முதலில் இத் தேவை அதிகரிப்பு உள்ளூர் பொருளாதாரத்திற்குப் பயனளிப்பதாக அமைந்தது.
2. உற்பத்திக் காரணிகள் (தொழிலாளர், கச்சாப் பொருள், மூலதனம்) நேர்மறையாக வினையாற்றின.
3. உற்பத்திக்காக கொடுக்கப்பட்ட நெருக்கடி மிக விரைவாக உற்பத்தி ஆதாரங்களைப் பாதித்தது.
4. பஞ்சங்கள், கச்சாப் பொருள் பற்றாக்குறை, உணவு தானிய பற்றாக்குறை நெசவாளர்களை பாதித்தது.
5. அதிகமான வணிக வாய்ப்புகள் நீண்ட காலத்திற்கு பயனளிக்கவில்லை.

95. பழவேற்காடு
1. பழவேற்காடு சென்னையில் இருந்து 60 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது
2. பழவேற்காட்டை போர்த்துகீசியரிடமிருந்து டச்சுக்காரர்கள் கைப்பற்றினர்.
3. டச்சுக்காரர்கள் அங்கு ஜெல்டிரியா என்னும் பாதுகாப்பு கோட்டையை கட்டினர்.
4. இங்கிருந்து வைரம், ஜாதிக்காய், ஜாதிபத்ரி, கிராம்பு ஐரோப்பாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

96. தரங்கம்பாடி
1. 1620 ல் வணிக இயக்குநர் ராபர்ட் கிராப்பி தஞ்சாவூர் அரசோடு ஓர் ஒப்பந்தத்தை செய்து கொண்டார்.
2. ஒப்பந்தப்படி தரங்கம்படியில் டேனியர்கள் கோட்டை கட்டிக் கொள்ள உரிமையை பெற்றனர்
3. தரங்கம்பாடியில் டேனியர் கட்டிய கோட்டை இன்றும் சீர் கெடாமல் உள்ளது.
4. லுத்தரன் மதப்பரப்பாளர்களான பார்த்தலோமியஸ் சீகன் பால்கு, ஹென்ரிச் புலுட்சா ஆகிய இருவரும் இங்கு வந்து இந்துக்களை கிறிஸ்தவர்களாக மாற்றினர். அச்சுக்கூடம் உருவாக்கி பைபிளை மொழிபெயர்த்தனர்.

97. ஆம்பூர் போர் (1749)
1. ஹைதராபாத் நிஜாமிற்கு எற்பட்ட வாரிசுரிமைப் போட்டி ஆம்பூர் போருக்கு

வழிவகுத்தது.

2. ஹைதராபாத் உரிமை கோரிய முஜாபர் ஜங், கர்நாடகத்திற்கு உரிமை கோரிய சந்தாசாகிப் ஆகிய இருவரும் பிரெஞ்சு படை உதவியுடன் அன்வருதீனை தோற்கடித்தனர். போரில் அன்வருதீன் இறந்தார்.
3. சந்தாசாகிப் ஆற்காடு நவாப் ஆனார்.

98. "ஆனந்தரங்கர் நாட்குறிப்பு"

1. ஆனந்தரங்கன் பிள்ளையை துய்ப்ளே தலைமை துபாஷியாகவும் (இரு மொழிகள் அறிந்தவர்) வணிகமுகவராகவும் நியமித்தார்.
2. ஆனந்தரங்க பிள்ளையின் (1709-1761) நாட்குறிப்பு தமிழில் எழுதப்பட்ட ஏராளமான செய்திகளை உள்ளடக்கி உள்ளது.
3. அவரின் நாட்குறிப்பு 1736 முதல் 1760 வரையிலான காலத்திற்கு (துய்ப்ளே ஆளுநராக இருந்த காலம்) முக்கியமான வரலாற்று சான்றாக உள்ளது.

99. இரட்டை ஆட்சி முறை

1. பிளாசிப் போருக்கு பின் வணிகக்குழு முழு அதிகாரத்தை தன்வசம் வைத்துக் கொண்டு நிர்வாகச் சுமையை மட்டும் நவாபிடம் விட்டு வைத்தது இத்தகைய நிர்வாக முறையே இரட்டை ஆட்சி முறை எனப்பட்டது.
2. இம்முறையின் கீழ் மேலளவில் ஓர் அதிகாரமற்ற அரசரை வைத்துக் கொண்டு அவரது பின்புலத்தில் வணிகக்குழு அதிகாரிகள் செயலாற்றினர்.

100. ஜமீன்தார்கள் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நிலங்களுக்குப் பரம்பரை உரிமைகளை பெறுதல்

1. 1793 ல் வங்காளம் பீகார் , ஒரிசா ஆகிய பகுதிகளில் நிலையான நிலவரித்திட்டம் அமுல் செய்யப்பட்டது.
2. "சாசுவதம்" என்ற பெயரில் நிலத்தை அளவிட்டு அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஜமீன்தாரும் அரசுக்கு வழங்க வேண்டிய வருவாயை நிர்ணயம் செய்தது.
3. இம் முறையின் மூலமாக வரி வசூலிப்போராக இருந்தோர் வாரிசுரிமை கொண்ட ஜமீன்தார்களாக மாறி அரசு வழங்கிய நிலத்தின் பயன்களை அனுபவிக்கலானார்கள்.

101. வாரிசு உரிமை இழப்புக் கொள்கை

1. இந்து சம்பிரதாயங்களின்படி வாரிசு இல்லாத இந்து அரசர் ஓர் ஆண் மகவை தத்தெடுக்க முடியும்.
2. அவ்வாறு தத்தெடுக்கப்பட்ட மகனுக்கு சொத்தில் முழு உரிமை உண்டு.
3. டல்ஹௌசியின் வரவுக்கு முன்பு வரை கம்பெனி அரசின் அனுமதியை எளிதாக பெற்று வந்தனர்.
4. டல்ஹௌசி ஆங்கில அரசின் பாதுகாப்பில் உள்ள அரசு, வாரிசு நியமனம் பெற அரசு அனுமதி அவசியம் என கூறினார். தத்தெடுக்க ஆங்கில அரசு மறுத்தால் அவ்வரசு (வாரிசு இல்லாத அரசு) ஆங்கில அரசுடன் இணைக்கப்படும் என்றார். இது வாரிசு இழப்புக் கொள்கை எனப்படும்.
5. வாரிசு உரிமை இழப்புக் கொள்கையின் கீழ் முதலில் வீழ்ந்த அரசு சதாரா ஆகும்.

102. காரன்வாலிஸின் நீதித்துறை நிர்வாகம்

1. சர் வில்லியம் ஜோன்ஸ் ஆலோசனையின் படி நீதித்துறையை காரன்வாலிஸ் சீரமைத்தார்.
2. ஆட்சியாளர்ளை (Collectors) நீதித்துறை பொறுப்பிலிருந்து விடுவித்தார்.
3. குற்றவியல், உரிமையியல் நீதிமன்றங்களை முழுமையாக சீரமைத்தார்
4. நீதித்துறையின் உச்சங்களாக சதர் திவானி அதாலத்தும், சதர் நிசாமத் அதாலத்தும் திகழ்ந்தன.

5. நான்கு பிராந்திய முறையீட்டு நீதிமன்றங்கள் கல்கத்தா, தக்காணம், முர்ஷிதாபாத், பாட்னா ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டன.

**103. சார்லஸ் உட் அறிக்கை**

1. 1854 ஆம் ஆண்டு சார்லஸ் வுட் கல்வி அறிக்கை வெளியிடல்
2. ஆரம்பகல்வி முதல் உயர்நிலைப்பள்ளியையும், கல்லூரிப் படிப்பையும் உள்ளடங்கிய ஒரு விரிவான வரைவாகும்.
3. பொதுக் கல்வித்துறை துவங்கப்பட்டு மூன்று மாகாணத் தலைநகரங்களிலும் ஒரு பல்கலைக் கழகம் நிறுவப்பட்டது.
4. இதன் தொடர்ச்சியாக 1857 ல் சென்னை பல்கலைக்கழகமும், பம்பாய், கல்கத்தா பல்கலைக்கழகங்களும் தோற்றுவிக்கப்பட்டன.

**104. பிண்டாரிகள் மற்றும் தக்கர்கள்**

**பிண்டாரிகள்:**

1. பிண்டாரிகள் கொள்ளைக் கூட்டத்தில் இஸ்லாமியர், இந்துக்கள் என்ற இரு சமயத்தவர்களும் இருந்தனர்.
2. துணைப்படைத் திட்டத்தில் வேலையிழந்த படைவீரர்கள் இதில் பெருமளவில் சேர்ந்தனர்.
3. பிரிட்டிஷார் பிண்டாரிகள் மீது போர் பிரகடனம் செய்து அவர்களை ஒழித்தனர்.

**தக்கர்கள்:**

1. 14 ம் நூற்றாண்டில் தில்லிக்கும் ஆக்ராவுக்கும் இடைப்பட்ட பகுதிகளில் கொள்ளையடித்துக் கொண்டிருந்த கூட்டத்தினர்.
2. தக்கர்களை ஒடுக்க பெண்டிங் ஒரு திட்டம் வகுத்து அவர்களை அழிக்க வில்லியம் ஸ்லிமேனை நியமித்தார்.
3. 1860 ம் ஆண்டு வாக்கில் தக்கர்கள் பிரச்சினை முடிவுக்கு வந்தது.

**105. இந்திய கைத்தறி நெசவாளர்கள் மீது தொழிற்துறை புரட்சியின் தாக்கம்.**

1. உலகின் துணி ஏற்றுமதியில் முதன்மை பெற்று விளங்கிய இந்தியா, லங்காஷ்யரின் (இங்கிலாந்து) பருத்தி ஆடை தேவைக்குச் சந்தையாக மாற்றப்பட்டது.
2. குறைந்த விலையில் இயந்திரங்கள் மூலம் தயாரிக்கப்பட்ட பிரிட்டிஷ் பொருட்கள் இந்திய சந்தைகளில் குவியலாயின.
3. நீண்ட கால பயன்பாட்டுக்கு உகந்தமையாக இருந்ததினாலும், சொற்ப விலைக்கு விற்கப்பட்டதாலும் இந்திய கைத்தறி பொருட்கள் உற்பத்தி நலிந்தது.

**106. ஒப்பந்தக் கூலி முறை**

1. இம்முறையில் தொழிலாளர்கள் ஐந்தாண்டு பணியமர்த்தப்பட்டனர்.
2. பயணச் செலவு வழங்கப்பட்டது.
3. இம்முறையின்படி கூலி (ஒப்பந்த தொழிலாளர்களை அழைக்கும் பெயர்) சிறைச் சாலை போன்ற சூழ்நிலையில் பணியாற்ற வேண்டிவந்தது.
4. பணியில் அலட்சியம் காட்டினாலோ, அல்லது பணிசெய்ய மறுத்தாலோ மிடுக்காக திரிந்தாலோ, உத்தரவுக்கு கீழ்படிய மறுத்தாலோ, ஒப்பந்த காலம் முடியும் முன் பணியை விட்டு விலகினாலோ, கூலியை மறுக்கவோ அல்லது சிறைத்தண்டனை வழங்கவோ முடியும்.

**107. ஆங்கிலேயருக்கும் ஹைதர் அலிக்கும் இடையே கையெழுத்தான மதராஸ் உடன்படிக்கை**

1. ஹைதர் முதலாம் மைசூர் போரில் தமது மங்களூரை மீட்டெடுத்தார், பெங்களூரை தக்க வைத்தார்.
2. கேப்டன் நிக்சனை தோற்கடித்தார். கரூரையும் ஈரோட்டையும் கைப்பற்றினார். மதுரை, திருநெல்வேலியில் எந்த வித எதிர்ப்பும் இன்றி படை நடத்தி சென்றார்.
3. தஞ்சாவூருக்கும் கடலூருக்கும் முன்னேறிச் சென்றார். முதலாம் மைசூர் போர்

ஹைதருக்கே சாதகமான சூழ்நிலை தென்பட்டது.

4. ஆங்கிலேயருடன் உடன்படிக்கைக்கு ஹைதர் விரும்பாவிட்டாலும் மராத்தியர் படையெடுத்து வரக்கூடும் என்ற அச்சுறுத்தல் அவரை ஆங்கிலேயருடன் மதராஸ் உடன்படிக்கை செய்து கொள்ளும் நிலைக்கு தள்ளியது.

108. 1801 ம் ஆண்டு கிளர்ச்சி

1. மருது பாண்டியன், மேலப்பன் ஆகியோர் இதற்கு தலைமை வகித்தனர்.
2. மருது சகோதரர்களுடன் ஊமைத்துரை செவத்தையாவும் இணைந்தனர்.
3. தளபதி அக்னி தலைமையிலான படை பெரும் சேதத்துடன் வெற்றி பெற்றது.
4. மருதுவை சிங்கபுணரியிலும், செவத்தையாவை வத்தலகுண்டுவிலும், வெள்ளை மருதுவின் மகன் துரைசாமியை மதுரையிலும் கைது செய்தனர்.
5. மருது சகோதரர்கள் திருப்பத்தூரிலும், ஊமைத்துரை, செவத்தையா பாஞ்சாலங்குறிச்சியிலும் கொல்லப்பட்டனர்.

109. 1806 ம் ஆண்டு வேலூர் புரட்சி

1. அரியணையை இழந்த அரசர்கள், குறுநில மன்னர்களின் சந்ததியினர், திப்பு மகன்களின் பிரதிநிதிகள், விசுவாசிகள் 1806 ல் வேலூரில் ஆங்கிலேயருக்கு எதிராக கிளர்ச்சி செய்ததே வேலூர் கலகம் ஆகும்.
2. தலைப்பாகையுடன் கூடிய சீருடை அறிமுகம், காதணிகளை அணிவதும் சமயச் சின்னங்களை இட்டுக் கொள்வதும் தடை செய்யப்பட்டது. புரட்சியில் வீரர்கள் பங்கு பெற காரணமாயிற்று.
3. ஜுலை 10ம் நாள் விடியற்காலை முதல் மற்றும் 23ம் படைப்பிரிவைச் சேர்ந்த இந்திய சிப்பாய்கள் கலகத்தை தோற்றுவித்தனர். கர்னல் பான்கோர்ட் மற்றும் கர்னல் மிகேரஸ் ஆகியோர் கொல்லப்பட்டனர்.
4. ராணிப் பேட்டையில் இருந்து வந்த கில்லெஸ்பி புரட்சியை அடக்கினார்.
5. திப்புவின் மகன் கல்கத்தாவிற்கு அனுப்பிவைக்கப்பட்டார். படைத்தளபதியும், சென்னை ஆளுநரும் திருப்பியழைக்கப்பட்டனர்.

110. கோல் பழங்குடியினரின் எழுச்சி

1. கோல்கள் பீகார், ஒரிசா, சோட்டா நாக்பூர், சிங்பூம் ஆகிய பகுதிகளில் வாழ்ந்த பழங்குடியினர் ஆவர்.
2. சோட்டா நாக்பூர் ராஜா பல கிராமங்களைப் பழங்குடிகள் அல்லாதாருக்கு குத்தகைக்கு விட்டதே கோல்களின் கிளர்ச்சிக்கு காரணம்.
3. கோல் கிளர்ச்சிக்கு துாண்டுகோலாய் இருந்தவர் பிந்த்ராய் மன்கி ஆவார். கோல் கிளர்ச்சியின் தலைவர் புத்தபகத் ஆவார்.
4. புத்தபகத் கொல்லப்பட்டதும், பிந்த்ராய் மன்கி சரணடைந்ததும் கோல்களின் போராட்டம் முடிவுக்கு வந்தது.

111. 1857 ஆண்டு புரட்சியின் விளைவுகள்

1. கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி முடிவுக்கு வந்தது.
2. இந்தியாவின் ஆட்சி அரசியின் நேரடிக் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டது.
3. இந்திய தலைமை ஆளுநர் அரசப் பிரதிநிதி (வைஸ்ராய்) என அழைக்கப்பட்டார். (கானிங்பிரபு முதல் வைஸ்ராய்).

112. எம்.ஜி .ரானடே

1. பிரார்த்தனை சமாஜத்தை வலுவூட்டினார். "தேசிய சமூக மாநாடு" என்ற அமைப்பை தோற்றவித்தார்.
2. விதவைகள் மறுமணச் சங்கம், தக்காணக் கல்விக் கழகம் நிறுவினார்.
3. பிரார்த்தனை சமாஜம் சமூக சீர்திருத்தங்களை செய்ய வழிகாட்டல்.
4. தன்னலமற்ற சேவை செய்வதற்கான கல்வியை வலியுறுத்தினார்.

113. சுவாமி விவேகானந்தர்

1. நவீன இந்தியாவின் விடிவெள்ளி
2. அமெரிக்காவின் சிகாகோ மாநாட்டில் இந்து சமயத்தின் புகழை உலகம் அறியச் செய்தார்.
3. இவரது ஆதரவில் உருவான இயக்கங்கள் பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள், ஆதரவற்றோர்க்கான இல்லங்கள் ஆகியவற்றை உருவாக்கியதோடு இயற்கை பேரழிவு ஏற்படும் போது மக்களுக்கு ஆதரவுக் கரம் இன்றும் நீட்டுகிறது.

114. அகமதியா இயக்கம்

1. மிர்சா குலாம் அகமது என்பவரால் இவ்வியக்கம் உருவானது.
2. இவர் தன்னை தீர்க்கதரிசி என கூறினார்.
3. இஸ்லாமியர்களை குரானில் சொல்லப்பட்ட உண்மையான கொள்கைகளுக்கு திரும்ப வேண்டும் என அழைப்பு விடுத்தார்.
4. பிற மதப் பரப்பாளர்கள் வைத்த வாதங்களை இவர் எதிர்கொண்டார்.

115. சிங் சபா இயக்கம்

1. நவீன மேற்கத்திய கல்வியை சீக்கியருக்கு கிடைக்க நோக்கமாக கொண்டது.
2. கிறிஸ்தவ மதப்பரப்பாளர்கள் மற்றும் இந்து சமய மீட்டெடுப்பாளர்களின் நடவடிக்கைளை எதிர் கொண்டது.
3. அகாலி இயக்கம் இதன் கிளை இயக்கமாகும்.

116. வைகுண்டசாமிகள்

1. சாமிதோபில் பிறந்த வைகுண்ட சாமிகளை பின்பற்றுவோர் "அய்யா வழி" வந்தவர்கள் என அழைக்கப்படுகின்றனர்.
2. இவருடைய "நிழல் தாங்கல்" வழிபாட்டுக் கூடங்கள் சாதி கட்டுபாடுகளை உடைத்தது.
3. இவரது சீடர்கள் தலைபாகை அணிந்தனர்.
4. 1851 ல் இவரது இறப்பிற்க்குப் பின்னரும் தென் திருவாங்கூர் பகுதியில் கிறிஸ்தவ சமயம் பரவாமல் இருக்க ஐயா வழி பெரும் பங்காற்றி வருகிறது.

## ஐந்து மதிப்பெண் வினாக்கள்

1. வரலாற்றுக்கு முந்தைய இந்தியா :

1. எழுத்து முறை தோன்றுவதற்கு முந்தைய காலகட்டம் வரலாற்றுக்கு முந்தைய காலம் அல்லது கற்காலம் எனப்படுகிறது.
2. கற்காலத்தில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, நேபாளம், வங்கதேசம் ஆகிய தென்கிழக்கு ஆசியா முழுவதும் ஒரே பகுதி.
3. வரலாற்றுக்கு முந்தைய கால மனிதர்கள் இந்தியாவில் 10 முதல் 20 இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பே வாழ்ந்தார்கள்.
4. இந்தியாவில் இக்காலகட்டம் கற்காலம், வெண்கலக் காலம், செம்புக் காலம், இரும்புக் காலம் எனப் பிரிக்கின்றனர்.
5. மக்கள் பயன்படுத்திய பொருட்கள் அடிப்படையில், ஓவியம் தீட்டப்பட்ட சாம்பல் நிற மட்பாண்டப் பண்பாடு எனப் பெயரிட்டனர்.
6. நாகரிகம் நிலவியதாக கண்டறியப்பட்ட முதல் இடத்தைக் குறிப்பிடும் வகையில்

ஹரப்பா பண்பாடு எனப் பெயர் சூட்டினர்.

**2. கீழ் மற்றும் இடைப் பழங் கற்காலப் பண்பாடுகள் - ஒப்பீடு :**

**கீழ்ப் பழங் கற்காலப் பண்பாடு**

1. கீழ்ப் பழங் கற்காலக் கருவிகளை சென்னைகருகில் உள்ள பல்லாவரத்தில் இராபர்ட் புரூஸ் பூட் கண்டறிந்தார்.

2. பரவல் - சென்னைக்கு அருகில் உள்ள அத்திரம்பாக்கம், பல்லாவரம், குடியம், மத்திய பிரதேசத்தில் உள்ள பிம்பெட்கா, கர்நாடகாவில் உள்ள இசாம்பூர் ஆகியன.

3. கற்கருவிகள் - கற்களைச் செதுக்கி கோடாரிகள், துண்டாக்கும் கருவிகள், பிளக்கும் கருவிகள் உருவாக்கினர்.

**இடைப் பழங்கற்காலப் பண்பாடு**

1. நெவாசா என்ற இடத்தில் பிரவாரா ஆற்றங்கரையில் H. D. சங்கலியா என்பவர் அடையாளம் கண்டார்.

2. பரவல் - யமுனை, நர்மதை, கிருஷ்ணா, கோதாவரி, உள்ளிட்ட ஆறுகளின் சமவெளிகளில் காணப்படுகின்றன.

3. கற்கருவிகள் - சுரண்டும் கருவிகள், துளையிடும் கருவிகள், அரம் போன்ற கருவி, செதுக்கும் கத்தி ஆகியன.

**3. கருவித் தொழில்நுட்பத்தில் மேல்பழங் கற்காலம் புதுமையை நிகழ்த்தியது :**

1.மனிதர்களின் அறிவாற்றல் திறன்களில் ஏற்பட்ட மேம்பட்ட தன்மை கருவித்தொழில்நுட்பத்தில் புதுமையை நிகழ்த்தியது.

2. மேல்பழங் கற்காலத்தைச் சேர்ந்த கற்கருவிகளான கத்தி, வாள் போன்றவை வெட்டுவாய் தன்மை கொண்டதாகும்.

3. சிறு கற்களினால் செய்யப்பட்ட கருவிகளை அறிமுகம் செய்தனர். எலும்பிலான கருவிகளையும் பயன்படுத்தினர்.

4.கற்கருவிகள் உருவாக்க சிலிக்கான் கலந்த மூலப் பொருட்கள் வெவ்வேறு வகைகளில் பயன்படுத்தப்பட்டன.

5.கற்களைக் கொண்டு வெட்டும் கருவிகளைச் செய்யும் தொழிற்கூடங்கள் வளர்ச்சி பெற்று காணப்பட்டன.

6.எலும்பினாலான கருவிகள் ஆந்திர பிரதேசத்தில் உள்ள கர்நூல் குகைகளில் கண்டெடுக்கப்பட்டு உள்ளன.

**4. தொடக்க புதிய கற்காலப் பண்பாடுகளின் குறிப்பிடத்தக்க பண்புகள் :**

1.வேளாண்மை, விலங்குகளைப் பழக்கப்படுத்துதல் ஆகியவற்றின் தொடக்கமாக புதிய கற்காலம் அமைந்தது.

2.உணவு தானியங்கள், கால்நடைத் தீவனங்கள் ஆகியவற்றின் உற்பத்தியும் விநியோகமும் அதிகரித்தன.

3.ஆறுகளின் மூலம் படியும் செழிப்பான மண் தானிய உற்பத்தியில் உபரியின் அளவை அதிகரிக்கச் செய்தது.

4.பழம்பெரும் நாகரிகங்களின் தோற்றத்துக்கு உபரி உணவு உற்பத்தி மிக முக்கியமான காரணமாகும்.

5.தொடக்க புதிய கற்காலத்தில் மட்பாண்டங்கள் செய்யும் தொழில் வளர்ந்தது. நிரந்தர இருப்பிடங்கள் கட்டப்பட்டன.

6.இக்காலத்தில் உண்டான பண்பாட்டு வளர்ச்சிகள் மொத்தமாக "புதிய

கற்காலப் புரட்சி" என்று அழைக்கப்படுகிறது.

**5. காஷ்மீரின் புதிய கற்காலப் பண்பாடு ஹரப்பா நாகரீகத்தின் காலத்தைச் சேர்ந்தது :**

1. காஷ்மீர் பகுதியில் நிலவிய புதிய கற்காலப் பண்பாடும் ஹரப்பா நாகரிகமும் ஒரே சமகாலத்தைச் சேர்ந்தவை ஆகும்.

2. காஷ்மீரில் உள்ள பர்சாஹோமைச் சேர்ந்த புதிய கற்கால மக்கள் ஹரப்பா மக்களோடு வணிகத்தில் ஈடுபட்டனர்.

3.கோதுமை, பார்லி, பட்டாணி, பருப்பு ஆகியவற்றின் விதைகள் அகழாய்வுகளின் போது கண்டெடுக்கப்பட்டு உள்ளன.

4.செம்பாலான அம்புகளைச் செய்தார்கள். கார்னிலியன் கல் மணிகளாலான அணிகலன்கள் தயார் செய்தார்கள்.

5.சிவப்பு நிற மட்பாண்டங்கள், வண்ணம் பூசப்பட்ட பானைகள் மற்றும் உலோகப் பொருட்கள் ஆகியன பயன்படுத்தினார்கள்.

6. குளிரிலிருந்து காத்துக் கொள்ள துணியில் விலங்குகளின் தோலைச் சேர்த்து தைக்கும் குத்தூசிகள் பயன்படுத்தப்பட்டன.

**6. தென்னிந்தியாவில் புதிய கற்காலப் பண்பாடு நிலவிய இடங்கள் மற்றும் அதன் முக்கிய கூறுகள் :**

1.புதிய கற்காலப் பண்பாடு தென்னிந்தியாவில் ஆந்திரா, கர்நாடகா, தமிழ்நாட்டின் வடமேற்குப் பகுதிகளில் நிலவியது.

2.கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணாறு, துங்கபத்திரா, காவிரி சமவெளிகள் மற்றும் கர்நாடகாவில் - பிரம்மகிரி, மஸ்கி, வடகல்.

3.ஆந்திராவில் - நாகர்ஜூன கொண்டா, ராமாபுரம், வீராபுரம், தமிழ்நாட்டில் - பையம்பள்ளி ஆகிய இடங்களில் நிலவியது.

4.ஒரு சாம்பல் மேட்டைச் சுற்றிலும் குடியிருப்புகள் சூழ்ந்திருக்கும் கட்டமைப்பு இந்த இடங்களில் காணப்படுகிறது.

5.இங்கு மெல்லிய சாம்பலும், நுண்ணுயிர்களால் சிதைக்கப்பட்ட மாட்டுச்சாண அடுக்குகளும் கிடைத்திருக்கிறது.

6.சாம்பல் மேட்டைச் சுற்றிலும் காணப்பட்ட வீடுகளும் புதை குழிகளும் மனித வாழிடங்களுக்கான சான்றுகள் ஆகும்.

**7. ஹரப்பா நாகரிகம் என்று சிந்து நாகரிகம் அழைக்கப்படக் காரணங்கள் :**

1.வடமேற்கு இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் பொ.ஆ.மு. 3000 ஆண்டுகளில் தோன்றியதே சிந்து நாகரிகம் ஆகும்.

2.இந்நாகரிகம் அடையாளம் காணப்பட்ட முதல் இடம் ஹரப்பா என்பதால் ஹரப்பா நாகரிகம் என்று அழைக்கப்படுகிறது.

3. லாகூரில் இருந்து முல்தானுக்கு ரயில்பாதை அமைக்கும் பணியின் போதுதான் ஹரப்பா நகரம் கண்டறியப்பட்டது.

4.இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த சார்லஸ் மேசன் என்பவர் ஹரப்பாவுக்கு முதன்முதலாக 1826 -இல் வருகை தந்தார்

5.அலெக்ஸாண்டர் கன்னிங்ஹாம் ஹரப்பா பகுதியில் அதனுடன் தொடர்புடைய ஒரு முத்திரையைக் கண்டெடுத்தார்.

6. ஹரப்பாவில் ஆய்வுகள் நடத்திட சர் ஜான் மார்ஷல் காரணமாக இருந்தார். 1940 களில் மார்டிமர் வீலர் அங்கு ஆய்வுகள் நடத்தினார்.

**8. திட்டமிடப்பட்ட நகரங்களான ஹரப்பா, மொகஞ்சதாரோ - சிறப்புகள் :**

1.பாதுகாப்பு அரண்கள், திட்டமிடப்பட்ட தெருக்கள், சந்துகள், கழிவுநீர் வசதி ஆகியன ஹரப்பா நகரங்களின் சிறப்பாகும்.

2.ஹரப்பா மக்கள் கட்டுமானத்துக்கு சுட்ட மற்றும் சுடாத செங்கற்களையும் கற்களையும் பயன்படுத்தி உள்ளனர்.

3.நகரங்கள் சட்டக வடிவமைப்பைக் கொண்டிருந்தன. கழிவுநீர் வடிகால்கள் சுட்ட செங்கற்களால் திட்டமிட்டு கட்டப்பட்டன.

4.மொகஞ்சதாரோ ஓர் உயர்ந்த மேடை மீது நன்கு திட்டமிட்டுக் கட்டப்பட்ட நகரம். வீடுகளில் பல அறைகள் இருந்தன.

5.பெரும் குளத்தின் சுவர்கள் நீர் புகாதபடி ஜிப்சம் செறிந்த சுண்ணாம்பு சாந்தால் பூசப்பட்டு, கழிவுநீர் வடிகால் வசதியுடன் இருந்தது.

6.சுட்ட செங்கற்களால் தளம் அமைக்கப்பட்ட வீடுகளும் குளியலறையும் சரியான கழிவுநீர் வடிகாலுடன் காணப்படுகிறது.

**9. சிந்து நாகரிகத்தை மையமாகக் கொண்டு கீழ்க்கண்டவை பற்றிய சிறுகுறிப்பு :**

**அ) மட்பாண்டம் செய்தல் :**

1.நன்கு சுடப்பட்டு இருந்த மட்பாண்டங்கள் அடர் சிவப்பும் கறுப்பும் கலந்த வண்ணம் பூசப்பட்டு இருந்தன.

2. மட்பாண்டங்கள் மீது இலைகள், மீன்செதில், வடிவியல் கூறுகள், தாவரங்கள், விலங்குகள் போன்ற ஓவியங்களை வரைந்தனர்.

**ஆ) வணிகமும் பரிவர்த்தனையும் :**

1.க்யூனிபார்ம் கல்வெட்டுக் குறிப்புகள் ஹரப்பா - மெசபடோமியா இடையேயான வணிகத் தொடர்பை குறிப்பிடுகிறது.

2.கார்னிலியன் மணிகள், வைடூரியம், செம்பு, தங்கம், பலவகைப்பட்ட மரங்கள் மெசபடோமியா பகுதிக்கு ஏற்றுமதியாயின.

**இ) எடைக் கற்களும் அளவீடுகளும் :**

1.எடையின் விகிதம் இரு மடங்காகும்படி பின்பற்றப்பட்டு உள்ளது. (உதாரணமாக :1: 2: 4: 8: 16: 32 ஆகியன )

2.எடைக் கற்கள் கனசதுர வடிவத்தில், படிகக் கல்லில் செய்யப்பட்டு இருந்தன. இஞ்ச் அளவுகோலை பயன்படுத்தி உள்ளனர்.

**ஈ) முத்திரைகளும் எழுத்துகளும் :**

1.ஹரப்பா நாகரிகத்தைச் சேர்ந்த ஸ்டீட்டைட், செம்பு, சுடுமண், தந்தம் ஆகியவற்றாலான முத்திரைகள் கிடைத்துள்ளன.

2.ஹரப்பா எழுத்து முறையை படித்தறிய முடியவில்லை. போக்குவரத்து பொருட்கள் மீதும் முத்திரைகளை பயன்படுத்தினர்.

**10. இந்தியாவில் பழுப்பு மஞ்சள் நிற மட்பாண்ட பண்பாடுகள் :**

1.வடஇந்தியாவில் செம்புக் காலப் பண்பாட்டுடன் தொடர்புடைய பழுப்பு மஞ்சள் நிற மட்பாண்டங்கள் கண்டறியப்பட்டன.

2.இந்த மட்பாண்டங்கள் சிவப்புநிற அடிப்புறத்தின் மேல் பழுப்பு மஞ்சள் நிறம் கொண்டுள்ளதாக காட்சியளிக்கும்.

3. பழுப்பு மஞ்சள் நிற மட்பாண்டங்களில் ஜாடிகள், கொள்கலன்கள், தட்டுகள், கிண்ணங்கள் ஆகிய வகைகள் உள்ளன.

4.சிந்து - கங்கை சமவெளியில் காணப்படும் இப்பண்பாடு தொடக்க வேதகாலப் பண்பாட்டோடு தொடர்புடையது.

5.செம்பாலான உருவங்களும் ஏனைய பொருள்களும் அதிகம் கிடைப்பதால் "செம்பு பொருட்குவியல் பண்பாடு" எனப்படுகிறது.

6.கிராமப் பண்பாடு நிலவியதால் மரதட்டிகளின் மேல் களிமண் பூசி கட்டப்பட்ட சுவர்கள், மேற்கூரையுடைய வீடுகள் இருந்தன.

**11. தமிழ்நாட்டின் பெருங்கற்கால அகழ்வாய்விடங்கள் :**

1.ஆதிச்சநல்லூர் - தூத்துக்குடி மாவட்டத்தில் அமைந்துள்ளது. இங்கு

தாழிகளும் மட்பாண்டங்களும் அதிகமாக உள்ளன.

2.ஆதிச்சநல்லூர் - ஆணிகள், கல்மணிகள், ஆயுதங்கள், துணி, விலங்குகளின் வெண்கல பொம்மைகள் கிடைத்துள்ளன.

3. பையம்பள்ளி - வேலூர் மாவட்டம் திருப்பத்தூர் தாலுகாவைச் சேர்ந்த கிராமம். இங்கு 1906 இல் அகழ்வாய்வு நடைபெற்றது.

4.பையம்பள்ளி - இங்கு கருப்பு மற்றும் சிவப்புநிற மட்பாண்டங்கள், அதிக அளவு ஈமத் தாழிகள் கண்டறியப்பட்டன.

5.கொடுமணல் - ஈரோடு மாவட்டம் நொய்யல் ஆற்றங்கரையில் அமைந்துள்ளது.

6.அண்மைகால அகழ்வாய்வு 2012 இல் நடந்தது.

7. கொடுமணல் - இங்கு மட்பாண்டங்கள், ஆயுதங்கள், கருவிகள், அணிகலன்கள், மணிகள், செம்மணிக் கற்கள் கிடைத்துள்ளன.

**12. வேதகால அரசியல் மற்றும் நிர்வாகம் :**

**அ) தொடக்க வேதகாலம் :**

1.தொடக்க வேதகால அரசியல் என்பது இனக்குழு சமூகத்தின் அரசியலே ஆகும். அதன் தலைவன் ராஜன் (அரசன்).

2.அரசருடைய முக்கியப் பணி இனக்குழுவைக் காப்பது, எதிரிகளோடு போரிடுவது. சேனானி என்பவரே படைத் தளபதி.

3.தொடக்க வேத காலத்தில் சபா, சமிதி, விததா, கணா ஆகிய அமைப்புகள்அரசியலில் பங்கேற்றன.

**ஆ) பிந்தைய வேதகாலம் :**

1.பிந்தைய வேத காலத்தில் அரசன் வாஜ்பேய, ராஜசூய, அஸ்வமேத யாகங்களை நடத்தினார். முடியாட்சி முறை வலுப்பெற்றது.

2.பேரரசுகள் தோன்றியதால் சபா, சமிதி, விததா, கணா ஆகிய அமைப்புகள் அரசியலில் செல்வாக்கு இழந்தன.

**13. பொ.ஆ.மு ஆறாம் நூற்றாண்டில் ஏற்பட்ட அறிவு மலர்ச்சிக்கான காரணங்கள் :**

1.அரசுகள் உருவாக்கமும், வேத மதத்தின் கடுமையும் மனிதனின் சிந்தனை மற்றும் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தின.

2.வேத மதத்தின் நடைமுறைகளுக்கு எதிரான கிளர்ச்சியாக அறிவு மலர்ச்சி ஏற்பட்டு அவைதீக மதங்கள் உருவாகின.

3.சமூக அமைப்பு குறித்து அதிருப்தி கொண்டிருந்த மேட்டுக்குடி மக்கள் அவைதீக மதங்களை நோக்கி நகர்ந்தார்கள்.

4.வேத மதம் சமூகத்தின் அனைத்து பகுதிகளிலும் பரவவில்லை. எனவே புதிய மதங்களை பின்பற்றுவது கடினமாக இல்லை.

5.ஆசிரமங்களாகப் பிரிக்கப்பட்ட வாழ்க்கை முறை பிராமணர்களுக்கு மட்டுமே வேதங்களில் அனுமதிக்கப்பட்டு இருந்தது.

6.நகரமயமாக்கம், வணிக விரிவாக்கம் காரணமாக புதிய வர்க்கம் உருவாகி தமது பொருளாதார நிலைக்கு ஏற்ற சமூக தகுதியைக் கோரியது.

**14. ஆசீவகம் விளக்கம் - இந்தியாவில் அதன் பரவல் :**

1.துறவிகள் குழுக்கள் ஒன்றிலிருந்து உருவான ஆசீவகம் பிரிவை நந்தவாச்சா என்பவர் தோற்றுவித்தார்.

2.நிர்வாணத் துறவிகளான ஆசீவகர்கள் ஊழ்வினைக் கோட்பாட்டை நம்பினார்கள்.அவர்களின் தலைமையகம் சிராவஸ்தி.

3.ஆசீவகர்களில் தலைசிறந்தவர் மக்காலி கோசலர் ஆவார். ஆசீவகர்களின் அடிப்படைக் கொள்கை நியதி அல்லது விதி.

4.ஆசீவகத்தின்படி, வாழ்வில் தவிர்க்க முடியாத ஆறு அம்சங்கள் இருக்கின்றன. அவை: லாபம், நஷ்டம், இன்பம், துன்பம், வாழ்வு, மரணம்.

5.ஆசீவகத்தின் செல்வாக்கு குறைவுதான் என்றாலும், அப்பிரிவானது நாடு முழுவதும் பரவி இருந்தது.

6. குயவர்கள், வங்கியாளர்கள் போன்ற செல்வ வளமிக்க துறவறம் பூணாத சீடர்கள் ஆசீவகத்திற்குள் இருந்தார்கள்.

**15. சமணத்தில் ஏற்பட்ட பிளவு :**

1.மகாவீரரின் மறைவிற்கு 500 ஆண்டுகள் கழித்து, சுமார் பொ.ஆ. 79 - 82 இல், சமணத்தில் ஒரு பிளவு ஏற்பட்டது.

2.மகதம் கடும்பஞ்சத்தால் பாதிக்கப்பட்டது. பத்ரபாஹு தலைமையில் சில சமணத்துறவிகள் தெற்கு நோக்கிச் சென்றார்கள்.

3.உடைகள் எதுவுமின்றி இருந்ததால் இவர்கள் திகம்பரர்கள் (நிர்வாணமானவர்) என்று அழைக்கப்பட்டார்கள்.

4. மற்ற சமணத் துறவிகள் ஸ்தூலபத்திரர் தலைமையில் மகதத்திலேயே தங்கி சமய நெறிப்படி வாழ்ந்து வந்தார்கள்.

5.வெள்ளை ஆடையை உடுத்திய இவர்கள் ஸ்வேதாம்பரர்கள் (வெள்ளை ஆடை உடுத்தியவர்) என்று அழைக்கப்பட்டனர்.

6.இந்தப் பிளவு மகதத்தில் சமணத்தைப் பலவீனப்படுத்தியது. ஸ்தூலபத்திரர் பாடலிபுத்திரத்தில் ஒரு பெரிய மாநாட்டை நடத்தினார்.

**16. புத்தரின் எண்வழிப் பாதை :**

1.புத்தர் நான்கு பெரும் உண்மைகளை வெளியிட்டார். அதில் துன்பம் பற்றியும் எண்வழிப் பாதை பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

2. நான்கு பெரும் உண்மைகள் : துன்பம், துன்பத்தின் காரணம், துன்பத்தின் முடிவு, துன்பத்திலிருந்து விடுதலை பெறும்வழி.

3.ஆசையே துன்பத்திற்கு காரணம், துன்பத்திலிருந்து விடுதலை பெற எண்வழிப் பாதையைக் கடைபிடிக்க வேண்டும் என்றார்.

4. புத்தர் போதித்த எண்வழிப் பாதை என்பது மத்திமப் பாதை என்றும், அட்டாங்க மார்க்கம் என்றும் அழைக்கப்படுகிறது.

5. புத்தரின் எண்வழிப் பாதை ( அட்டாங்க மார்க்கம் ) :

1. நல்ல நம்பிக்கை 2. நல்ல ஆர்வம் 3. நல்ல வாய்மை
4. நல்ல செயல் 5. நல்ல வாழ்க்கை 6. நல்ல முயற்சி
7. நல்ல சிந்தனை 8. நல்ல தியானம்

**17. இந்தியாவில் பௌத்தம் வீழ்ச்சி அடைந்ததற்கான காரணங்கள் :**

1.ஹீனயானா, மகாயானா, வஜ்ராயனா, சகஜயானா போன்ற பிரிவுகள் பௌத்த சமயத்தில் தோன்றி உண்மைத் தன்மையை இழந்தது.

2.பௌத்த மதச் செய்திகள் ஆரம்பத்தில் பாலி, பிராகிருத மொழிகளிலும் பின்னர் சமஸ்கிருத மொழியிலும் வெளியானது.

3.ஹர்ஷவர்த்தனரின் காலத்துக்குப் பிறகு பௌத்த மதம் அரசர்களின் ஆதரவை இழக்க ஆரம்பித்து வீழ்ச்சி அடைந்தது.

4. ஹூணர்கள் படையெடுப்பு - ஹூணர்கள் பௌத்த மதத்தினர் மீது ஆழமான வெறுப்பைக் கொண்டிருந்தனர்.

5.வேத மதத்தை ஆதரித்த இராஜபுத்திரர்கள் பௌத்த மதத்தினரைத் துன்புறுத்தி கொல்வதில் ஈடுபட்டு வந்தனர்.

6.அரேபியர், துருக்கியர் படையெடுப்புகள் பௌத்த துறவிகளை இந்தியாவில் இருந்து வெளியேற்றிட பெரும் பங்காற்றியது.

**18. மௌரியப் பேரரசு பற்றி நாம் அறிய உதவும் சான்றுகள் :**

1.மௌரிய அரசர்கள் பற்றிய குறிப்புகள் சமண, பௌத்த இலக்கியங்களிலும், பிராமணங்களிலும் இடம்பெற்று உள்ளன.

2.இலங்கையில் கிடைத்த, பாலி மொழி நூலான மகாவம்சம் என்ற வரலாற்றோடு ஒரு முக்கிய கூடுதல் ஆதாரம் ஆகும்.

3.அலெக்சாண்டரின் படையெடுப்பைத் தொடர்ந்து, இந்தியா பற்றி எழுதிய கிரேக்க வரலாற்று அறிஞர்களின் பதிவுகள்.

4.தொல்லியல் சான்றுகள் - நகரத்தின் அமைப்பு, கட்டுமாணங்கள், உலோகங்கள், கருவிகள் மூலம் பண்பாடு பற்றி அறிய முடிகிறது.

5.அசோகரின் கல்வெட்டுக் கட்டளைகள் - நாட்டின் பல பகுதிகளில் கிடைத்துள்ள கல்வெட்டுகள் மௌரிய காலத்தைச் சேர்ந்தவை.

6.குஜராத்தில் கிர்நார்-க்கு அருகில் ஜுனாகத்தில் உள்ள பாறைக் கல்வெட்டு. மேலும் விசாகதத்தர் எழுதிய முத்ராராட்சசம்.

**19. மௌரிய ஆட்சியமைப்பின் முக்கியக் கூறுகள் :**

1.நாட்டின் நிர்வாகத்தின் தலைவர் அரசர். மௌரியத் தலைநகர் பாடலிபுத்திரம் நேரடியாக அரசனால் நிர்வகிக்கப்பட்டது.

2.அரசருக்கு உதவியாக ஒரு மதகுரு, அமைச்சரவை, மஹாமாத்திரியர்கள் என்ற செயலாளர்கள் ஆகியோர் இருந்தனர்.

3.மௌரிய அரசுப் பகுதிகள் நான்கு மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு, அரசரின் பிரதிநிதிகளால் (இளவரசர்கள்) ஆளப்பட்டன.

4.எல்லா பகுதியிலும் ஒரே மாதிரியான வருவாய் மற்றும் நீதி நிர்வாகம் நிலவியது. வரி வசூலுக்கு பொறுப்பானவர் சமஹர்த்தா ஆவார்.

5.எல்லா முக்கிய நகரங்களிலும் தர்மஸ்தியா, கந்தகோசந்தனா என்ற இருவகை நீதிமன்றங்கள் இருந்தன.

6.மௌரியப் பேரரசு நிர்வாக வசதிக்காக மாகாணங்கள், மாவட்டங்கள், நகரங்கள், கிராமங்கள் என்று பிரிக்கப்பட்டன.

**20. இந்தியாவின் மீது பாரசீகர்களின் தாக்கம் :**

1.பாரசீகப் பேரரசின் கீழ் வந்த இந்தியாவின் வடமேற்குப் பகுதி பாரசீக மற்றும் இந்தியப் பண்பாடுகளின் சங்கமமாக மாறியது.

2.பாரசீகத் தொடர்பு பண்டைய இந்தியாவின் கலை, கட்டிடக்கலை, நிர்வாகம், பொருளாதாரம் ஆகியவற்றில் தாக்கம் ஏற்படுத்தியது.

3.காந்தாரம் பகுதியில் வளர்ச்சி பெற்ற கரோஷ்டி எழுத்து முறையை அசோகர் தனது கல்வெட்டுகளில் பயன்படுத்தினார்.

4.நாணயத்தின் இந்தியச் சொல் 'கார்சா' பாரசீக மொழியில் இருந்தே வந்தது. பாரசீகத்தை பின்பற்றி நாணயங்கள் உருவாகின.

5. அசோகர் தூண்களின் உச்சி ஆக்கிமீனைட் பேரரசில் காணப்படும் தூண்களை ஒத்துள்ளன. உதாரணம் - சாரநாத் தூண்.

6.பாடலிபுத்திரம் அரண்மனையின் எஞ்சிய தூண்கள் ஆக்கிமீனைட் தலைநகரில் உள்ள மண்டபத் தூண்களை ஒத்திருக்கிறது.

**21. அசோகரின் கல்வெட்டுக் கட்டளைகள் :**

1.அசோகரின் கல்வெட்டுக் கட்டளைகள் மௌரியப் பேரரசு பற்றிய தகவல்களைக் கொண்ட நம்பகமான சான்றுகள் ஆகும்.

2. 14 பாறைக் கல்வெட்டுகள், 7 தூண் கல்வெட்டுகள் உட்பட மொத்தம் 33 கல்வெட்டுக் கட்டளைகள் கிடைத்துள்ளன.

3.பெரும்பாலும் பிராமி எழுத்து முறையிலும், சிலவற்றை மகதி, பிராகிருதம், கரோஷ்டி எழுத்து முறையிலும் வெளியிட்டார்.

4.அசோகரின் கல்வெட்டுக் கட்டளைகள் பரவியுள்ள விதம், அவர் ஆட்சி செய்த ஒரு பெரிய பேரரசின் பரப்பளவைக் காட்டுகிறது.

5.அசோகரின் இரண்டாவது அரசாணை அவரது பேரரசின் எல்லைக்கு வெளியே இருந்த நிலப்பரப்புகளைக் கூறுகிறது.

6.அமைதி, நேர்மை, நீதி ஆகியவற்றில் அசோகருக்கு இருந்த நம்பிக்கை, மக்கள் நல்வாழ்வு மீதிருந்த அக்கறையைக் கூறுகின்றன.

**22. "சங்க கால அரசியல் முறையானது அரசு உருவாக்கப்படுவதற்கு முன்பிருந்த தலைமை உரிமையே" - இக்கூற்றுக்கு முன்வைக்கும் காரணங்கள் :**

**ஆதரவாக முன்வைக்கும் காரணங்கள் :**

1.சங்க காலத்தில் சமூகப் பிரிவினைகள் வெளிப்படவில்லை.

2.அரசுகளின் எல்லைகள் தெளிவாக வரையறை செய்யப்படாதது. வரி விதிப்பு இருந்ததாகச் சான்றுகள் இல்லை.

3.ஒரு அரசு உருவாகத் தேவையான வேளாண் வளர்ச்சியும் வேளாண் உபரியும் நாசம் ஏற்படுத்தும் போர்களால் தடுக்கப்பட்டன.

**எதிராக முன்வைக்கும் காரணங்கள் :**

1.மருத நிலப் பகுதி வாழ் சமூகத்தில் தோன்றிய வேற்றுமைகள்.

2.தங்கள் நிலத்தின் மீது மூவேந்தர்கள் கொண்டிருந்த பற்று மற்றும் செல்வாக்கு.

3.ஆட்சிப் பகுதியை விரிவுபடுத்த மேற்கொண்ட போர்கள்.

4.வணிகப் பெருவழிகள், மலையகப் பகுதிகள், காவிரிப் பூம்பட்டினம் மற்றும் முசிறி துறைமுகங்களில் வரி வசூலிக்கப்பட்டது.

**23. மூவேந்தர் அரசுகளுடைய நிர்வாகக் கட்டமைப்பு :**

1.மூவேந்தர்கள் தங்களுக்குள் போரிட்டுக் கொண்டதோடு கிழார்கள் மற்றும் வேளிர்களையும் அடிபணியச் செய்தனர்.

2.போருக்காக படை வீரர்களை அணி திரட்டினர். சில போர்களில் வேளிர்குலத் தலைவர்களின் உதவியையும் நாடினர்.

3. மூவேந்தர்களும் புலவர்கள் மற்றும் கலைஞர்களை ஆதரித்தனர். அவர்களை அரசவையிலும் அமர வைத்தனர்.

4. மூவேந்தர்கள் தங்களது வலிமையைப் பறைசாற்றிக் கொள்ள வேண்டி சிறப்புப் பட்டங்களைச் சூடிக் கொண்டனர். கடுங்கோ, இமயவரம்பன், வானவரம்பன், பெருவழுதி போன்ற பட்டப்பெயர்களைச் சூட்டிக் கொண்டனர்.

5.தங்களை ஏனைய மக்களிடம் இருந்தும் வேளிர்குல தலைவர்களிடம் இருந்தும் வேறுபடுத்திக் காட்டிக் கொண்டனர்.

**24. களப்பிரர் - யார்? அவர்கள் குறித்து பூலாங்குறிச்சி கல்வெட்டில் அறிவன :**

1.சங்க காலத்திற்கும், பல்லவர் மற்றும் பாண்டியர்கள் காலத்திற்கும் இடைப்பட்ட காலமே, தமிழக வரலாற்றில் களப்பிரர் காலம்

2.மூவேந்தர்களையும் வீழ்த்திய களப்பிரர்கள் தமிழகத்தில் தோராயமாக, பொ.ஆ.

300 - 600 வரை ஆட்சி செய்தனர்.

3.தமிழ்ப் பண்பாட்டின் பல சிறந்த கூறுகள், பதினென் கீழ்க் கணக்கு நூல்கள் களப்பிரர்கள் காலத்தில் தோன்றின.

4.பொ.ஆ. ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த பூலாங்குறிச்சிக் கல்வெட்டு சிவகங்கை மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டது.

5.இந்த பூலாங்குறிச்சி கல்வெட்டில் சேந்தன், கூற்றன் என்ற இரு அரசர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டு உள்ளது. அவர்களது குடும்பம், வம்சாவளி பற்றிய குறிப்பு ஏதுமில்லை. சில அறிஞர்களோ களப்பிர அரசர்கள் என்று கூறுகின்றனர்.

**25. சங்க காலம், சங்க காலத்தைத் தொடர்ந்து உடனடியாக வந்த காலத்தைச் சேர்ந்த வணிகர்கள் மற்றும் தொலைதூர வணிகம் :**

1.வணிகத்தோடு தொடர்புடைய வணிகன், சாத்தன், நிகம போன்ற சொற்கள் தமிழ்-பிராமி கல்வெட்டுகளில் உள்ளன.

2.உமணர் என்றழைக்கப்பட்ட உப்பு வணிகர்கள் மாடுகள் பூட்டிய வண்டிகளில் குடும்பத்தோடு வணிகம் மேற்கொண்டனர்.

3.சாத்து என்னும் சொல் இடம் விட்டு இடம் சென்று வணிகம் செய்பவர்களைக் குறிப்பதாக சொல்லப்படுகிறது.

4.பண்டமாற்று முறையே அதிக அளவில் பழக்கத்தில் இருந்தது. ரோம தங்க வெள்ளி நாணயங்கள் பரிமாற்றத்திற்கு உதவின.

5.ரோம நாட்டு ஜாடிகள், கண்ணாடிப் பொருள்கள், கடல் கடந்த தொலைதூர வணிக நடவடிக்கையைச் சுட்டுகின்றன.

6.ரோமானியத் தங்க, வெள்ளி நாணயக் குவியல்கள் கோயம்புத்தூர் பகுதியிலும் தென் இந்தியாவிலும் கண்டறியப்பட்டு உள்ளன.

**26. மேற்கு இந்தியாவில் இந்தோ - கிரேக்க அரசர்களின் எழுச்சி வணிக, பண்பாட்டுத் தொடர்புகளை வலுப்படுத்தியது :**

1.மேற்கு இந்தியாவில் இந்தோ-கிரேக்க அரசர்களின் எழுச்சி எகிப்து வரையில் முறையான வணிகம் நடைபெற உதவியது.

2.வட மேற்கு ஆப்கானிஸ்தான் வழியாக தரைவழி வணிகமும்; பாரசீக வளைகுடா, செங்கடல் வழியாக கடல்வழி வணிகமும் நடைபெற்றது.

3.முத்துகள், தந்தம், ஆமை ஓடுகள், அவுரிச் சாயம், விளாமிச்சை வேர்த் தைலம், தாளிசபத்திரி ஆகியன ஏற்றுமதி செய்யப்பட்டன.

4.கிரேக்கர்களின் பண்பாட்டுத் தாக்கம், பாடலிபுத்திரத்தில் உள்ள நினைவுச் சின்னங்களில் இருந்து தெரிய வருகிறது.

5. மேற்கு இந்தியாவில் இந்தோ-கிரேக்க அரசாட்சிகள் தோன்றியமை, மாறுபட்ட பண்பாட்டின் தாக்கங்களை வலுப்படுத்தின.

6.இந்தியப் பண்பாட்டில் ஒரு வேறுபட்ட, தனித்தன்மை கொண்ட கலைச் சிந்தனைப் போக்கைத் தோற்றுவித்தது.

**27. கலைக்கும் இலக்கியத்துக்கும் கனிஷ்கர் ஆற்றிய பங்களிப்பு :**

1. கனிஷ்கர் ஆதரித்த பௌத்த தத்துவ ஞானிகள் - நாகார்ஜுனர், வசுமித்திரர், பார்ஸ்வர், புத்தசரிதம் எழுதிய அஸ்வகோஷர்.

2.கனிஷ்கர் வெளியிட்ட அவரது உருவம் பொறித்த நாணயங்கள் மூலம் உலோக வார்ப்புக் கலையை அறியலாம்.

3.மதுரா அருகே உள்ள சிலையில் கனிஷ்கர் வார் பூட்டிய அங்கி, நீண்ட மேலங்கி, காலணிகள் அணிந்து காணப்படுகிறார்.

4.சிலை வடிப்புக் கலையில் கிரேக்க தாக்கம் காரணமாக இந்திய - கிரேக்கக்

கூறுகள் ஒன்றிணைந்து புதிய முறை உருவானது.

5.இந்தோ - கிரேக்க பாணியிலான சிற்பங்களும் கலையும் தோன்றின. கனிஷ்கர் காலத்தில் காந்தாரக் கலை வளர்ச்சி பெற்றது.

6.தட்சசீலம் பகுதிகளில் புத்தரது சிலைகளும், மதுரா அருகே செம்மணற் கல்லில் நுட்பமாக பல சிற்பங்களும் செதுக்கப்பட்டன.

**28. மத்தியத் தரைக்கடல் உலகின் பெருஞ்சக்தியாக ரோமானிய அரசு மேலெழுந்த விதம் :**

1.பொ.ஆ. தொடக்கத்தில் ஏற்பட்ட இரு முக்கிய வளர்ச்சி, ஐரோப்பிய - இந்திய வணிகத்தின் வரையறைகளை மாற்றியது.

2.கிரேக்க அரசுகளை அகற்றிவிட்டு மத்திய தரைக்கடல் உலகின் பெருஞ்சக்தியாக ரோமானிய அரசு மேலழுந்தது.

3.ரோமானியக் குடியரசானது பொ.ஆ.மு. 27-இல் பேரரசர் அகஸ்டஸின் கீழ் ஒரு மாபெரும் பேரரசாக மாறியது.

4.ஐரோப்பாவிலும் வட ஆப்பிரிக்காவிலும் கிடைத்த வெற்றிகளால் ரோமானிய அரசு உலகின் பெருஞ்சக்தியாக வளர்ந்தது.

5. இந்த வெற்றிகள் மூலம் மிகப் பெரும் செல்வங்களைக் குவித்திருந்த ரோம்தான் செல்வ செழிப்பு மிக்க நகரமாகும்.

6.ரோமின் செல்வச் செழிப்பு, தமிழ் நாட்டின் நறுமணப் பொருள்கள் மற்றும் துணி வகைகளின் தேவையை அதிகரித்தது.

**29. பொ.ஆ. 1ஆம் நூற்றாண்டு தமிழ் அரசாட்சிகள் குறித்த விவரங்கள் :**

1.வட இந்தியாவில் நிகழ்ந்து வந்த அரசியல் மாறுதல்களால் தென் இந்தியாவில் எந்த பாதிப்பையும் ஏற்படுத்த முடியவில்லை.

2.பொ.ஆ. முதல் நூற்றாண்டில், தமிழ்ப் பகுதியானது அரசியல் ரீதியாக பல சிறு சிற்றரசுகளாகத் துண்டுபட்டு இருந்தது.

3.வஞ்சியில் சேரர்கள், உறையூரில் சோழர்கள், மதுரையில் பாண்டியர்கள் என மூவேந்தர்கள் ஆட்சி செய்தனர்.

4.பொ.ஆ.மு. 3ஆம் நூற்றாண்டிலேயே மௌரிய அரசர்கள் தமிழ் மூவேந்தர்கள் குறித்து அறிந்து வைத்திருந்தனர்.

5.அசோகரின் 2-வது பாறைக் கல்வெட்டாணை தனது பேரரசின் எல்லையில் இருந்த அரசுகள் எனக் குறிப்பிடுகிறது.

6.தமிழ் மூவேந்தர்கள் தவிர சிறிய பகுதிகளை ஆட்சி செய்த போர் பிரபுக்களும் சிற்றரசர்களும் (வேளிர்கள்) இருந்தனர்.

**30. "குப்தர் காலம் பண்டைய இந்தியாவின் பொற்காலம்" :**

1.குப்த பேரரசு ஒரு பெரும் சக்தியாக உருவாகி, துணைக் கண்டத்தின் பெரிய பகுதியை அரசியல் ரீதியாக ஒன்றிணைத்தது.

2. குப்த பேரரசு மத்தியில் ஒரு வலுவான அரசாக திகழ்ந்ததால், பல அரசுகள் அதன் ஆதிக்கத்தின் கீழ் இருந்தன.

3.செயல்திறன் மிக்க வணிகக் குழுகள், கடல் கடந்த வாணிபம் ஆகியவற்றால் குப்த பொருளாதாரம் எழுச்சி கண்டது.

4.கலை, அறிவியல், கல்வி ஆகியவை சிறப்பான வளர்ச்சி பெற்றது. சமஸ்கிருத மொழியில் பல பெரிய நூல்கள் தோன்றின.

5.குப்தர்கள் காலத்தில் கட்டிடக்கலை, சிற்பம், நுண்கலை ஆகியவற்றில் நல்ல பண்பாட்டு முதிர்ச்சி காணப்பட்டது.

6.அனைத்து பிரிவு மக்களும் சுதந்திரமாக வாழ்ந்தனர். உயர் வர்க்கத்தினரின்

வாழ்க்கை முறை உச்சத்தில் இருந்தது.

**31. குப்தர் காலத்தில் நிலங்கள் பிரிக்கப்பட்ட விதம், நிலக் குத்தகை முறைகள் :**

**குப்தர் காலத்தில் நிலங்கள் பிரிக்கப்பட்ட விதம் :**

1.குப்தர் கால நிலங்கள் க்ஷேத்ரா - பயிரிடக்கூடிய நிலம், கிலா - தரிசு நிலம், அப்ரஹதா - காடு அல்லது தரிசு நிலம்.

2.வாஸ்தி - குடியிருக்கத் தகுந்த நிலம், கபடசஹாரா - மேய்ச்சல் நிலம்.

**குப்தர் காலத்தில் நிலக் குத்தகை முறைகள் :**

3.நிவி தர்மா - அறக்கட்டளை போன்ற அமைப்பின் மூலம் நில மானியம். நிவி தர்ம அக்சயனா - நிரந்தரமான அறக்கட்டளை பெற்றவர் அதிலிருந்து வரும் வருவாயைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

4.அப்ரதா தர்மா - வருவாயைப் பயன்படுத்தலாம். அதை பிறருக்குத் தானம் செய்ய முடியாது. நிர்வாக உரிமையும் இல்லை.

5.பூமி சித்ராயனா - இது தரிசு நிலத்தை முதன் முதலாகச் சாகுபடி நிலமாக மாற்றுபவருக்குத் தரப்படும் உரிமை.

**32. குப்தர் காலத்து வணிகக் குழுக்களின் பங்கு :**

1.கைவினைக் கலைஞர்கள், வணிகர்கள், பெரு வணிக குழுக்கள் பற்றிக் கூறும் செப்பேடுகள், முத்திரைகள் அதிகம் கிடைத்துள்ளன.

2.பொருள்களின் உற்பத்தி அதிகரிப்பு மற்றும் வணிக விரிவாக்கத்தில் வணிகக் குழுக்களின் பங்கு முக்கியமானது.

3.வணிகக் குழுக்கள் தன்னாட்சி அதிகாரம் பெற்றுச் செயல்பட்டன. இவர்களது சட்ட திட்டங்களை அரசும் மதித்தது.

4.கைவினைஞர்கள் குழுக்கள், வங்கியாளர்கள் குழுக்கள், வணிகர்கள் குழுக்கள் எனப் பலவித குழுக்கள் இருந்தன.

5.பலவித குழுக்களைக் கொண்ட குழும அமைப்புகள் இயங்கின. வணிகக் குழுக்கள், வங்கிகளின் பங்கினை ஆற்றியது.

6.வணிகக் குழுக்களும் குழுமங்களும் பயணிகள் நிழல் குடைகள், சத்திரங்கள், விடுதிகள், கோயில்கள், தோட்டங்கள், மண்டபங்கள் கட்ட உதவின.

**33. ஹர்ஷரின் வடஇந்தியப் படையெடுப்புகள் :**

1.ஹர்ஷர் அரசர்களுக்கு சரணடையவோ அல்லது போரிடவோ வாய்ப்பளித்து இறுதி எச்சரிக்கை ஒன்றை அனுப்பினார்.

2.ஹர்ஷர் அருகில் இருந்த சிற்றரசுகளின் பலவீனத்தை அறிந்து அவற்றின் மீது படையெடுத்து தன் பேரரசோடு இணைத்தார்.

3.மாளவ அரசன் தேவ குப்தனைக் கொன்ற ஹர்ஷர் தீக்குளிக்க முயன்ற தனது சகோதரியைக் காப்பாற்றினார்.

4.வங்காளத்தின் கௌட அரசன் சசாங்கனை வீழ்த்திய ஹர்ஷர் தலைநகரை தானேஸ்வரத்தில் இருந்து கன்னோசிக்கு மாற்றினார்.

5. வல்லபியை ஆண்ட மைத்ரகர்கள் புரோச் பகுதியை ஆண்ட கூர்ஜரர்கள் ஆகிய அரசர்களை ஹர்ஷர் வெற்றி கொண்டார்.

6.சிந்து, நேபாளம், காஷ்மீர், மகதம், ஒத்ரா, கொங்கோடா ஆகிய பகுதிகளின் அரசர்களை ஹர்ஷர் வெற்றி கொண்டார்.

**34. ஹர்ஷரின் சமயக் கொள்கைகள் :**

1.ஹர்ஷர் சிவனை வழிபட்டார். தங்கை ராஜ்யஸ்ரீ, சீனப் பயணி யுவான் சுவாங்

முயற்சியால் பௌத்த மதத்தைத் தழுவினார்.

2. எல்லா மதங்களையும் ஆதரித்தார். அம்மதங்களைச் சேர்ந்த அறிஞர்களின் சொற்பொழிவுகளுக்கு ஏற்பாடு செய்தார்.

3.ஹர்ஷர் பொ.ஆ. 643-இல் இரண்டு பௌத்த மதக் கூட்டங்களைக் கூட்டினார். மாமிசம் உண்பது தடை செய்யப்பட்டன.

4.கன்னோசி கூட்டத்தில் இருபது அரசர்களும், பௌத்தம், சமணம், வேதம் கற்ற பல மாநில அறிஞர்களும் பங்கேற்றனர்.

5.ஹர்ஷர் ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை மகாமோட்ச பரிஷத் என்ற பௌத்த மதக்கூட்டத்தை பிரயாகையில் கூட்டினார்.

6. ஹர்ஷர் தான் சேகரித்த செல்வத்தை பௌத்த மதத்தினர், வேத அறிஞர்கள், ஏழைகள் ஆகியோருக்கு பகிர்ந்து அளித்தார்.

**35. வடஇந்தியாவின் நிலை குறித்த யுவான் சுவாங்கின் கருத்துகள் :**

1.பயணிகளின் இளவரசன் எனப்படும் யுவான் சுவாங் வட இந்தியாவின் நிலை குறித்து சி-யூ-கி நூலில் விவரித்துள்ளார்.

2.மக்களுக்கு முழு வழிபாட்டுச் சுதந்திரம் வழங்கப்பட்டது. வேறுபட்ட மதத்தினர் இடையே சமூக நல்லிணக்கம் நிலவியது.

3.சமூகத்தில் நான்கு பிரிவினருக்கான தொழில்கள், திருமண முறைகள், பெண்கள் முகத்திரை அணியும் வழக்கம் பற்றி கூறியுள்ளார்.

4.மக்கள் எளிமையான வாழ்க்கை வாழ்ந்தனர். பருத்தி, பட்டு ஆடைகள் மற்றும் அணிகலன்களை இருபாலரும் அணிந்தனர்.

5.இந்தியர்கள் பெரும்பாலும் மரக்கறி உணவுப் பழக்கத்தைக் கொண்டிருந்தனர். இறைச்சி உண்பது தடை செய்யப்பட்டன.

6.இந்திய நகரங்கள், சிறு நகரங்கள், கிராமங்கள் ஆகியவற்றின் அமைப்பு, அழகு, பாதுகாப்பு நடைமுறைகள் பற்றி விவரிக்கிறார்.

**36. பௌத்த மதத்திற்கு பாலர்கள் ஆற்றிய பங்களிப்பு :**

1.வங்காளத்தில் ஆட்சி செய்த பாலர் வம்சத்து அரசர்கள் பௌத்த மதத்தின் மகாயாணப் பிரிவை ஆதரித்தனர்.

2.சிறந்த அரசரான தர்மபாலர் தனது ஆன்மீக குரு ஹரிஷ்பத்ரர் என்ற பௌத்த மதத் தத்துவ ஞானியை ஆதரித்தார்.

3.தர்மபாலர் பீகாரில் விக்ரமசீலா பௌத்த மடாலயத்தையும் சோமபுரியில் ஒரு பெரிய பௌத்த விகாரையும் நிறுவினார்.

4.தேவபாலர் நாளந்தா பௌத்த மடாலயத்தைப் பராமரிப்பதற்கு வேண்டி ஐந்து கிராமங்களை கொடையாக வழங்கினார்.

5.விக்ரமசீலா, நாளந்தா மடாலயங்கள் பௌத்த மதக் கொள்கைகள் போதிக்கும் சிறந்த கல்வி மையங்களாக விளங்கின.

6.முதலாம் மகிபாலர் சாரநாத், நாளந்தா, புத்த கயா ஆகிய இடங்களில் புனித வழிபாட்டுத் தலங்களை உருவாக்கினார்.

**37. ராஷ்டிரகூடர்களின் சிறப்புகள் :**

1. ராஷ்டிரகூடர்கள் சிவன் மற்றும் விஷ்ணு வழிபாடு, சமண மதம் ஆகியவற்றை ஆதரித்தனர். எனவே மத நல்லிணக்கம் நிலவியது.

2.ராஷ்டிரகூட ஆட்சியாளர்கள் கல்வியைப் போற்றினார்கள். கன்னட, சமஸ்கிருத இலக்கியங்கள் பெரும் வளர்ச்சி கண்டன.

3.ராஷ்டிரகூடர்கள் இந்தியச் சிற்பக் கலைக்கும், ஓவிய கலைக்கும் வியத்தகு பங்களிப்பைச் செய்துள்ளனர்.

4.மஹாராஷ்டிராவில் உள்ள எல்லோரா, எலிஃபண்டா குடைவரைக் கோயில்கள் ராஷ்டிரகூடர்கள் கலைக்கு உதாரணம்.

5.எல்லோராவில் ஒரே கல்லில் செதுக்கப்பட்ட கைலாசநாதர் கோயிலும் அங்கு தீட்டப்பட்டுள்ள ஓவியங்களும் சிறப்பானவை.

6.முதலாம் அமோகவர்ஷர் கவிராஜ மார்க்கம் என்ற கன்னட நூலை இயற்றினார். கன்னட இலக்கியத்தின் மூன்று ரத்தினங்கள் தோன்றினர்.

**38. பல்லவ அரசர்கள் வெளியிட்ட நிலக்கொடை ஆணைகளின் முக்கியத்துவம் :**

1.பல்லவ அரசர்கள், அதிகாரிகளுக்கு வருவாய் மானியமும், பிராமணர்களுக்கு நில மானியமும் வழங்கினார்கள்.

2.அரசரது நிலங்கள் குத்தகை விடப்பட்ட கால அளவு பொறுத்து கிராமங்களின் தகுதி நிலைகள் மாறுபடும்.

3.'பிரம்மதேய கிராமங்கள்' ஒரு பிராமணருக்கோ அல்லது பிராமணர்களின் ஒரு குழுவிற்கோ கொடையாக வழங்கப்பட்டன.

4. 'பிரம்மதேய கிராமங்கள்' வரி செலுத்த வேண்டியது இல்லை என்பதால் மற்ற கிராமங்களைவிட செழிப்பாக இருந்தன.

5.தேவதான கிராமங்கள் கோயில்களுக்குக் கொடையாக வழங்கப்பட்டன. இதன் வருவாயை கோயில் நிர்வாகிகள் பெற்றனர்.

6.கிராமம் சார்ந்த வாழ்க்கையின் மையமாக கோயில்கள் மாறியபோது தேவதான கிராமங்கள் தனி முக்கியத்துவம் பெற்றன.

**39. பல்லவரின் கப்பல் சார்ந்த செயல்பாடுகள் :**

1.மாமல்லபுரம் ஒரு முக்கியத் துறைமுகமாக விளங்கியது. தென்கிழக்கு ஆசிய நாடுகளோடு கடல் கடந்த வணிகம் நடைபெற்றது.

2. வணிகத்தில் நறுமணப் பொருள்கள், பருத்தி ஆடைகள், விலை உயர்ந்த கற்கள், மூலிகைகள் ஆகியன ஏற்றுமதி செய்தனர்.

3.இலங்கை, சீனா, ஜாவா, சுமத்ரா, கம்போடியா, மியான்மர் ஆகிய நாடுகளுக்கு பொருட்களை ஏற்றுமதி செய்தனர்.

4.அயல் நாடுகளுக்குச் சரக்குகளைச் சுமந்து சென்ற இந்திய வணிகர்கள் சரக்குகளை வழங்குபவர்களாக மாறினர்.

5.மேற்கு கடற்கரையில் மேலைநாடுகள் உடனான வணிகத் தொடர்பில் அராபிய வணிகர்களே முன்னிலை வகித்தனர்.

6.மேலைநாடுகள் உடனான வணிகம் சார்ந்த செய்தித் தொடர்பு நேரடியாக இல்லாமல் அரேபியாவின் வழியாக அமைந்தது.

**40. மாமல்லபுரம் கடற்கரைக் கோயில்களின் கட்டடக்கலை மேன்மைகள் :**

1.மாமல்லபுரம் (மகாபலிபுரம்) கடற்கரைக் கோயில் பல்லவ அரசன் ராஜசிம்மன் ஆட்சிக் காலத்தில் எழுப்பியதாகும்.

2.இந்த கோயில் தென் இந்தியக் கட்டுமானக் கோயில்களில் முதன்மையானது. பல்லவர்களின் அடையாளமாக உள்ளது.

3.இந்த கோயிலில் உள்ள மூன்று கருவறைகளில் முக்கியமானவை சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் படைக்கப்பட்டவை ஆகும்.

4.விஷ்ணு கருவறையின் வெளிச் சுவர் மற்றும் சுற்றுச் சுவர்களில் விரிவாகச் செதுக்கப்பட்ட தொடர் சிற்பங்கள் உள்ளன.

5.மற்ற கோயில்களைப் போலின்றி இக்கோயிலானது பாறையில் செதுக்கப்பட்ட ஐந்து அடுக்குகளைக் கொண்டுள்ளது.

6.ஒரே கல்லில் செதுக்கப்பட்ட விமானங்கள் பல்லவர்கள் கட்டிய மாமல்லபுரம்

கடற்கரைக் கோயில்களின் சிறப்பாகும்.

**41. கஜினி மாமுதினுடைய கொள்ளைத் தாக்குதல்கள் மத ஆதிக்கம் என்பதைக் காட்டிலும் அதிகமும் அரசியல், பொருளாதாரத் தன்மை கொண்டவை :**

1.கஜினி மாமுது, இந்தியா மீது 17 முறை தாக்குதல்கள் நடத்தினார். இந்துக் கோயில்களின் செல்வங்களைக் கொள்ளை அடித்தார்.

2.வழிபாட்டு இடங்களைச் சூறையாடுவதும் கடவுள் திருவுருவங்களை அழிப்பதும் அதிகாரத்தின் வெளிப்பாடாக கருதப்பட்டன.

3.கஜினி மாமுது கொள்ளை அடித்தது, பெரும் படையைப் பராமரிக்கிற செலவை ஈடுசெய்யும் தேவையினால் ஏற்பட்டது.

4.துருக்கியப் படை என்பது நிரந்தரமான, தொழில் நேர்த்திப் பெற்றதாகும். அது வில்லாளிகள் பிரிவை மையமாகக் கொண்டது.

5.ஆயுதங்களை வாங்கவும், வில்லாளிகள் மற்றும் படை வீரர்களுக்கு ஊதியம் வழங்கவும் கொள்ளைத் தாக்குதல் நடத்தினார்.

6.கஜினி மாமுதுவின் கொள்ளையடிப்புகள் அக்கால அரசர்களின் வழக்கமான கொள்ளையிடும் தன்மையை காட்டுகின்றன.

**42. இந்திய வரலாற்றில் இரண்டாம் தரெய்ன் போர் திருப்பு முனையாக அமைந்தது :**

1.முதலாவது தரெய்ன் போரில் தோல்வியடைந்த முகமது கோரி 1192-இல் அஜ்மீர் மீது மீண்டும் படையெடுத்தார்.

2.கோரியின் ஆற்றலை குறைத்து மதிப்பிட்ட பிருத்விராஜ் சௌகான் ஒரு சிறிய படைக்கு தலைமையேற்றுச் சென்றார்.

3.இரண்டாம் தரெய்ன் போரில், கோரிக்கு எதிராக தோல்வியடைந்த பிருத்விராஜ் சௌகான் சிறை பிடிக்கப்பட்டார்.

4.அஜ்மீரின் ஆட்சியை மீண்டும் பிருத்விராஜிடம் ஒப்படைத்தார். ஆனால் பின்னர் இராஜதுரோக குற்றம் சாட்டிக் கொன்றார்.

5.கோரி தனது நம்பிக்கைக்குரிய தளபதி குத்புதீன் ஐபக்கை இந்தியப் பகுதிக்கு துணை ஆட்சியாளராக நியமித்தார்.

6.இரண்டாம் தரெய்ன் போரில், முகமது கோரிக்கு கிடைத்த வெற்றி இந்தியாவில் முஸ்லிம்கள் ஆட்சி ஏற்பட வழிவகுத்தது.

**43. கஜினி மாமுது - கோரி முகமது ஒப்பிட்டும் வேறுபடுத்தியும் காட்டுதல் :**

**கஜினி மாமுது**

1.கஜினியின் அரசனான கஜினி மாமுது துருக்கிய இனத்தைச் சேர்ந்த ஒரு மாபெரும் படையெடுப்பாளர்.

2.கஜினி மாமுது இந்தியாவில் இருந்து செல்வங்களைக் கொள்ளையடிக்கும் நோக்குடன் படையெடுத்தார்.

3.கஜினி மாமுது இந்தியாவின் மீது 17 முறை படையெடுத்தார். அப்போது நடைபெற்ற அனைத்து போர்களிலும் வெற்றி கண்டார்.

**கோரி முகமது**

1.கோரியின் அரசனான கோரி முகமது துருக்கிய இனத்தைச் சேர்ந்த ஒரு மாபெரும் படையெடுப்பாளர்.

2.கோரி முகமது இந்தியாவில் ஒரு வலிமையான முஸ்லிம் ஆட்சியை நிறுவும் நோக்குடன் படையெடுத்தார்.

3. கோரி முகமது முதல் தரெய்ன் போரில் தோல்வியைத் தழுவினார். ஆனால் இரண்டாம் தரெய்ன் போரில் மாபெரும் வெற்றி கண்டார்.

**44. அலா-உத்-தின் கில்ஜியின் பொருளாதாரச் சீர்திருத்தங்கள் :**

1.அலாவுதீன் கில்ஜி படை வீரர்களுக்குக் கொள்ளையில் பங்கு தராமல் பணமாக ஊதியம் வழங்கிய முதல் சுல்தான்.

2.ஒரு பெரிய, திறமையான படையைப் பராமரிக்க வேண்டியதால் வீரர்களுக்குக் குறைந்த ஊதியமே அளித்தார்.

3.அத்தியாவசியப் பண்டங்களின் விலையைக் கட்டுப்படுத்தவே கள்ளச்சந்தை, பதுக்கல் குறித்த விவரங்களைச் சேகரித்தார்.

4.பொருட்களின் விலை குறித்துச் சந்தை கண்காணிப்பாளர்களும் ஒற்றர்களும் அன்றாடம் அறிக்கை அளித்தல் வேண்டும்.

5.சந்தைகளில் நடந்த கொடுக்கல்-வாங்கல், வாங்குவது, விற்பது, பேரங்கள் பற்றி ஒற்றர்கள் மூலம் அறிந்து கொண்டார்.

6. விலை ஒழுங்குமுறை விதிகளை மீறுவோர் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். எடை குறைந்தால் அதே அளவு சதை வெட்டி வீசப்பட்டது.

**45. பெரோஸ் துக்ளகின் ஆட்சியை மதிப்பிடுதல் :**

1.பெரோஸ் துக்ளக் பிரபுக்கள், மதத் தலைவர்களிடம் சமரசமாக இருந்தார். அவர்களது சொத்துகளை திரும்பத் தந்தார்.

2.அலுவலர்களைப் பரம்பரையாகப் பணியமர்த்தும் முறையை பெரோஸ் மீண்டும் அறிமுகம் செய்தார். ஊதியத்தை உயர்த்தினார்.

3.அரசு நிதியை வீணாகச் செலவழிக்கவில்லை. பல வரிகளைக் குறைத்தார். பல்வேறு சித்திரவதை முறைகளை ஒழித்தார்.

4.அடிமைகளுக்கு கைவினைத் தொழில்களில் பயிற்சி தரப்பட்டு, அரசாங்கத்தின் தொழில்கூடங்களில் பணி அமர்த்தப்பட்டனர்.

5.இசுலாமியர் அல்லாதவருக்கு ஜிஸியா எனும் வரியை விதித்தார். பிராமணர்களும் அதைச் செலுத்துமாறு கட்டாயப்படுத்தினார்.

6. பல கல்வி நிறுவனங்கள், மசூதிகள், அரண்மனைகள், மற்றும் கோட்டைகள் நிறுவினார். பல கால்வாய்கள் அமைத்தார்.

**46. தில்லி சுல்தானியத்தின் நிர்வாக அமைப்பு குறித்து விவரணை :**

1.தில்லி சுல்தானிய அரசு கலிபாவின் தலைமையை ஏற்றுக் கொண்ட முறையான இசுலாமிய அரசாகக் கருதப்பட்டது.

2.சுல்தான் முழு அதிகாரமுள்ள ஆட்சியாளராக விளங்கினர். இந்தியா முழுவதும் தில்லியின் நேரடி ஆட்சியின் கீழ் வந்தது.

3.சுல்தான் இராணுவத் துறைத் தலைவர் என்பதால் ஆயுதம் தாங்கிய படைகளின் தலைமைத் தளபதியாக விளங்கினார்.

4.சுல்தான் நீதித் துறைத் தலைவர் என்பதால் மேல்முறையீட்டு உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதியாகச் செயல்பட்டார்.

5.வாரிசுரிமை தொடர்பாக சட்டம் இல்லாத காரணத்தால் சுல்தானிய காலத்தில் வாரிசுரிமைப் போட்டி வழக்கமாக நடந்தது.

6.உற்பத்தியில் பாதி நிலவரி ஆகும். இக்தாவின் உடைமையாளரான முக்திகள் என்போர் வரிகள் வசூலித்தனர்.

**47. சோழர் காலத்தில் உருவாக்கப்பட்ட பாசன, விவசாய நிர்வாகத் திட்டங்கள் அதிக வருமானத்துக்கு வழிவகுத்தன :**

1.சோழ நாடு வேளாண்மை மூலம் அதிக வருவாய் பெற்றது. நீர் ஆதாரங்களை நிர்வகிப்பதில் தனிக் கவனம் செலுத்தியது.

2.ஆறுகள் இல்லாத பகுதிகளில் குளம், கிணறு, கால்வாய் ஆகிய நீர்ப்பாசன வசதிகள் ஏற்படுத்தித் தரப்பட்டன.

3.வடி என்பது வடக்கு தெற்காக நீர் ஓடுவதையும், வாய்க்கால் என்பது கிழக்கு மேற்காக நீர் ஓடுவதையும் குறிக்கிறது.

4.வடி என்பது வடிகாலாக நீரை வெளியேற்றுவதையும், வாய்க்கால் என்பது நீரைக்கொண்டு வருவதையும் குறிக்கிறது.

5. ஒரு விளை நிலத்துக்கு வாய்க்கால் வழியே வரும் நீர் வடிக்குத் திருப்பப்பட்டு, மற்றொரு வாய்க்காலுக்குச் செல்லும்.

6.நில வருவாய் நிர்வாகத்துக்கு என 'புறவுவரித் திணைக்களம்' என்ற பெயரில் தனியாக ஒரு துறை இயங்கியது.

**48. பின்வருவன குறித்து சிறு குறிப்பு :**

**1. ஊரார்:**

1.ஊரார் என்போர் வேளாண் குடியிருப்புகள் நிறைந்த ஊரின் பிரதிநிதிகளாகச் செயல்பட்ட நிலஉடைமையாளர்கள் ஆவர்.

2.ஊரார் பணிகள் - கோயில்களை நிர்வகிப்பது, குளங்களைப் பராமரிப்பது, வரி வசூலிப்பது, சட்ட ஒழுங்கைப் பாதுகாப்பது.

**2. சபையார்:**

1.சபையார் என்பது பிராமணர்களின் பிரம்மதேயக் குடியிருப்புகள், கோயில்கள், கோயில் சொத்துக்களை நிர்வகிக்கும் சபை ஆகும்.

2.சபையார் பணிகள் - அரசின் நிர்வாகம், வருவாய், நீதித்துறை சார்ந்த பணிகள். பிரம்மதேயக் குடியிருப்புகளை பராமரிப்பது.

**3. நகரத்தார்:**

1.நகரத்தார் என்போர் வணிகர்கள் மற்றும் கைவினைஞர்களின் குடியிருப்புகள் நிறைந்த நகரத்தின் பிரதிநிதிகள் ஆவர்.

2.நகரத்தார் பணிகள் - நகரத்தில் வாழ்ந்த வணிகர்கள், மக்கள் கோயில்களுக்கு வழங்கிய நிதியுதவியை வசூலித்தனர்.

**4. நாட்டார்:**

1.நாட்டார் என்பது வேளாண் வகை கிராமங்களில் நிலம் வைத்திருந்தவர்களின் மன்றம் ஆகும். பல ஊர்களின் தொகுப்பு நாடு.

2.நாட்டார் பணிகள் - அரசின் நிர்வாகம், வருவாய், நீதித்துறை சார்ந்த பணிகள். வரி சேகரித்துக் கொடுக்கும் பொறுப்பு.

**49. சோழர் காலக் கட்டுமானக் கலையின் சிறப்புகள் :**

1.இராஜராஜ சோழன், கட்டிய தஞ்சை பெரிய கோயில் கருவறை மீதுள்ள விமானம் 80 டன் எடை கொண்ட ஒரே கல்லால் ஆனது.

2.தஞ்சை பெரிய கோயில் கருவறையின் வெளிச்சுவர்களில் இலட்சுமி, விஷ்ணு, அர்த்தநாரீசுவரர், பிச்சாடனர் சிலைகள் உள்ளன.

3.முதலாம் இராஜேந்திர சோழன், கட்டிய கங்கை கொண்ட சோழபுரம் கோயில் வட இந்திய வெற்றியின் நினைவாக எழுப்பியது.

4.கங்கை கொண்ட சோழபுரம் கோயில் கருவறையின் வெளிச்சுவர்களில் துர்கா, விஷ்ணு, அர்த்தநாரீசுவரர், சூரியன் சிலைகள் உள்ளன.

5.இரண்டாம் இராஜராஜ சோழன் கட்டிய தாராசுரம் கோயில் சோழர் கட்டுமானக் கலைக்கு மற்றொரு சிறந்த உதாரணம்.

6.தாராசுரம் கோயில் கருவறைச் சுவரின் தளத்தில் பெரிய புராண நிகழ்வுகள் சிற்பங்களாக வடிக்கப்பட்டு உள்ளன.

**50. சோழர்ஆட்சியில் நிலவிய சமூக, சமய, பண்பாட்டுச் சூழல்கள் :**

1.சோழர்களின் சமூகம் பெருமளவு வேளாண்மையைச் சார்ந்து இருந்தது. நிலம்

வைத்திருப்பது சமூக மதிப்பையும் நிர்ணயித்தது.

2.பிரம்மதேய குடியிருப்புகளில் இருந்த உயர்தகுதி நில உடமையாளர்களுக்கு நில வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டது.

3.சமூகப் படிநிலையின் அடுத்த இடத்தில் வேளாண் வகை கிராமங்களின் நில உடமையாளர்களும் உழுகுடிகளும் இருந்தனர்.

4.சோழர்கள் காலத்தில் பல புதிய கோயில்கள் கட்டப்பட்டன. சிற்பக் கலையும் ஓவியக் கலையும் நன்கு வளர்ச்சி பெற்றது.

5.சோழர்களின் முதன்மைக் கடவுள் சிவன். தீவிர சைவ சமய ஆதரவாளராக இருந்ததால் வைணவம் ஒதுக்கப்பட்டது.

6.கோயில்களில் தினமும் திருமுறைகளை ஓதவும், பாடல்கள் பாடவும், இசை, நடனம், நாடகம் அரங்கேறவும் வழிசெய்தனர்.

**51. கோயில் - ஒரு சமூக நிறுவனம் :**

1.சோழர் காலத்தில் கோயில்கள் சமூகத் திருவிழாக்கள் நடக்கும் ஒரு களமாக மாறி சமூக நிறுவனங்களாக இயங்கின.

2.சோழர் காலச் சமூகம், அரசியல், பொருளாதார, பண்பாட்டு நடவடிக்கைகளின் மையங்களாகக் கோயில்கள் விளங்கின.

3.கோயில் அதிகாரிகள் கல்வி, இசை, ஓவியம், நடனம், நாடகம், கலைகள் ஆகியவற்றின் வளர்ச்சியை ஊக்குவித்தனர்.

4.தஞ்சாவூர் கோயிலில் சித்திரைத் திருவிழா, கார்த்திகை விழா, ஐப்பசி விழா ஆகியவற்றை கொண்டாடி மகிழ்ந்தனர்.

5.வழிபாட்டுப் பாடல்கள் வாய்மொழிக் கல்வியை வளர்த்தன. குடக் கூத்து, சாக்கைக் கூத்து போன்ற மரபு நடனங்கள் ஆடினர்.

6.கோயில்கள் வங்கிகள் போன்று இயங்கின. கடன், நன்கொடைகள் வழங்குதல் மற்றும் பெறுதல் ஆகிய செயல்களில் ஈடுபட்டன.

**52. பாண்டியர் ஆட்சியில் வணிகத்திலும் வர்த்தகத்திலும் ஏற்பட்ட வளர்ச்சி :**

1. பாண்டியர் ஆட்சியில் நடைபெற்ற வணிகம் பற்றி வெளிநாட்டுப் பயணிகளான மார்க்கோபோலோ, வாசாஃப் குறிப்பிட்டுள்ளனர்.

2.அரபு வணிகர்களுக்கு ஆதரவாக துறைமுகக் கட்டணங்கள் மற்றும் சுங்க வரியில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டன.

3. நானாதேவி, திசைஆயிரத்து ஐநூற்றுவர், ஐநூற்றுவர், மணிக்கிராமத்தார் ஆகிய வணிகக் குழுக்கள் வணிகத்தில் ஈடுபட்டன.

4. மிளகு, முத்து, விலை உயர்ந்த கற்கள், குதிரைகள், யானைகள், பறவைகள் ஆகியவற்றை வணிகத்தில் ஈடுபடுத்தினர்.

5.பாண்டிய அரசர்கள் குதிரைகள் மீது அதிகமாக முதலீடு செய்தனர். அவர்களது முக்கிய துறைமுக நகரம் காயல்பட்டினம்.

6.வணிகத்தில் பரிமாற்றத்துக்கான ஊடகமாக காசு, பழங்காசு, கனம், கழஞ்சு, பொன் ஆகிய தங்க நாணயங்கள் இருந்தன.

**53. பாசனத்தை மேம்படுத்த பாண்டியர்கள் எடுத்த நடவடிக்கைகள் :**

1. பாண்டியர்கள் அதிக அளவு பாசன வளங்களை உருவாக்கி அதற்கு அரசக் குடும்பத்தினர் பெயர்களை வைத்தனர். உதாரணம் - வாசுதேவப் பேரேரி, வீரபாண்டியப் பேரேரி, ஸ்ரீவல்லபப் பேரேரி, பராக்கிரமப் பாண்டியப் பேரேரி போன்றவை.

2.திருமால் ஏரி, மாறன் ஏரி, கலியன் ஏரி, காடன் ஏரி என்றும் பெயரிட்டனர். இராமநாதபுரத்தில் பல ஏரிகள் வெட்டப்பட்டன.

3.கரைகளின் உட்பகுதியை வலுவூட்ட கல் அடுக்குகளைப் பயன்படுத்தியது.

பாண்டியர்களின் பாசனத் தொழில்நுட்பம் ஆகும்.

4.வைகை, தாமிரபரணி ஆகிய ஆறுகளின் இரு கரைகளிலும் கால்வாய்கள் வெட்டப்பட்டன. மதகுகள் நிறுவப்பட்டன.

5.திருவண்ணாமலை கோயில் நிலங்கள் பாசன வசதி பெற, பெண்ணை ஆற்றில் வாய்க்கால் அமைத்துத் தந்துள்ளனர்.

**54. சோழர், பாண்டியர் காலக் கட்டடக் கலையின் ஒற்றுமை, வேற்றுமைகள் :**

**சோழர் காலக் கட்டடக் கலை**

1.சோழப் பேரரசர்கள் தஞ்சை பெரிய கோயில், கங்கை கொண்ட சோழபுரம் கோயில், தாராசுரம் கோயில் போன்ற கட்டுமானக் கோயில்களைக் கட்டினர்.

2.சோழர்களின் கோயில்கள் பெரிய அளவில் மிகவும் பிரமாண்டமானதாக கட்டப்பட்டது. சோழர்கள் சைவர்களாக இருந்ததால், முதன்மைக் கடவுளான சிவன் சிலை பல்வேறு வடிவங்களில் வடிக்கப்பட்டு உள்ளன.

3.சோழப் பேரரசர்கள் புதிதாக பல கோயில்களைக் கட்டினர். அதேசமயம் மண்டபங்கள் கட்டுவது, பிரகார வீதிகள் அமைப்பது, புதிய கோபுரங்கள் எழுப்புவது போன்ற விரிவாக்கப்பணிகளில் ஈடுபட்டனர்.

4.சோழர்கள் சமய சகிப்புத் தன்மையுடன் கொண்டிருந்தனர். இராஜராஜ சோழன் காலத்தில் நாகப்பட்டினத்தில் பௌத்த மடாலயம் கட்டப்பட்டது.

**பாண்டியர் காலக் கட்டடக் கலை**

1.தொடக்க காலப் பாண்டிய அரசர்கள் கல்லறைக் கோயில்கள், குடைவரைக் கோயில்கள், கட்டுமானக் கோயில்கள் என பல்வேறு மாதிரிகளில் கட்டினர்.

2.பாண்டியர்களின் கோயில்கள் மிகவும் எளிமையாக சிறியதாக கட்டப்பட்டது. சிவன், விஷ்ணு, பிரம்மன், கணேசன்,சுப்பிரமணியர், சூரியன், கொற்றவை,போன்ற கடவுள்களின் சிலைகள் வடிக்கப்பட்டு உள்ளன.

3.பிற்காலப் பாண்டியர்கள் புதிதாக கோயில்களை கட்டவில்லை. மாறாக, மண்டபங்கள் கட்டுவது, பிரகார வீதிகள் அமைப்பது, புதிய கோபுரங்கள் எழுப்புவது போன்ற விரிவாக்கப்பணிகளில் ஈடுபட்டனர்.

4.தொடக்க காலப் பாண்டியர்கள் சமணசமயத்தை ஆதரித்தனர். ஆனைமலை கழுகுமலை ஆகிய இடங்களில் சமணகுகைக் கோயில்கள் கட்டப்பட்டது.

**55. விஜய நகரப் பேரரசின் சமூக மற்றும் பொருளாதார நிலையை விவரி**

1. ஆளும் வர்க்கத்தினர் செல்வச் செழிப்புடனும் மக்கள் வறுமையிலும் இருந்தனர்.

2. அடிமை முறை நிலவியது.

3. வரி வருமானமே முக்கிய வருவாய். வரிகளை பணமாக செலுத்தினர்.

4. நாயக்குகள் நெசவு போன்ற கைவினைத் தொழில் வளர வரிச் சலுகை வழங்கினர்.

5. சமூகத்தில் கைவினைஞர்கள், நெசவுத் தொழில் செய்வோர், உலோக வேலை செய்வோர் கட்டட கலைஞர்கள் முக்கியத்துவம் பெற்றனர்.

6. வணிக மையங்கள், நெசவு மையங்கள் உருவாகின.

7. ஜவுளி முக்கிய ஏற்றுமதியாகும்.

**56. விஜய நகர ஆட்சியாளர்களின் ஆட்சி முறை பற்றி விவரி**

1. அரசரே அனைத்து அதிகாரங்களையும் பெற்றவராவார்.
2. முதலமைச்சர் மகாபிரதாணி என்றழைக்கப்பட்டார்.

3. நாடு ராஜ்யமாக பிரிக்கப்பட்டது. பிரதானியின் கட்டுப்பாட்டில் இருந்தது. கணக்கர், இராணுவ அதிகாரிகள் பிரதானிக்கு உதவினர்.

4. ராஜ்யம் சீமை, ஸ்தலம், கம்பனா வாக பிரிக்கப்பட்டது.

5. கிராமம் மிகச் சிறிய அலகாகும்

6. தமிழகத்தில் சந்திரகிரி, படைவீடு வலுத்தம்பட்டு, திருச்சிராப்பள்ளி, திருவாவூர் ஆகிய ஐந்து ராஜ்யங்கள் இருந்தன.

7. நாயக்முறை அறிமுகமான போது ராஜ்யங்கள் முக்கியத்துவம் இழந்தன. இத்துடன் 3 மதிப்பெண் வினாவில் (வினா எண் 2) உள்ள நாயக் முறைக்கான பதிலை சேர்த்து எழுதவும்.

**57. முதலாம் முகமது ஆட்சியின் கீழ் பாமினி அரசு பற்றிக் குறிப்பு வரைக.**

1. பாமன் ஷாவிற்கு பின் ஆட்சிக்கு வந்த பாமினி அரசர்.
2. சிறந்த அரசு முறை நிர்வாகத்தை நடத்தினார்.
3. மராட்டியர்களுக்கு முன்னுதாரணமாக திகழ்ந்தார்.
4. எட்டு அமைச்சர்கள் கொண்ட குழுவை ஏற்படுத்தினார்
5. வழிப்பறி கொள்ளையர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுத்தார்.
6. நிறுவன மற்றும் புவியியல் ரீதியாக அரசை ஒருங்கிணைத்தார்.
7. குல்பர்காவில் இரு மசூதிகளை கட்டினார்.

**58. முகமது கவானின் ஆட்சி முறை மற்றும் ராணுவ நிர்வாகம் பற்றி விவரி**

1. பாமினி அரசர் மூன்றாம் முகமதுவின் அமைச்சர்.
2. பீடாரில் ஒரு மதரசாவை நிறுவினார். அதில் ஒரு நூலகத்தையும் நிறுவினார்.
3. பாரசீக வல்லுநர்களின் உதவியுடன் வெடிமருந்தை பயன்படுத்தினார்.
4. நாட்டை எட்டு மாகாணங்களாக பிரித்தார். ஆளுநர்களை நியமித்தார்.
5. ஆளுநர்களின் ராணுவ அதிகாரங்களை குறைத்தார். ஒருவருக்கு ஒரு கோட்டையே அனுமதிக்கப்பட்டது.
6. மற்ற கோட்டைகள் சுல்தானின் நேரடி கட்டுப்பாட்டில் கொண்டு வந்தார்.
7. மாகாண தலைவர்களின் அதிகாரங்களை குறைத்தார்.

**59. சூபியிஸத்தின் தாக்கம் பற்றி விவரி**

1. சூபியிஸம் சமூக அரசியல் பண்பாட்டுத் தளங்களில் தாக்கத்தை ஏற்படுத்தியது.
2. மதச் சம்பிரதாயம், பழமைவாதத்தை எதிர்த்தது.
3. நகர் மற்றம் கிராமங்களில் பரவியது.
4. புதிய உலக ஒழுங்கை உருவாக்கியது.
5. அமைதியையும் மகிழ்ச்சியையும் நிலைநாட்ட பாடுபட்டது.
6. இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்கு வழிவகுத்தது.
7. இந்து-முஸ்லிம் இடையே சகோதரத்துவத்தையும் ஐக்கியத்தையும் எற்படுத்தியது.

**60. பக்தி இயக்கத்தின் சிறப்பியல்புகளை வரிசைப்படுத்துக**

1. ஒரு கடவுள் கொள்கை
2. பக்தி மூலம் முக்தி அடைய முடியும் எனும் கருத்தை முன் வைத்தனர்.
3. அர்பணிப்பே இறைவனின் அருளை பெற வழி என்றனர்.
4. குருவே வழிகாட்டி, ஆசிரியர் என்றனர்.
5. உலக சகோதரத்துவ கொள்கையை போதித்தனர்.

6. உருவ வழிபாட்டை விமர்சனம் செய்தனர். ஆழ்ந்த பக்தியுடன் பாடல்கள் பாடினர்.

7. சாதி முறையை விமர்சனம் செய்தனர். அனைத்து உயிரினங்களும் கடவுளின் குழந்தை என்றனர்.

**61. "வருவாய் நிர்வாகத்தில் ஷெர்ஷா அக்பரது முன்னோடி" - விளக்குக.**

1. நெகிழ்வுத் தன்மை கொண்ட வருவாய் முறையை பின்பற்றினார்.
2. நிலங்கள் அளக்கப்பட்டு வளத்திற்கு ஏற்றவாறு வரி நிர்ணயம் செய்யப்பட்டது.
3. சில பகுதிகளில் ஜாகீர்தாரி முறையும், ஜமீன் தாரி முறையும் செயல்பட்டன.
4. சில பகுதிகளில் விளைச்சலில் ஒரு குறிப்பிட்ட பங்கு வரியாக வசூலிக்கப்பட்டது.
5. வணிகத்தை ஊக்குவிப்பதற்க்காக வணிக வரிகளை எளிமைப்படுத்தினார். நுழைவு வரி, விற்பனை வரி மட்டுமே வசூலிக்கப்பட்டது.
6. வணிகர்கள் தங்க சராய் எனப்பட்ட சத்திரங்கள் அமைக்கப்பட்டன.
7. மிகவும் புகழப்படும் அக்பரின் நிதி நிர்வாக முறை பெருமளவில் ஷெர்ஷாவின் முறையினை அடித்தளமாக கொண்டதாகும்.

**62. அக்பரின் மதக்கொள்கை எவ்வாறு ஔரங்கசீப்பின் மதக்கொள்கையிலிருந்து மாறுபட்டிருந்தது?**

**அக்பர்**

1.ஓர் இணக்கமாக போக்கை மேற் கொண்டார்

2 .அக்பர் அனைவருக்கும் அமைதி என்னும் தத்துவத்தை பரப்புரை செய்தார். சம கால வரலாற்று அறிஞரான பதானி அக்பர் இஸ்லாமை புறக்கணித்தார் எனக் குற்றம் சாட்டினார்.

3. அக்பர் தன்னுடைய தத்துவத்தை விளக்க "தீன் இலாகி" யை தோற்றுவித்தார்.

4. அக்பர் மதச் சார்பற்ற அரசு உருவாக்குவதில் நம்பிக்கை கொண்டிருந்தார்.

5. சமய சகிப்பு தன்மையுடன் நடந்து கொண்டார். ஜசியா வரியை நீக்கினார்.

6. தனது இந்து மனைவியர் கோவிலுக்கு செல்வதை தடுக்கவில்லை

7. புதிய இந்து கோவில்கள் கட்டப்படுவதை எதிர்க்கவில்லை.

**ஔரங்கசீப்**

1.இணக்கமான போக்கை மேற்கொள்விலலை.

2. ஒரு உண்மையான முஸ்லிமாக நடந்து கொண்டார். அக்பரைப் போலல்லாமல் இஸ்லாத்தை முழுமையாக கடைபிடித்தார்.

3. புதிய மதப்பிரிவை ஆரம்பிக்கவில்லை. மாறாக இஸ்லாமை தீவரமாக பின்பற்றினார்.

4. மதச் சார்பற்ற கொள்கையில் நம்பிக்கையில்லை

5. ஷரியத் சட்டத்தில் நம்பிக்கை கொண்டிருந்தார். ஜசியா வரியை மீண்டும் விதித்தார்

6.கோவில்கள் தொடர்பான அவருடைய சட்டங்கள் மிகப் பழமையானவை

7. புதிய இந்து கோவில்கள் கட்டக்கூடாதென ஆணைகள் பிறப்பித்தார்.

**63. ஔரங்கசீப்பின் தக்காண கொள்கை எவ்வாறு முகலயப் பேரரசின் அழிவுக்கு வழி வகுத்தது?**

1. தக்காண படையெடுப்புகள் முகாலய கருவூலத்தை காலி செய்தன
2. தக்காண விவகாரங்களில் ஔரங்கசீப் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டது.

3. ஏனைய பகுதிகளில் தோன்றிய எதிர்ப்புகளை எதிர் கொள்ள விடாமல் அவரை தடுத்தது.

4. தக்காண ஷியா முஸ்லிம்களிடம் கடுமையாக நடந்து கொண்டது.

5. ஷியா அரசுகளான பிஜப்பூர், கோல்கொண்டாவை பகைத்துக் கொண்டது.

6. மராட்டியருடன் பகைத்து கொண்டு தனது நேரம் முழுவதையும் வீணடித்தார்.

7. தக்காண ஷியா அரசுகளை அழித்ததால் வளர்ந்து வந்த மராட்டியர்க்கு உதவியாக இருந்தது.

**64. முகலாயர் ஆட்சியில் பொருளாதாரம், வணிகம் பற்றி ஆராய்க.**

1. வேளாண்மையே பொருளாதாரத்தின் அடித்தளமாக இருந்தது.
2. வங்காளம் தலைமைப் பட்டு உற்பத்தி மையமாயிற்று.
3. நிலங்கள் அளக்கப்பட்டு வரிகள் அறிமுகம் செய்யப்பட்டது (தோடர்மால் அறிமுகம் செய்தது)
4. கர்கானா என்ற தொழிற்கூடங்கள் இருந்தன.
5. உண்டி எனப்பட்ட கடன் பத்திரங்கள் பயன்படுத்தப்பட்டன.
6. சராய்கள் என்ற ஓய்வு விடுதிகள் வணிகர்களின் பயணங்களை ஊக்குவித்தன.
7. சோழ மண்டலக் கடற்கரை பருத்தி துணி உற்பத்திக்கு புகழ் பெற்றிருந்தது.
8. ஏற்றுமதி செய்த பொருட்களுக்கு மாற்றாக தங்கத்தையும் வெள்ளியையும் இறக்குமதி செய்தனர்.

**65. முகலாயக் கட்டடக் கலையின் சிறப்பம்சங்கள்:**

**முகலாயர் கலையின் சிறப்பு:**

1. கூண்டு வடிவிலான குமிழ்களைக் கொண்ட கவிகை மாடங்கள்
2. கலங்கரை விளக்கம் போன்ற கோபுரங்கள்
3. நான்கு மூலைகளிலும் எழுப்பப்பட்டுள்ள ஸ்தூபி மாடங்கள்
4. படங்கள் வரையப்பட்டு பதிக்கப்பட்ட ஓடுகள்
5. ஷெர்ஷா காலத்தில் தில்லியில் புராணகிலா, பீகாரில் சசாரம் கல்லறைகள் மிகச் சிறப்பானவை.
6. அக்பர் காலத்திய ஹுமாயூனின் கல்லறை, ஆக்ரா கோட்டை, புலந்தர் வாசா சிறப்பானதாகும்.
7. ஜஹாங்கீர், நூர்ஜகானின் தந்தைக்கு எழுப்பிய கல்லறை.
8. ஷாஜகானின் தாஜ்மஹால் அவரின் புகழை உச்சத்திற்கு கொண்டு சென்றது.
9. டெல்லி செங்கோட்டை இவரது கட்டடக்கலை திறனை எடுத்துக் காட்டுகின்றன.
10. ஆக்ரா கோட்டையில் உள்ள மோதி மசூதி, தில்லியில் உள்ள ஜும்மா மசூதி மிகச் சிறப்பானதாகும்.

**66. சிவாஜியின் இராணுவ அமைப்பு அவரது வெற்றிக்கு எவ்வாறு வழி வகுத்தது?**

1. சிவாஜியிடம் நிலையான இராணுவம் இருந்தது.
2. மரபுவழி நியமனம், ஜாகீர் வழங்குவதை விரும்பவில்லை திறமையான இளைஞர்களை தேர்ந்தெடுத்தார்.
3. படை வீரர்களுக்கு வீடு, ஊதியம் வழங்கப்பட்டது.
4. நான்கு வகைப் படைகள் இருந்தது (காலட்படை, குதிரைப்படை, யானைப்படை, ஆயுதப்படை)
5. கொரில்லா போர் முறையுடன் பாரம்பரிய போர் முறையிலும் பயிற்சி.
6. காலாட்படை ரெஜிமெண்டுகள், பிரிகேடுகள் என பிரிக்கப்பட்டது.
7. குதிரைப்படையும் தலைமைத்தளபதியின் கீழ் நன்கு கட்டமைக்கப்பட்டிருந்தது.

**67. சிவாஜியின் நில வருவாய் முறையினைப் பேஷ்வாவின் நிலவருவாய் முறையோடு ஒப்பிடுக.**

**சிவாஜியின் வருவாய் நிர்வாகம்:**

1. சிவாஜியின் வருவாய் நிர்வாகம் நியாயமானதாகவும் உற்பத்தியாளர்களுக்கு சாதகமாகவும் அமைந்திருந்தது.
2. நிலம் அளவீடு செய்யப்பட்டு மதிப்பிடப்பட்டது. வரித்தொகை தெளிவாக நிர்ணயிக்கப்பட்டது.
3. பஞ்ச காலத்தில் அரசு உதவியது. விசாயிகளுக்கு கடன்கள் வழங்கப்பட்டன.

**பேஷ்வா வருவாய் நிர்வாகம்:**

1. நில வருவாய் முக்கிய வருவாயாகும்.
2. சிவாஜியின் ஆட்சியில் பின்பற்றப்பட்ட, விவசாய உற்பத்திப் பொருள்களைப் பகிர்ந்து கொள்ளும் நடைமுறையைப் பேஷ்வாக்கள் கைவிட்டனர்.
3. நில வரியை வசூலிக்க குத்தகை நடைமுறையை பின்பற்றினர்.
4. நிலத்தின் உற்பத்தித் திறன் சார்ந்து வரிகள் நிர்ணயம் செய்யப்பட்டன.

**68. முதலாம் பாஜிராவ் வாழ்க்கையையும் சாதனைகளையும் பற்றி விவாதிக்கவும்**

1. முதலாம் பாஜிராவின் தந்தை பாலாஜி விஷ்வநாத் ஆவார். அவர் தான் மராட்டியத்தின் முதல் பேஷ்வா.
2. தந்தைக்கு பின் அவரை மன்னர் சாஹு பேஷ்வாவாக நியமித்தார்.
3. முதலாம் பாஜிராவ் ஹைதராபாத் நிஜாம், மால்வா ஆளுநர், குஜராத் ஆளுநர் ஆகியோரை வெற்றி கொண்டு அரசை விரிவுபடுத்தினார்.
4. முகலாயரின் கட்டுப்பாட்டில் இருந்த பந்தல்கண்டை விடுவித்து அதன் ஆட்சியாளரிடமிருந்து மூன்றில் ஒரு பங்கை பெற்றார்.
5. பேஷ்வாவுக்கு அடிபணிய மறுத்த தலைமைத் தளபதி திரிம்பக்ராவ்வை தோற்கடித்து கொன்றார். தலைமை பதவியையும் தானே ஏற்றார்.
6. மன்னர் சாஹுவின் தலைமையை ஹோல்காபூரின் சாம்பாஜி ஏற்கும் படி செய்தார்.
7. கொங்கணக் கடற்கரையில் இருந்த போர்த்துகீஷியரை விரட்டி அவர்களிடமிருந்து தானே, சால்செட், பேசின் பகுதிகளை கைபற்றினார்.

**69. பேஷ்வாக்கள் ஆட்சியின் வருவாயினங்கள் பற்றி எழுதுக.**

1. நில வருவாய் தான் முக்கிய வருவாயாக இருந்தது.
2. காடுகளிலிருந்து வருவாய் கிடைத்தது.
3. சௌத் மற்றும் சர்தேஷ்முகி வரிகள்.
4. சுங்கம், கலால் வரி, வனப்பொருட்களின் விற்பனை.
5. வேறு வரிகள்: 1. நிலவரி, வீட்டு வரி,எடைகற்கள் அளவைகள் சோதிப்பதற்கான வருட கட்டணம், விதவை மறுமண வரி, கால்நடைகள் மீதான வரி, மேய்ச்சல் வரி, நதிக்கரையோர பூசணி விவசாயத்துக்கான வரி, குதிரை விற்பனை வரி, வரி செலுத்துபவரின் ஒரு வருட வருமானத்துக்கான வரி.
6. நீதி பரிபாலனமும் வருவாயை ஈட்டித் தந்தது (பணப்பத்திர வரி, அபராதம் முதலியன)
7. சொந்த பயன்பாட்டிற்காக இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் வரி.

70. நவீனக் கல்வி முறைக்கு இரண்டாம் சரபோஜியின் பங்கினை விளக்குக.

1. தஞ்சாவூரில் கிறிஸ்தவர் அல்லாத உள்ளூர் குழந்தைகளுக்காக நவீன பொதுப் பள்ளிகளை முதன் முதலாக தொடங்கினார்.
2. ஆதரவற்றவர்கள் மற்றம் ஏழை மாணவர்களுக்காக தஞ்சை மற்றம் இதர இடங்களில் இலவச தொடக்க மற்றும் உயர் கல்வி நிலையங்களை நிறுவி நிர்வகித்தார்.
3. நவீன கல்வி முறைக்காக "நவ வித்யா" என்ற முறையை மேற்படி பள்ளிகளில் அறிமுகம் செய்தார்.
4 நாயக்க மன்னர்களால் கட்டிய சரஸ்வதி மஹால் இரண்டாம் சரபோஜியால் செறிவூட்டப்பட்டது.
5. முக்தாம்பாள் அன்ன சத்திரத்தில் இரண்டு வகுப்பறைகளில் 15 ஆசிரியர் உதவி கொண்டு 464 மாணவர்களுக்கு காலையும் மாலையும் கல்வி கற்பிக்கப்பட்டது.
6. கந்தன்குடி கிறிஸ்தவ பள்ளிக்கு ஆதரவளித்தார்
7. தன்வந்தரி மஹால் மூலம் மனிதர், விலங்ககளுக்கான மூலிகை ஆராய்ச்சி நிலையத்தை நிறுவினார்.

71. இந்தியாவில் போர்த்துகீசியரின் வருகையினால் ஏற்பட்ட தாக்கத்தை விவரி

1. ஐரோப்பியர் இந்திய அரசர்களை முதன் முதலில் வென்றது
2. இந்திய அரசர்களினின் ஒற்றுமையின்மை வெளிப்பட்டது.
3. போர்களில் வெடிமருந்தும், பீரங்கிப் படையும் முக்கிய பங்கு வகிக்க தொடங்கின.
4. அராபியரின் வணிக முற்றுரிமை கட்டுப்படுத்தப்பட்டது.
5. ஐரோப்பியர் உடனான திருமண உறவு மூலம் புதிய யூரேசிய இனக்குழு உருவானது.
6. பின்நாளில் இவ் இனக்குழு ஆசிய, ஆப்பிரிக்க காலனிகளுக்கு சென்றது.
7. போர்துக்கீசிய சமய பரப்புக்குழுவினர் வந்தனர். கடற்கரையோர பரதவகுல மக்களை கிறஸ்தவராக மதம் மாற்றினர். உரை நடை, அச்சு பதிப்பில் தடம் பதித்தனர்.

72. ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி மதராஸ், பம்பாய், கல்கத்தா ஆகிய இடங்களில் வணிகம் செய்யும் உரிமையை எவ்வாறு நிலை நாட்டியது?

1. 1639ல் சந்திரகிரியின் அரசர் சென்னையை ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனிக்கு கொடுத்து அதில் கோட்டை கட்ட அனுமதி வழங்கினார். அங்கு ஆங்கிலேயர் புனித ஜார்ஜ் கோட்டையை கட்டி வணிகம் செய்தனர்.
2. 1668 ல் இரண்டாம் சார்லஸ் மன்னர் தனக்கு கிடைத்த திருமணப் பரிசான பம்பாய் தீவை ஆங்கில கிழக்கிந்தியக் கம்பெனிக்கு வழங்கினார். இது பம்பாயில் ஆங்கிலேயர் வணிகம் செய்ய உரிமையை பெற்றுத்தந்தது.
3. ஷாஜகானின் மகனும் வங்க ஆளுநருமான ஷா சுஜாவிடம் கம்பெனி வணிக உரிமை பெற்றனர்.அது முறையாக உறுதி செய்யப்படவில்லை.
4. பின்னர் 1608 ல் முறையாக வணிக உரிமை பெற்றனர்.
5. அவ்வுரிமையை எதிர்த்த உள்ளூர் ஆட்சியாளர்களை எதிர்ப்பை சரிசெய்து 1690ல் கம்பெனி சுதநுதியில் முதல் குடியேற்றத்தை நிறுவினர்.
6. இவ்விடமே பிற்காலத்தில் கல்கத்தாவாக மாறியது.
7. 1696 ல் அங்கு புனித வில்லியம் கோட்டையை கட்டினர்.

73. கர்நாடக பகுதிகளில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் இடையே நடைபெற்ற போர்களுக்கான காரணங்கள் யாவை?

1. இந்தியாவில் ஆதிக்கம் செலுத்துவதில் ஏற்பட்ட போட்டி

2. ஐரோப்பாவில் நடைபெற்ற ஆஸ்திரிய வாரிசுரிமை போர் இங்கு எதிரொலித்தது.

3. ஆற்காடு, ஹைதராபாத்தில் ஏற்பட்ட அரியணை வாரிசுரிமை பிரச்சினை.

4. ஐரோப்பாவில் நடைபெற்ற எழாண்டுப் போரின் தாக்கம்

5. பிரான்சின் துய்ப்ளே பிரான்சின் ஆதிக்கத்தை இந்தியாவில் நிலை நாட்ட விரும்பினார்.

6. கிளைவ் போன்ற ஆங்கிலயர்கள் ஆங்கில ஆதிக்கத்தை இந்தியாவில் நிலை நாட்ட விரும்பியது.

**74. வங்காளத்தின் உண்மையான ஆட்சியாளராக ஆங்கிலேயர் எவ்வாறு எப்பொழுது மாறினர்?**

1. பிளாசிப் போர் வணிகக் குழுவை வங்காளத்தின் இறையாண்மை கொண்ட அரசியல் சக்தியாக்கியது.

2. வங்காளத்திலிருந்து தப்பியயோடிய மீர்காசிம், முகலாய அரசர் இரண்டாம் ஷா ஆலம், அவத்தின் நவாப் சிராஜ் உத் தௌலா ஆகியோர் ஆங்கிலேயருக்கு எதிராக கூட்டணி அமைத்தனர்.

3. 1764 ல் பச்சார் என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் ஆங்கிலேயர் வெற்றி பெற்றனர்.

4. அலகாபாத் உடன்படிக்கை மூலம் போர் முடிவுக்கு வந்தது.

5. இவ் உடன்படிக்கையின் மூலம் வணிகக்குழு வங்காளம், பீகார், ஒரிசா ஆகிய பகுதிகளின் நில வரி வசூலிக்கும் (திவானி) உரிமையைப் பெற்றது.

6. மேலும் வங்காளத்திலிருந்த பர்த்தவான், மிட்னாபூர், சிட்டகாங் ஆகிய மூன்று மாவட்டங்களுடன் கல்கத்தாவின் மீதான இறையாண்மையையும் பெற்றது.

7. இவ்வாறாக ஆங்கிலேயர் வங்காளத்தின் உண்மையான ஆட்சியாளராக மாறினர்.

**75. இந்தியாவில் துய்ப்ளேவின் வாழக்கை மற்றும் சாதனைகள் பற்றிச் சுருக்கக்கூறுக.**

1. இந்திய பிரெஞ்சுப் பகுதியின் ஆளுநர்.

2. பிரெஞ்சு ஆதிக்கத்தை இந்தியாவில் நிலைநாட்ட முயற்சி மேற்கொண்டார்.

3. முதல் இரண்டு கர்நாடக போரில் ஈடுபட்டு பிரான்சின் பெறுமையை நிலைநாட்டினார்.

4. ஆங்கில கடற்படையை தோற்கடித்தது. சென்னையை கைப்பற்றியது.

5. ஆங்கிலேயர் புதுச்சேரியை தாக்கிய போது அதை பாதுகாத்தது.

6. ஹைதராபாத்தில் முசாபர்ஜங்கையும், கர்நாடகத்தில் சந்தாசாகிப்பையும் அரியணை ஏற்றினார்.

7. தமது பதவிக்காலம் வரை ஆங்கிலேயரின் செல்வாக்கு பரவுவதை தடுத்தார்.

**76. வெல்லெஸ்லி அறிமுகப்படுத்திய துணைப் படைத் திட்டத்தினைப் பற்றி விவரி.**

1. துணைப் படைத்திட்டத்தினை ஏற்கும் இந்திய ஆட்சியாளர் தனது சொந்தப் படைகளை விலக்க வேண்டும்.

2. பிரிட்டிஷ் படைகளை ஏற்பதோடு ஆங்கில அதிகாரி ஒருவரை ஸ்தானிகராக **(Resident)** ஏற்கவேண்டும்.

3. பிரிட்டிஷ் படைகளுக்கான பராமரிப்புச் செலவை ஏற்க வேண்டும். அது முடியாத போது மாகாணத்தின் ஒரு பகுதியை பிரிட்டிஷார் வசம் ஒப்படைக்க வேண்டும்.

4. துணைப் படைத் திட்டத்தினை எற்ற அரசர் பிற ஐரோப்பிய நாடுகளுடனான தொடர்பைத் துண்டிக்க வேண்டும். பிரெஞ்சு நிர்வாகத்தோடு தொடர்பு இருக்கக் கூடாது.

5. பிற இந்திய அரசுகளோடு கம்பெனியின் அனுமதி இல்லாமல்

பேச்சுவார்த்தைகளில் ஈடுபடக்கூடாது.

6. ஆங்கிலேயர் அனுமதியில்லாமல் மற்ற ஐரோப்பியரை பணியில் அமர்த்தக் கூடாது.

7. எந்த அரசும் பிற அரசுகளின் உள்நாட்டு பிரச்சினைகளில் தலையிடக்கூடாது.

8. துணைப் படைத்திட்டத்தினை ஏற்ற அரசுகள் தங்கள் இறையாண்மையை இழந்து அரசியல் மற்றும் இராணுவ விவகாரங்களில் கம்பெனியை சார்ந்திருக்கும் நிலைக்கு தள்ளப்பட்டது.

**77. ஆங்கிலேய கிழக்கிந்திய நிறுவனத்தின் கீழ் கல்வி முறை எவ்வாறு வளர்ச்சி பெற்றது?**

1. வாரன்ஹேஸ்டிங்ஸ் மூஸ்லிம்களுக்காக ஒரு மதரசாவை நிறுவினார்.
2. காரன் வாலிஸ் வாரனாசியில் ஒரு சமஸ்கிருத கல்லூரியை நிறுவினார்.
3. ஹேஸ்டிங்ஸ் கிறிஸ்தவ சமயபரப்பாளர் மூலமாக தாய்மொழிக் கல்வியை பரப்பினார்.
4. கல்கத்தா இந்துக் கல்லூரிக்கு ஹேஸ்டிங்ஸ் புரவலராக இருந்தார்.
5. கல்கத்தா, பம்பாயில் மருத்துவக் கல்லூரியும், ரூர்க்கில் பொறியியல் கல்லூரியும் தொடங்கப்பட்டது.
6. 1835 ல் மெக்காலே ஆங்கில வழிக் கல்வியை பரிந்துரைத்ததால் ஆங்கிலம் ஆட்சி மொழியாகவும் பயிற்று மொழியாகவும் அரசு அறிவித்தது.
7. இந்தியாவின் அறிவுப் பட்டயமான சார்லஸ் உட் கல்வி அறிக்கை ஆரம்பகல்வி, உயர்கல்வி, கல்லூரி படிப்பில் தடம் பதித்தது.

**78. 1865 ம் ஆண்டு இந்திய வனச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட சூழ்நிலைகளை விவரி. அதன் விளைவுகள் யாவை?**

1. பிகாரில் "ஜங்கில் மஹல்" காடு அழிக்கப்பட்ட சமயம்.
2. வேளாண்மைக்காக காடுகள் அழிக்கப்பட்டது
3. காபி தோட்டம் விளைவிக்க மற்றும் இரயில் பாதைக்கான மரப்பலகைகளுக்காகவும் காடுகள் அழிக்கப்பட்டன.

3. எனவே 1865ல் இந்திய வனச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

4. இச்சட்டம் காட்டு வளங்களை பூர்வீக குடி மக்கள் பயன்படுத்த தடை விதித்தது.

5. இதனால் பூர்வீக குடிகள் கலகத்தில் ஈடுபட்டனர்.

6. இச்சட்டங்கள் இன்றளவும் மக்கள் மனதில் அச்சத்தை ஏற்படுத்திக் கொண்டு இருக்கிறது.

**79. தென் தமிழகத்தில் பாளையக்காரர் அமைப்பு முறை பற்றி விவரிக்கவும்**

1. 1530 ல் முதன் முதலாக காகத்திய அரசில் பாளையக்காரர் முறை பின்பற்றப்பட்டது.
2. விஜய நரக பேரரசின் வீழ்ச்சிக்குப் பிறகு மதுரையில் நாகம நாயக்கரும் அவரது மகன் விஸ்வநாத நாயக்கரும் சுதந்திர மன்னர்களாயினர்.
3. அவர்கள் தங்கள் பகுதியை 72 பாளையங்களாக பிரித்து மதுரையில் ஒரு கோட்டை எழுப்பினர். அதில் 72 அரண்கள் அமைத்து ஒவ்வொன்றையும் ஒரு தலைமையின் கீழ் கொண்டுவந்தனர்.
4. பாளையக்காரர்கள் அரசருக்கு ஆண்டு தோறும் குறிப்பிட்ட தொகையை கப்பமாக செலுத்தினர்.போரின் போது படை வீரர்களை அனுப்பினர்.
5. நிதியாதரத்தை பெற தங்கள் பகுதிகளில் வரி வசூலித்தனர். சட்ட ஒழுங்கை பராமரித்தனர்.
6. இத்துடன் பல பட்டங்களுடன் கூடுதல் சிறப்பதிகாகரங்களும் பெற்றனர். நீதி

வழங்கும் அதிகாரமும் பெற்றனர்.

7. மேற்கு பகுதியில் மறவர் பாளையக்காரர்களும் கிழக்கில் தெலுங்கு பேசும் பாளையக்காரர்களும் இருந்தனர்.

**80. 1806 ம் ஆண்டின் வேலூர் புரட்சிக்கான காரணங்களையும் போக்கினையும் விவரிக்கவும்.**

1. அரியனையை இழந்த அரசர்கள், குருநில மன்னர்களின் சந்ததியினர், திப்பு மகன்களின் பிரதிநிதிகள், விசுவாசிகள் 1806 ல் வேலூரில் ஆங்கிலேயருக்கு எதிராக கிளர்ச்சி செய்ததே வேலூர் கலகம் ஆகும்.

2. தலைப்பாகையுடன் கூடிய சீருடை அறிமுகம், காதணிகளை அணிவதும் சமயச் சின்னங்களை இட்டுக் கொள்வதும் தடை செய்யப்பட்டது. புரட்சியில் வீரர்கள் பங்கு பெற காரணமாயிற்று.

3. ஜுலை 10ம் நாள் விடியற்காலை முதல் மற்றும் 23ம் படைப்பிரிவைச் சேர்ந்த இந்திய சிப்பாய்கள் கலகத்தை தோற்றவித்தனர். கர்னல் பான்கோர்ட் மற்றும் கர்னல் மி கேரஸ் ஆகியோர் கொல்லப்பட்டனர்.

4. ராணிப் பேட்டையில் இருந்து வந்த கில்லேஸ்பி புரட்சியை அடக்கினார்.

5. சிலர் தூக்கிலிடப்பட்டனர். சிலர் சுட்டுக்கொல்லப்பட்டனர். இக்கலகம் ரத்தக்களரியில் முடிவடைந்தது

6. திப்புவின் மகன் கல்கத்தாவிற்கு அனுப்பிவைக்கப்பட்டார். படைத்தளபதியும், சென்னை ஆளுநரும் திருப்பியழைக்கப்பட்டனர்.

**81. 1857 ஆண்டின் புரட்சிக்கான காரணங்களையும் விளைவுகளையும் விவரிக்கவும்.**

**காரணங்கள்:**

1. வாரிசு இழப்புக் கொள்கை

2. விவசாயம் செய்யாத நிலத்திற்கும் வரிவிதிப்பு

3. உயர் குடி முஸ்லிம்கள், கற்றறிந்தோர் அந்நியப்படல், மத உணர்வுகள் பாதிக்கப்படல்

4. கொழுப்பு தடவிய துப்பாக்கி தோட்டக்கள்

**விளைவுகள்:**

1. கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி முடிவுக்கு வந்தது.

2. இந்தியாவின் ஆட்சி அரசியின் நேரடிக் கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டது.

3. இந்திய தலைமை ஆளுநர் அரசப் பிரதிநிதி (வைஸ்ராய்) என அழைக்கப்பட்டார். (கானிங்பிரபு முதல் வைஸ்ராய்).

**82. இந்தியாவில் கிறித்தவ மதப்பரப்பாளர்கள் ஆற்றிய பணிகளை விளக்குக**

1. சமூகத்தில் பொருளாதார ரீதியாகத் தாழத்தப்பட்ட மக்களுக்காக பள்ளிகளை நிறுவினர்.

2. அதன் மூலம் அரசுப் பணிகளில் அவர்களைச் சேர்ந்து அவர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த முயன்றனர்

3. பொதுச் சாலைகளை பயன்படுத்துதல், த்தப்பட்டபெண்கள் மேலாடை அணிந்து கொள்வது போன்ற சமூகஉரிமைக்காகவும் போராடினர்.

4. அனாதைக் குழந்தைகளையும், ஆதரவற்றோரையும் தங்கள் நிறுவனங்களில் தங்க வைத்து அவர்களுக்கு கல்வி வழங்கினர்.

5. பஞ்சங்களின் போது (ஆங்கில அரசு உண்மையான அக்கரையுடன் நிவாரணப் பணிசெய்யாததால்) கிறிஸ்தவ சமய பரப்பு குழுவினர் தங்கும் இடவசதி, நிவாரண நடவடிக்கை மேற்கொண்டதால் மதம் மாற்றம் செய்ய வாய்ப்பு கிடைத்தது.

6. இவ்வாய்ப்பினால் திருநெல்வேலி மாவட்டத்தில் பல கிராமங்களையும்,

ஆந்திராவில் மாலா மடிகா சமூகங்களை சேர்ந்தோரையும் பெரும் எண்ணிக்கையில் மதம் மாற்றினர்.

7. இந்தியாவை 200 ஆண்டுகள் ஆட்சி செய்த ஆங்கிலேய அரசு கிராமப்புற ஏழை மக்களுக்கு கல்வி வழங்கும் பொறுப்பை தட்டிக் கழித்ததால் அப்பொறுப்பை (அவ் வாய்ப்பை) கிறிஸ்தவ சமய பரப்பு நிறுவனங்கள் தன்னார்வத்துடன் செய்தன.

8. மருத்துவமனைகள், மருந்தகங்களை நிறுவினர்.

**83. தமிழ் நாட்டில் நடந்த சமூக சீர்திருத்த இயக்கங்களை எடுத்துக் காட்டுக.**

1. சாமிதோபில் பிறந்த வைகுண்ட சாமிகளை பின்பற்றுவோர் "அய்யா வழி" வந்தவர்கள் என அழைக்கப்படுகின்றனர்.

2. இவருடைய "நிழல் தாங்கல்" வழிபாட்டுக் கூடங்கள் சாதி கட்டுபாடுகளை உடைத்தது.

3. இவரது சீடர்கள் தலைபாகை அணிந்தனர்.

4. 1851 ல் இவரது இறப்பிற்க்கு பின்னரும் தென் திருவாங்கூர் பகுதியில் கிறிஸ்தவ சமயம் பரவாமல் இருக்க ஐயா வழி பெரும் பங்காற்றிவருகிறது.

5. சிதம்பரத்தில் பிறந்த இராமலிங்க அடிகள் "சத்ய தர்ம சாலையை" வடலூரில் நிறுவினார்.

6. சாதி சமய வேறுபாடின்றி அனைவருக்கும் சமபந்தி விருந்தளித்தார்.

7. மக்களை கவர்ந்த, நெஞ்சை உருக்கும் இவரது பாடல்கள் "திருவருட்பா" என்ற பெயரில் இவரது சீடர்களால் வெளியிடப்பட்டுள்ளது.

---

## அனைவரும் தேர்வில் வெற்றி பெற வாழ்த்துக்கள்

**முனைவர். மு.புரோஸ்கான் M.Sc., M.A.,M.Ed.,M.Phil.,Ph.D.,**
**உதவித் தலைமையாசிரியர் & முதுகலை ஆசிரியர் (வரலாறு)**

MFK, KJEMHSS